2017 பெப்ரவரி 09
வியாழன்
விலை: 20/-

ஹிஜ்ரி 1438 ஜ.அவ்வல் பிறை 11 | பக்கங்கள் 12 | மணி 03 | ஒளி 024

QD / 154 / NEWS / 2017

NAVAMANI DAILY
නවමණී දිනපතා

# நவமணி

தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்



நவீன துருக்கி

07



என்னைக் கட்டாயப்படுத்தியே இராஜினாமா செய்ய வைத்தனர்

10



தரங்கவின் அதிரடி வீண் போராடித் தோற்றது இலங்கை

12



■ திருச்சி சாஹுல் ஹமீது

இலங்கை வந்துள்ள இந்திய முஸ்லிம் லீக்கின் ஸ்தாபகத் தலைவர் காயிதே மில்லத் முஹம்மத் இஸ்மாயில் சாஹிபின் மகனும் சென்னை காயிதே மில்லத் கல்லூரியின் செயலாளருமான எம். ஜி. தாவுத் மியாகான் நேற்று பாராளுமன்றத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நகர திட்டமிடல், நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சருமான ரவூப் ஹக்கீமைச் சந்தித்தார். இதன்போது தாவுத் மியாகான் தன் தந்தை பற்றிய இரு நூல்களை அமைச்சருக்கு கையளிப்பதைப் படத்தில் காணலாம்.

## மஹிந்த அரசு காலத்தில்

# 15 அரச நிறுவனங்களால் 11,000 கோடி ரூபா நஷ்டம்



■ அ. அருண் பிரசாந்த்

மஹிந்த அரசு காலத்தில் 15 அரச நிறுவனங்களினால் நாட்டுக்கு சுமார் 11 ஆயிரம் கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது என்று கோப் குழுவின் தலைவர் சுனில் ஹந்துன்நெத்தி நேற்று பாராளுமன்றில் தெரிவித்தார்.

2016 ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதியிலிருந்து ஆகஸ்ட் மாதம் 31 ஆம் திகதிவரையான காலப்பகுதியில் விசாரிக்கப்பட்ட 15 நிறுவனங்கள் தொடர்பிலான கோப் குழுவின் அறிக்கையை நேற்று பாராளுமன்றில் சமர்ப்பித்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சுனில் ஹந்துன்நெத்தி தலைமையிலான கோப் குழுவினால் பாராளுமன்றத்துக்கு

11 »»»»

## கட்சித் தலைவர்களது அங்கீகாரத்தின் பின்பே எல்லை நிர்ணய அறிக்கை வெளியிடப்படும்

### பிரதமர் தலைமையிலான கூட்டத்தில் தீர்மானம்

உள்ளூராட்சித் தேர்தல் திருத்தம் சட்ட அறிக்கை மற்றும் எல்லை நிர்ணயம் தொடர்பான அறிக்கை இரண்டையும் அமைச்சரவையும் கட்சித் தலைவர்களும் ஆராய்ந்த பின்பே அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுத் தெரிவித்தார்.

இதற்காக இரு அறிக்கைகளையும் பிரதமரின் அலுவலகத்திற்கு ஒப்படைக்குமாறு

11 »»»»

## அரிசியின் விலை குறைகிறது

## அதிக விலைக்கு விற்றால் கடுமையான நடவடிக்கை

### அமைச்சர் றிஷாத்



■ சுஐப். எம் காசிம்

உள்நாட்டு மற்றும் இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கான ஆகக் கூடிய சில்லறை விலையை பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபை நேற்று (8) நிர்ணயித்துள்ளது. இதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் நேற்று முதல் இந்த விலை அமுல்படுத்தப்படுவதாக

11 »»»»

## அதிபர்களின் கொடுப்பனவை அதிகரிக்க அரசு தீர்மானம்

■ அ. அருண் பிரசாந்த்

அதிபர்களுக்கு வழங்கப்படும் விசேட கொடுப்பனவுத் தொகையை அதிகரிக்கவுள்ளதாக அரசு நேற்று அறிவித்தது.

நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள அனைத்து பாடசாலைகளையும் வெற்றிகரமாக நிர்வகித்துவரும் அதிபர்கள் முகம்கொடுக்கும் துயரங்களைக் கருத்தில் கொண்டே கல்வி அமைச்சரான அகிலவிராஜ் காரியவசம்

11 »»»»

## எல்லை நிர்ணயம் தொடர்பாக பேச்சு





இன்னும் சில தினங்களில் வெளியிடப்படவிருக்கும் உள்ளூராட்சி மன்றங்களில் எல்லை நிர்ணயம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல்

11 »»»»

## சைடமை பாதுகாக்கும் முயற்சியில் அமைச்சர் ராஜித



### ஜீ.எம்.ஓ.ஏ. குற்றச் சாட்டு

■ ஆதில் அலி சப்ரி

நாட்டின் சுகாதாரத் துறையை கேள்விக்குறியாக்கும் சைடம் தொடர்பான சரியான முடிவெடுக்க அனைத்து அதிகாரத்தையும் தன்னகத்தே கொண்டுள்ள சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தொடர்ந்தும் சைடமை பாதுகாக்கும்

11 »»»»

## வெலிகடை சிறைச்சாலை துப்பாக்கிச் சூடு திட்டமிடப்பட்ட படுகொலை

### பாராளுமன்றில் பிரதமர்



■ அ. அருண் பிரசாந்த்

2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9 ஆம் திகதி வெலிகடை சிறைச்சாலையில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூடு சம்பவமானது திட்டமிடப்பட்ட படுகொலையாகும் என்று நேற்று பாராளுமன்றில் அறிவித்த நல்லாட்சி அரசு, இதுதொடர்பிலான அறிக்கை கிடைத்தவுடன் அடுத்தக்கட்ட நடவடிக்கையை எடுப்போம் என்று தெரிவித்தது.

11 »»»»

## அமைச்சரவையில் மாற்றம் இல்லை

### அமைச்சர் கிரியெல்ல



■ அ. அருண் பிரசாந்த்

நல்லாட்சி அமைச்சரவையில் மாற்றங்களை ஏற்படுத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினாலோ பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினாலோ எந்தவொரு தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை என்று உயர்க்கல்வி,

11 »»»»

## சட்டம் ஒழுங்கு குறித்த சார்க் செயலாளர்கள் மாநாடு கொழும்பில்

SAARC

■ அ. அருண் பிரசாந்த்

சட்டமும் ஒழுங்கும் குறித்த சார்க் செயலாளர்களின் 8 ஆவது கூட்டம் மற்றும் சார்க் குடியமர்வு அதிகாரிகளின் கூட்டத்தை இலங்கையில் நடத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் சட்டம்,

11 »»»»

## இவ்வருட இறுதிக்குள் இரு மருத்துவக் கல்லூரிகள்



■ அ. அருண் பிரசாந்த்

நாட்டிலுள்ள மாணவர்களின் நலன் கருதி இவ்வருட இறுதிக்குள் இரண்டு மருத்துவ கல்லூரிகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசு நேற்று தெரிவித்தது.

பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெற்ற அமைச்சரவையின் வாராந்த முடிவுகளை அறிவிக்கும்

11 »»»»

### தெற்காசிய பிராந்தியத்தில்

# வறுமையை ஒழிப்பதற்கு மிக நீண்ட தூரப் பயணம் தேவை

## பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாரச்சி

உலகின் வறுமையான பிராந்தியங்களில் ஒன்றானதும் ஒவ்வொரு வருடமும் வறுமைக் கோட்டிற்கு கீழான மக்கள் தொகை அதிகரித்த வண்ணமுள்ளதுமான தெற்காசிய பிராந்தியத்தின் வறுமையினை ஒமிப்பதற்கும் மிக நீண்ட தூரம் பய ணிக்க வேண்டியுள்ளது என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியராச்சி கூறினார்.

இலங்கையின் முன்னணி தேசிய பாதுகாப்பு சிந்தனைக் குழு (think tank), தேசிய பாதுகாப்பு கற்கைகளுக்கான இலங்கை நிறுவனம் (INĐĐĐk) மற்றும் இலங்கையில் அமைந்துள்ள பாகிஸ் தானிய உயர்ஸ்தானிகர் காரியாலயம் ஆகியவற்றின் முதலாவது கூட்டு முயற்சியாக சார்க், மற்றும் முன்னோக்கி செல்வதற்கான அதன் இடையூறுகள் என்ற தொனிப்பொருளின் கீழ் குழு கலந்துரையாடலொன்றுடன் கூடிய கருத்தரங்கு கொழும்பு கலதாரி ஹோட் டலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதில் பேசிய அவர் மேலும் கூறியதாவது,

நிலையான அபிவிருத்திக்கான இலக்குகளுக்கு முன்னுரிமை வழங்குதல், அபிவிருத்தித் திட்டங்களுக்கு அங்கத்துவ நாடுகள் ஒத்துழைப்பு நல்குவது மிகவும் அவசியம் எனவும், மேலும் தெற்காசியாவில் இலங்கை, இந்தியா. பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகியவை தீவிரவாதத்தால் அதிகமாக பாதிக்கப்பட்ட நாடுகள். எனவே தீவிர வாதத்தை ஒழிப்பதற்கு அங்கத்துவ நாடுகளிடையே பலமான உறவுகளை தொடர்வதும், வலுப்படுத்துவதும் மிக அவசியம் எனக் கூறினார். அத்துடன், சார்க் அமைப்பு முறைசாரா மற்றும் தனியார் துறைகளுடனான பரஸ்பர தொடர்புகளை உருவாக்குவதுடன், அதன் நோக்கங்களை விரிவாக்குதல் காலத்தின் அவசியம் என்றார்.

இருதரப்பு உறவுகளில் சார்க் பணயக் கைதியாக இருக்கக்கூடாது என சார்க் பட்டயத்தில் குறிப்பிடபட்டிருக்கின்ற போதிலும், இந்தியா மற்றும் பாகிஸ்தா னிற்கிடையில் நிலவுகின்ற இருதரப்பு பிரச்சினைகளால் இஸ்லாமாபாத்தில் இடம்பெறவிருந்த சார்க் மாநாடு முதலில் தாமதப்படுத்தப்பட்டு பின்னர் இரத்துச் செய்யப்பட்டமை துரதிஷ்டவசமானது என்று சார்க் அமைப்பின் முன்னாள் செயலாளர் நாயகம், தூதுவர் நிஹால் ரொட்ரிகோ குறிப்பிட்டார். மேலும் சார்க் அமைப்பு உலக அணுகுமுறைகளை உள் வாங்கிக்கொண்டு, வறுமை ஒழிப்பு, சுகாதார துறை மேம்பாடு மற்றும் பிராந்தி யத்தின் வணிகம் போன்ற பரவலான நடவடிக்கைகளில் கவனம்செலுத்துதல் மிகஅவசியம் என தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்பு கற்கைகளுக்கான இலங்கை நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் அலங்க அபேகுணசேகர பிராந்தியத்தின் தற்போதைய நிகழ்வுகளை தனது தொலைநோக்குப்பார்வையில் ஏலவே கணித்திருந்த அமரர் லக்ஷ்மன் கதிர்காமரின் கூற்றுடன் தனது உரை யினை ஆரம்பித்தமை விசேடம்சமாகும். தெற்காசியாவின் முதலாவது சாவலா னது உலகின் நிலையுறுதியற்ற போக் கினை கைப்பற்றியிருப்பது எனவும் வறுமைமையே பிராந்தியத்தின் மிகப் பெரிய பிரச்சினையாக காணப்படுகின்றது என்று கூறி இலங்கையின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 2017 னை வறுமை ஒழிப்பு ஆண்டாக பிரகடனப்படுத்தியுள்ளமையினையும் இதன்பொழுது நினைவுகூறினார்.

கலாநிதி. ஷையத் ரிபாத் ஹுசைன் இந்தியா, பாகிஸ்தான் இடையிலான இந்து நதி நீர் ஒப்பந்தம் குறித்து விவரிக் கையில், இரு நாடுகளுக்கிடையில் நிலவு கின்ற நதி நீர்விநியோக பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு 1960ல் இருதரப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தாலும் நீர் பிரச்சினை இன்றுவரை சர்ச்சைக்குரிய தாவிருக்கின்றது என தனது உரையில் தெரிவித்தார்.

தெற்காசிய பிராந்தியம் நீர் பற்றாக் குறையினால் பாதிக்கப்பட்டுள்ளது அத் துடன் இப்பிரச்சினை இந்தியா, பாகிஸ்தா னுக்கிடையில் எதிர்கால முரண்பாடுக ளுக்கு குறிப்பாக காஸ்மீர் தொடர்பான பிரச்சினைகள் மீதான அணுவாயுத யுத்தத் திற்கான காரணமாக அமைந்துவிடும் எனவும், சார்க் நாடுகள் திறமையான, சமத்துவமான நீர் பயன்பாட்டிற்கு அர்ப்பணிப்புடன் ஒத்துழைக்க வேண்டும் என்றார்.

இந்நிகழ்வில் சார்க் அமைப்பின் முன்னாள் செயலாளர் நாயகம் மற்றும் தூதுவர் நிஹால் ரொட்ரிகோ, தேசிய பாதுகாப்பு கற்கைகளுக்கான இலங்கை நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் அலங்க அபேகுணசேகர, கலாநிதி. ஷையத் ரிபாத் ஹிசைன், இக்ரம் சேஹல் மற்றும் பாகிஸ்தானிய உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓ) ஷையத் ஷகில் ஹுசைன் இலங்கை மற்றும் பாகிஸ்தா னின் உயர்பிரமுகர்கள் பலர் இக்குழு கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்விற்கு தூதரக பிரிவுகளிலிருந்து இராஜதந்திரிகள், சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள், கல்வியியலாளர்கள் மற்றும் ஏனைய பிரமுகர்கள், இலங்கை வாழ் பாகிஸ்தானிய சமூகம் மற்றும் ஊடகவியலாளர்கள் வருகைதந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மல்லிகைப்பூ பகுதி-பதுளை ரயில் பாதையில் தீ விபத்து



(ஹட்டன் க.கிஷாந்தன்)

அட்டன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொழும்பு பதுளை பிரதான ரயில் பாதை
யில் ஸ்ரெதன் பகுதியிலும் அட்டன் மல்லிகைப்பூ பகுதியிலும் நேற்றைய தினம் தீயினால் பல ஏக்கர் காடு எரிந்து நாசமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தற்போது இப்பிரதேசங்களில் நிலவி வரும் கடும் வெயில் மற்றும் கடும் காற்று வீசுவதனால் தீயினைக் கட்டுப் பாட்டுக்கு கொண்டு வருவதற்கு முடி யாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மகாவலி ஆற்றுக்கு நீர் வழங்கும் நீர் போசனை பிரதேசமான பகுதியில் இத்தீ ஏற்பட்டுள்ளதால் எதிர்காலத்தில் கடும்
நீர்ப்பற்றாக்குறை ஏற்படுவதற்கான வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப் படுகிறது. வேகமாக பரவி வரும் தீ காரணமாக அரியவகை மூலிகைகள் விலங்கினங்கள் நீரூற்றுக்கள் போன்றன அழிந்து போயிருக்கலாம் என அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது பல பிரதேசங்களுக்கு குடிநீர் தட்டுப்பாடுகள் ஏற்பட்டுள்ள நிலையில் நீர்ப்போசனை வனப்பிரதேச ங்களுக்கு தீ வைப்பதனால் மேலும் நீர்த்தட்டுப்பாடு உக்கிர நிலையை அடைய வாய்ப்பிருப்பதாகவும், ஆகவே இத்தீ வைப்பவர்களை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டுமெனவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

# மலையகத்தில் மீண்டும் வரட்சி

(மொஹொமட் ஆஷிக்)

மத்திய மலையகத்தில் மீண்டும் கடும் வரட்சி நிலவி வருகின்றது. முழு நாட்டையும் பாதித்திருந்த வரட்சியின் மத்தியில் ஒரு சில தினங்கள் மழை பெய்த போதும் தற்போது வரட்சி மேலும் அதிகரித்துள்ளது.

மலையகத்தில் நீர் தேக்க பிரதேசங்களி லும் கங்கைகள், ஆறுகள், கிணறுகள் உற்பட நீர் நிலைகளது நீர் பாரிய அள வில் வற்றியுள்ளதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். குழாய் நீர் விநியோகம் இல்லாத பிரதேசங்களில் வாழும் மக்கள் பாரிய குடி நீர் பிரச்சினையையும் எதிர் நோக்கியுள்ளனர்.

மலையகத்தில் ஏற்பட்டுள்ள இந் நிலை தொடர்பாக கண்டி மாவட்ட அனர்த்த முகாமத்துவ நிலையத்தின் பணிப்பாளர் இந்திக்க ரணவீரவிடம் வினவிய போது, மலையகததில் முக்கியமாக கண்டி மாவட்டத்தில் தற்போது வரட்சி மீண்டும் அதிகரித்துள்ள நிலையில் பல பிரதேச ங்களில் இருந்தும் குடி நீர் பிரச்சினையை எதிர் நோக்கியுள்ளதாகவும் எதிர்வரும் தினங்களில் பவுசர் மூலம் தேவைப்படும் பிரதேசங்களுக்கு குடி நீரை வழங்க தயாராக உள்ளதாகவும் தெரிவித்தார்.



கண்டி, மடவளை பஸார் ஹில்கன்றி பாடசாலையில் ஒழுங்குசெய்யப்பட்ட இலங்கையின் 69 வது சுதந்திர தின விழா கல்லூரி அதிபர் ஜாசில் தலைமையில் இடம் பெற்றது. இதில் வட்டதெனிய கதீஜத்துல் குப்ரா அரபுக்கலாசாலை மற்றும் இஸ்லாமிய்யா சர்வதேச பாடசாலை என்பவற்றின் பணிப்பாளர் சாஜஹான் உடையார், வத்தேகம பொலிஸ் நிலைய அதிகாரிகளும் கலந்துகொண்டனர். அதன்போது எடுக்கப்பட்ட படம். (படம் - வத்துகாமம் நிருபர்)



அமானாஹ் தீன் துனியா ஆஹிரா இன்டர்நெஷனல் மலேசியா அமைப்பின் நிறுவனர் மற்றும் தலைவரும், பிரபல தஹ்வாப் பணியாளருமான மௌலானா அஷ்செய்க் அப்துல் காதிர் அல்-காதிரி அல்-அஸ்ஹரி 'மௌலிதுர் ரஸுல் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். பேரா இந்திய முஸ்லிம் சங்கம் (பிரிம்) ஏற்பாடு செய்திருந்த மீலாதுன் நபி விழாவில், மலேசியாவின் பினாங்கு முஸ்லிம் லீக் தலைவர் டத்தோ ஹாஜா நஜ்முத்தீன் காதிரியினால் மேற்படி விருது வழங்கப்பட்டது. (இப்ஹாம் நவாஸ்)

## 75 வயதுக்கு மேற்பட்ட கதீப், முஅத்தின்களை கௌரவிக்க ஏற்பாடு

மஸ்ஜித் சேவையாளர்களின் வாழ்வாதார வசதிகள் கருதி அமைக்கப்பட்டு சேவை கள் பல செய்து வரும் ஸ்ரீலங்கா கதீப், முஅத்தின் நலன்புரி அமைப்பின் 20 ஆவது வருட தேசிய மகாநாட்டை தபால் சேவைகள் முஸ்லிம் விவிகார அமைச்சர் எம்.எச்.ஏ ஹலீம்தலைமையில் கண்டி மநகரில் நடத்துவதற்கு துரித எற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இம்மகாநாட்டில் மஸ்ஜித் சேவையில் இருந்து ஒய்வு பெற்றுள்ள 75 வயதுக்கு மேற்பட்ட கதீப் முஅத்தின் கௌரவிக்கப்பட இருப்பதாகவும் மாநாட்டை முன்னிட்டு அல்மிஹ்ராப் எனும் நினைவு மலர் ஒன்று வெளியிடப்படவுள்ளதாகவும் மலரில் சேர்த்துக்கொள்வதற்காக மஸ்ஜித் சேவையாளர்கள் எனும் தலைப்பில் கவிதைகள், கட்டுரைகள் எழுத்தாளர் உலமாப்பெருமக்கள் மற்றும் சிறப்பு கவிஞர்களிடம் இருந்து எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

கவிதை, கட்டுரைகளை எதிர்வரும் மார்ச் மாதம் 10 ஆம் திகதிக்கு. முன் பின்வரும் முகவரிக்கு அனுப்பி உதவுமாறு அமைப்பின் பொதுச்செயலாளர் நாகூர் ரஹீம் கேட்டுள்ளார். செயலாளர் ஸ்ரீலங்கா கதீப், முஅத்தின் நலன்புரி அமைப்பு இல-23 எல்பியன் வீதி தெமட்டகொட, கொழும்பு 09.

## வெலிகம நகரசபையின் முன்னாள் தலைவர் காலமானார்

(வெலிகம நிருபர்)

வெலிகம நகர சபையின் முன்னாள் தலைவர் தனசிரி லோரன்ஸ் நிஹேவா (ஐ.தே.க.) தனது 65 ஆவது வயதில் காலமானார்.

2002ம் ஆண்டு காலப்பகுதியில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஐ.தே. கட்சி சார்பில் போட்டியிட்டு, கூடுதலான விருப்பு வாக்குகளைப் பெற்று வெலிகம நகர சபைத் தலைவராகப் பதவி வகித்தார்.

சிறிது காலம் நோய்வாய்ப்பட்டிருந்த இவர் கடந்த (04.02) சனிக்கிழமை காலமானார். இவரது இறுதிக் கிரியைகள் நேற்று (08.02) மாலை பிரதேச அரசியல் வாதிகளின் பங்கேற்புடன் இடம்பெற்றது.

இவரது காலப் பகுதியில் நகரசபைக் குட்பட்ட பகுதிகளில் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன.

# முஸ்லிம்களுக்கு இந்த அரசு விஷப் பழங்களாக மாறியுள்ளது

## கூட்டு எதிர்க்கட்சி செய்தியாளர் மாநாட்டில் அஸ்வர்



அரசியல் அங்கம் வகிக்கும் முஸ்லிம் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த அரசின் செயற்பாடுகளை விமர்சிக்கிறார்கள். முஸ்லிம் சமுதாயத்திற்கு இந்த அரசு போதும் என்றாகிவிட்டது. அவர்கள் இது இனிப்பான பழம் என்று எட்டி எட்டிப் பறிக்க முற்பட்டார்கள். இப்போது இது விஷப்பழங்களாக மாறி விட்டதைக் காண்கிறோம் என முஸ்லிம் முற்போக்கு முன்னணியின் செயலதிபர் ஏ. எச்.எம். அஸ்வர் கூறினார்.

நேற்று காலை கொழும்பு கொட்டா வீதி டாக்டர் என்.எம். பெரேரா மையத்தில் நடைபெற்ற கூட்டு எதிர்க்கட்சிகளுடைய ஊடக சந்திப்பின் போது அஸ்வர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில்,

முழுநாட்டிலுள்ள முஸ்லிம்களுக்கும் ஏற்பட்டுள்ள பல இன்னல்களையும் அவர்களுடைய பிரச்சினைகளையும் எடுத்துரைப்பதற்காக வேண்டி முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை முஸ்லிம் கவுன்சி ல் சார்பில் சென்ற தூதுக்குழுவினர் எடுத்தியம்பிய போது, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க, 'தலைவர்கள் எல்லோரும் ஒன்றாக வாருங்கள் அப்போது இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும்' என்று கூறியுள்ளார். இது எப்படியென்றால், ஆமையைப் பித்து ஆமையிடம் நீ முடி வளர்த்திக்கிட்டு வா அதன் பிறகு உன் பிரச்சினைகளை என்னால் தீர்க்க முடியும். என்று கூறி பிரச்சி னையிலிருந்து அவர் கழன்று சென்று விட்டார். இது முஸ்லிம்கள் மத்தியில் மேற் கொள்ளப்பட்ட ஒரு தந்திரோபாய நடவடிக்கை என்பதை முஸ்லிம் முற்போக்கு முன்னணி எடுத்துரைக்க விரும்புகின்றது.

றிஷாத் பதியுதீன் நேற்று முன்தினம் பாராளுமன்ற குழுக் கூட்டத்தின் போது முல்லைத்தீவில் கேப்பாப்பிலவு குடியிருப்பு பகுதிகளில் முஸ்லிம்கள் எதிர்நோக்கும் காணிப் பிரச்சி னைகள் சம்பந்தமாக ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வந்த போது அதை எழுத்து மூலமாகத் தெரிவியுங்கள் என்று கூறி ஜனாதிபதி அந்த இடத்திலிருந்து பிரச்சினையைத் தீர்க்காமல் நழுவி இருக்கின்றார். முஸ்லிம் சமுதாயத்தை மேலும் மேலும் ஏமாற்றலாம் என்ற மாதிரியாகத்தான் இந்த நல்லாட்சியைச் சேர்ந்த தலைவர்களின் நடவடிக்கைகள் அமையப் பெற்றிருக்கின்றன. 98 சத வீதமான வாக்குகளை அளித்த அந்த முஸ்லிம் சமுதாயத்தின் சார்பாக அவர்களுடைய செயற்பாட்டை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். திக்குத் தெரியாத திசையை நோக்கி இந்த நாட்டு முஸ்லிம்கள் பயணியுங்கள் என்றுதான் இந்த நல்லாட்சியின் பிரதம அமைச்சரும் ஜனாதிபதியும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரும் கூட தங்களுடைய நடவடிக்கையின் மூலம் நாட்டுக்கு நிரூபித்துள்ளார்கள்.

எனவே இது ஒரு காலும் நடைபெறாது. ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கூட இந்த அரசங்கம் இனவாத போக்கில் செல்கின்றது என்று கண்டித்துள்ளார். இடம்பெயர்ந்து வந்த முஸ்லிம் மக்களுடைய பிரச்சி னையைத் தீர்ப்பதற்குக் கூட இந்த அரசாங்கம் கண்சாடையாகக் கூட உதவி செய்யவில்லை என்ற தோரணையில் றிஷாத் பதியுதீன் கூறியுள்ளார். அரசாங்கத்தைச் சேர்ந்த முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் இப்படித்தான் கூறுகின்றார்கள். எனவே முஸ்லிம் சமுதாயத்திற்கு இந்த அரசா ங்கம் போதும் போதும் என்றாகிவிட்டது. அவர்கள் இது இனிப்பான பழம் என்று எட்டி எட்டிப் பறிக்க முற்பட்டார்கள். அவை இப்போது விஷப் பழங்களாக மாறிவிட்டதைக் காண்கிறோம். இந்த நிலையில் எதிர் காலத்தில் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அமைய விருக்கின்ற அரசுக்கு இந்த அமைச்சிலுள்ள முஸ்லிம் அமைச்ச ர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் இப்பொழுதே வந்து சேருமாறு இந்த நாட்டு முஸ்லிம் சார்பாக நான் கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன்.

குருநாகல் மல்லவப்பிட்டியவில் நடந்த கூட்டத்தில் முன்னைய ஜனாதிபதி, சில பல தீங்கின் விளைவாக முஸ்லிம்கள் என்னிடம் இருந்து பிரிக்கப்பட்டார்கள் என்பதை வெளிப்படையாக கூறியிருக்கின்றார். எதிர்காலத்தில் மஹிந்த ராஜபக்ஷ அமைக்கவிருக்கின்ற, மக்கள் உண்மையாக விரும்பும் அரசாங்கத்தில் முஸ்லிம்களுடைய வகிபாகத்தையும் எடுத்தியம்புவதற்காக வேண்டி ரவூப் ஹக்கீம் மற்றும் றிஷாத் பதியுதீன் ஏனைய முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் இப்பொழுதே மஹிந்த ராஜபக்ஷவோடு வந்து இணைந்து கொள்ளுமாறு நான் அறை கூவல் விடுக்கின்றேன். எதிர்காலத்திலே முஸ்லிம் சமுதாயத்திற்கு விளைய விருக்கின்ற தீமைகளைத் தடுப்பதற்காக வேண்டி நான் உள்ளார்த்தமாக நேர்மையாக சகோதர வாஞ்சையோடு அவர்களுக்கு நான் விடுக்கின்ற வேண்டுகோளாகும் - என்றும் அவர் தெரிவித்தார்.

## ஷசி வீரவன்சவிற்கு எதிரான வழக்கு திகதி அறிவிப்பு



முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்சவின் மனைவியான ஷசி வீரவன்சவிற்கு எதிரான போலி கடவுச்சீட்டு வைத்திருந்தமை தொடர்பான வழக்கு விசாரணைக்கு திகதி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதன்பிரகாரம் மே மாதம் 25 , 30 மற்றும் 31 ஆம் திகதிகளில் வழக்கு விசாரணைகள் இடம்பெறும் என கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்ற நீதிபதி ரணசிங்க பண்டார அறிவித்துள்ளார். அத்துடன் மூன்று சாட்சிகளுக்கும் அழைப்பாணை உத்தரவு பிறப்பித்து, நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டப் பிரிவு 45 இன் கீழ் முதல் தடவையாக ஷசி வீரவன்ச கடந்த 2015 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21 ஆம் திகதி கைதுசெய்யப்பட்டிருந்தார். போலியான ஆவணங்களைச் சமர்ப்பித்து ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒழுங்குமுறைகளுக்கு புறம்பாக தயாரிக்கப்பட்ட இராஜதந்திரிகளுக்கான கடவுச்சீட்டு உள்ளிட்ட கடவுச்சீட்டுக்களை மோசடியான முறையில் பெற்றதாக அவருக்கு எதிராக குற்றஞ்சுமத்தப்பட்டிருந்தது.

# கொலை குற்றச்சாட்டிலிருந்து மஹிந்தவை நானே காப்பாற்றினேன்

### சரத் என். சில்வா தெரிவிப்பு



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு எதிராக முன்பு சுமத்தப்பட்டிருந்த இரண்டு கொலைக்குற்றச்சாட்டுக்களில் இருந்து தானே அவரை காப்பாற்றியதாக முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற புத்தக வெளியீட்டு விழாவொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இரண்டு கொலை குற்றச்சாட்டுகள் மற்றும் ஒருவரை கொலை செய்ய திட்டமிட்டதாக மஹிந்த மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்ததாக தெரிவித்த சரத் என் சில்வா, தனது நண்பரான மஹிந்தவிடம் இதுகுறித்து கேட்டபோது தான் அவ்வாறு செய்யவில்லை எனக் குறிப்பிட்டதாக கூறினார். எனினும், மஹிந்தவுக்கு எதிராக ஐக்கிய தேசிய கட்சியினரால் இரண்டு பொய்சாட்சிகள் சோடிக்கப்பட்டதாகவும் பின்னர் அதன் உண்மைத் தன்மையை கண்டுபிடித்து பொய்சாட்சியாளர்களை சிறையில் அடைத்து மஹிந்தவை காப்பாற்றியதாகவும் சரத் என் சில்வா இதன்போது குறிப்பிட்டார்.

இவ்வாறு அன்று நீதிபதிகள் நீதிமன்ற மனநிலையில் இருந்து செயற்பட்டதாகவும் இன்று அதற்கான சூழல் இல்லையெனவும் தெரிவித்த சரத் என் சில்வா, தற்போதைய பொலிஸ் நிதிக்குற்ற தடுப்புப் பிரிவால் எவ்வித பலனும் இல்லையென்றும் அதனை மூடுவதற்கு தொடர்ந்தும் போராட்டம் நடத்தப்படும் என்றும் குறிப்பிட்டார்.

## மங்கள சமரவீர சவூதிக்கு விஜயம்

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர சவூதி அரேபியாவுக்கு விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

சவூதிக்கான இலங்கை தூதுவர் அஸ்மி தாஸிம் இதனைத் தெரிவித்துள்ளார். இந்த விஜயத்துக்கான ஏற்பாடுகளை தாம் மேற்கொள்ளவுள்ளதாக சவூதிக்கான இலங்கை தூதுவர் தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்தல் மற்றம் வேலை வாய்ப்பு, வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலாத்துறை ஆகிய துறைகளை மேலும் வலுப்படுத்த எதிர்பார்ப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.



இதேவேளை, கடந்த ஆண்டில் சவூதியிலிருந்து சுமார் 30 ஆயிரம் பேர் விடுமுறையை களிக்க இலங்கை வந்துள்ளதாகவும் சவூதிக்கான இலங்கை தூதுவர் தெரிவித்தார்.

## இவ்வருடத்தில் 8,697 பேர் டெங்குவால் பீடிப்பு



இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்ட 8697 பேர் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்டவர்களில் 50 வீதமானோர் மேல் மாகாணத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்பு செயற்றிட்டத்தின் சமூக வைத்திய நிபுணர் பிரசீலா சமரவீர குறிப்பிட்டார்.

கொழும்பு, கம்பஹா, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கல்முனை, காலி, மாத்தறை மற்றும் இரத்தினபுரி ஆகிய பகுதிகளில் டெங்கு காய்ச்சல் பரவும் அபாயம் அதிகரித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

சுற்றாடலை சுத்தம் செய்வதற்காக குறிப்பிட்ட காலத்தை ஒதுக்கி வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதாகவும், ஆனால் பாடசாலைகள், நிறுவனங்கள் மற்றும் வீடுகள் உள்ளிட்ட இடங்களில் டெங்கு நோய் பரவுதல் தொடர்பில் விசேட விழிப்புணர்வு தேவைப்படுவதாகவும் டொக்டர் பிரசீலா சமரவீர கூறினார்.

பாதுகாப்பு அமைச்சுடன் இணைந்து கொழும்பில் உள்ள 170 பாடசாலைகளில் டெங்கு ஒழிப்பு செயற்றிட்டத்தை மேற்கொண்டதாக அவர் சுட்டிக்காட்டினார்.

## முஸ்லிம் சமய கலாசார பணிப்பாளர் ஸமீல் நிதி அமைச்சுக்கு இடமாற்றம்



முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.எச்.எம்.ஸமீல் பதவி உயர்வுடன் நிதி அமைச்சுக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

இந்த இடமாற்றம் இன்று முதல் அமுலுக்கு வருகின்றது.

இலங்கை நிர்வாக சேவையின் முதல் தர உத்தியோகத்தரான ஷெய்க் ஸமீல் விஷேட தரத்துக்கு உயர்த்தப்பட்டே நிதி அமைச்சுக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

இவர் 2013 ஜனவரி முதல் முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தின் பணிப்பாளர் பதவி வகித்து வந்தார்.

இவருடைய வெற்றிடத்துக்கு இதுவரை எவரும் நியமிக்கப்படவில்லை.



இலங்கையில் முதற்தடவையாக தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட முதலாவது சட்ட தொகுதி நூல்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் நீதி மற்றும் புத்தசாசன அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷவினால் கையளிக்கப்பட்டது. ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஆரம்ப கைத்தொழில் அமைச்சர் தயா கமகே, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதிய இலங்கைக்கான நிலையான வதிவிடப் பிரதிநிதி ஊனா மெக்கோலி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## 201 இஸ்லாமிய அடிப்படை வாதிகள் இலங்கைக்குள் நுழைவு

### பொதுபல சேனா குற்றச்சாட்டு

கடந்த இரண்டு மாத காலத்துக்குள் இஸ்லாம் அடிப்படை வாதிகள் 201 பேர் சட்டவிரோதமாக இலங்கைக்கு வருகை தந்துள்ளதாகத் தெரிவித்து, பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொடஅத்தே ஞானசார தேரர், குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நிமல் ரணசிங்கவிடம் நேற்றுமுன்தினம் முறைப்பாடொன்றைச் செய்துள்ளார்.

பத்தரமுல்லையில் உள்ள குடிவரவு குடியகல்வு திணைக்களத்தில் நேற்று முறைப்பாட்டு செய்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேற்கத்திய நாடுகளிலிருந்து வரும் இஸ்லாமிய அடிப்படை வாதிகளின் குழுக்களால் எதிர்நோக்கும் பயங்கரவாத அச்சுறுத்தல்கள் காரணமாக, அமெரிக்கா உட்படப் பல நாடுகள் தமது நாட்டின் குடிவரவு குடியகல்வு சட்டங்களை வலுவாக்கியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எமது நாட்டின் குடிவரவு குடியகல்வு சட்டங்கள் தளர்வாக உள்ளமையால், அடிப்படை வாதிகளுக்கு இலகுவாக இலங்கைக்குள் நுழைய வாய்ப்புள்ளதாகவும் தெரிவித்த தேரர், சட்டங்களை கடினப்படுத்துவதற்கான அவசியம் ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.



## தேசத்துரோகிகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள மேலும் 183 பேர் குறித்தும் கவனம் செலுத்துக!

### ஜனாதிபதிக்கு அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் கடிதம்



1804 ஜுன் 07ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரித்தானிய அரசாங்கத்தினால் தேசத்துரோகிகளாக பிரகடனம் செய்யப்பட்ட கிழக்கு மாகாண முஸ்லிம்கள் 7 பேருக்கும் மேலதிகமாக அந்த வர்த்மானி அறிவித்தலில் உள்ளடங்கியுள்ள ஏனைய 183 பேரையும் தேசிய வீரர்களாக பிரகடனப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை விடுத்துள்ளார். 1804ஆம் ஆண்டு ஜுன் 07ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுடன், அவர்களுடைய பெயர் விபரங்களையும் உள்ளடக்கி ஜனாதிபதிக்கு இன்று புதன்கிழமை அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

1818 ஆம் ஆண்டு ஊவா வெல்லஸ்ஸ பகுதியில் பிரித்தானிய அரசுக்கு எதிராக கிளர்ச்சி செய்த சிங்களத் தலைவர்கள் 19 பேர் நாட்டின் தேசிய வீரர்களாக வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஜனாதிபதி பிரகடனப்படுத்தியிருந்தார். இந்நிலையில், பிரித்தானிய அரசால் தேசத்துரோகிகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 7 முஸ்லிம்களையும் நாட்டுக்காக போராடிய முஸ்லிம் தலைவர்கள் என வர்த்தமானி அறிவித்தல் மூலம் அறிவிக்குமாறு கோரி இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் ஜனாதிபதிக்கு கடந்த ஜனவரி 24ஆம் திகதி கடிதம் அனுப்பி வைத்திருந்தார்.

இக்கோரிக்கை ஏற்று ஜனாதிபதி அதற்கான நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறு நீதி அமைச்சர் விஜயதாசவுக்கு அறிவுரை வழங்கியிருந்தார். விரைவில் அவர்களது பெயர் பட்டியல் தேசிய வீரர்களாக வர்த்தமானியில் அறிவிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## கேப்பாபிலவு காணிகளை அடையாளம் காட்டினால் விடுவிக்க நடவடிக்கை

(அ.அருண் பிரசாந்த்)

கேப்பாபிலவு விமானப் படை அமைந்துள்ள பகுதியிலுள்ள தமது காணிகளை விடுவிக்குமாறு தொடர்ச்சியாக போராட்டத்தில் ஈடுபடும் மக்கள், தமது காணிகளை சரியாக அடையாளம் காட்டுவார்களாயின் அதனை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று இராணுவப் பேச்சாளரான பிரிக்கேடியர் ரொஷான் செனவிரட்ன தெரிவித்தார்.

அதாவது, கேப்பாபிலவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு, அவரவர் காணிகளை அடையாளம் காட்டி உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு நாம் ஏற்கனவே கேட்டுக்கொண்டுள்ளோம். அவ்வாறு செய்யாது காணிகளை விடுவிக்க முடியாது.

இங்கு சம்பந்தமில்லாதவர்களும் இருக்கலாம். கடந்த காலங்களில் இந்த பகுதியில் 243 ஏக்கர் நிலப்பரப்பு விடுவிக்கப்பட்டது. அத்துடன் வவுனியாவிலும் 16 ஏக்கர் நிலப்பரப்பு விடுவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி மேலும் காணிகளையும் எம்மால் விடுவிக்க முடியும். அதற்காக மக்கள் தமது காணிகளை அடையாளம் காட்டி உறுதிப்படுத்த வேண்டும். அவ்வாறு உறுதிப்படுத்தும் பட்சத்தில் தான் பிரதேச செயலாளர் ஊடாக விமானப்படையினரால் காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்க முடியுமாக இருக்கும்.

முகாம் அமைந்துள்ள காணிப்பகுதியில் அரசுக்கு சொந்தமான காணியும் உள்ளது. வனப் பாதுகாப்பு அதிகாரசபைக்கு கீழான காணியும் உள்ளது. இதனால் மக்கள் தமது காணியின் அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

இதனை நாம் மக்களுக்கும் அறிவித்தும், தொடர்ந்தும் போராடுகிறார்கள் எனில் அதன் பின்னணியில் வேறு நோக்கங்கள் இருக்கலாம் எனும் சந்தேகமும் எழுகின்றது. ஒருவேளை அது அரசியல் நோக்கமாகவும் இருக்கலாம் என இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

பாராளுமன்ற கட்டிடத்தொகுதியில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார் என்பது குறிப்பிடத்தக்கது.



## பிரதமர் இன்று கண்டிக்கு விஜயம்

பிரதமர் ரணில் விக்ரமசிங்க இன்று கண்டிக்கு விஜயம் செய்கிறார். இன்று மாலை கண்டி திரித்துவக் கல்லூரியில் நடைபெறும் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க பிரதம அதிதியாகக் கலந்துகொள்ளவுள்ளார்.





இந்தியா அரசினால் வருடாந்தம் 700 புலமைப்பரிசில்கள் இலங்கை மாணவர்களுக்கு பலதுறைகளில் கல்வியைத் தொடருவதற்கு நெடுங்காலமாக உதவி வருகின்றது. இலங்கை - இந்தியா நட்புறவு நூற்றாண்டுகளுக்கும் மேலானது. அயல்நாடான இந்தியா இலங்கையின் பொருளாதார ,கல்வி மற்றும் இலங்கையின் சகலதுறைகளின் அபிவிருத்தியிற்கு பாரிய பங்களிப்பைச் செய்து வருகின்றது. என சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்தார். நேற்றுமுன்தினம்(7) கொழும்பு கலாதாரி ஹோட்டலில் இந்தியா அரசின் கல்விக் கண்காட்சி நிகழ்ச்சி கலந்து கொண்டு அதனை சபாநாயகர் கரு ஜயசூரிய மற்றும் இந்தியா உயர்ஸ்தாணிகர் தரிஜித் சிங் சந்து கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தனர். இந் நிகழ்வில் இந்தியாவில் உள்ள கல்வி நிறுவனங்களில் இலங்கை மாணவர்கள் கல்வியைத் தொடர்வதற்கான கண்காட்சியும் இடம்பெற்றது. (அஷ்ரப் ஏ சமத்)

NAVAMANI DAILY
நவமணி
தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்
FREELANKA MEDIA LTD.
156, Hospital Road, Kalubowila, Dehiwala.
Telephone: 011 7393880 - 1/2 Fax: 011 7393883
E-mail: editornavamani@gmail.com
freelankamedia@gmail.com
09TH FEBRUARY 2017 - THURSDAY

# முஸ்லிம் எம்.பிக்கள் ஒன்றிணைய வேண்டும்!

முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கும் கல்வி, சட்டமும் ஒழுங்கும், அரசாங்க தொழில்வாய்ப்பு மற்றும் இடம் பெயர் முஸ்லிம்களது மீள்குடியேற்றம் உட்பட்ட பிரச்சினைகள் தொடர்பாக முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டாகச் செயற்பட்டு அரசுக்கு அழுத்தம் கொடுப்பதன் மூலமே தீர்வு பெறலாம் என முன்னாள் ஜனாதிபதியும் தேசிய ஐக்கிய மற்றும் நல்லிணக்கத்துக்கான செயலணியின் தலைவருமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் (07) முஸ்லிம் கவுன்சில் ஒப் ஸ்ரீலங்காவின் ஏற்பாட்டில் முஸ்லிம் இயக்கங்களின் தூதுக்குழு ஒன்று முன்னாள் ஜனாதிபதியைச் சந்தித்து முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து விரிவான அறிக்கை ஒன்றைக் கையளித்த போதே, முன்னாள் ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவின் இந்தக் கருத்தை முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் கருத்திற்கொண்டு செயற்பட வேண்டியுள்ளனர். அப்போதுதான், முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கான முறையான தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள முடியுமாக இருக்கும்.

முஸ்லிம் சமூகத்தை சேர்ந்த 21 முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றில் இருக்கின்றபோதும், முஸ்லிம்களது விவகாரம் என்று வரும்போது, இவர்களில் பலரும் மௌனம் காப்பது சமூகத்தில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கின்றது.

முஸ்லிம்களுக்கு எதிரான இனவாத நடவடிக்கைகள் சூடு பிடிக்கும்போது மட்டும், ஊடகங்களில் தோன்றி அறிக்கை விடுத்து விட்டு மௌனித்துப் போகும் அரசியல்வாதிகள், முஸ்லிம் சமூகம் எதிர்கொள்கின்ற காணிப் பிரச்சினை, அரச தொழில் பிரச்சினை உள்ளிட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முறையான நடவடிக்கைகள் எடுக்கிறார்களா? என்ற குற்றச்சாட்டை முஸ்லிம் சமூகம் முன்வைக்கின்றது.

பேரினவாதிகள் முஸ்லிம்களுக்கு எதிரான வெறுப்புப் பேச்சுக்களைக் கக்கும்போது, அது முழு மொத்த நாட்டிலுமே பெருமளவு பேசப்படுவதால்தான், அந்நேரங்களில் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் சற்று வாய் திறப்பதாகவும், முஸ்லிம் சமூகம் எதிர்கொள்ளும் ஏனைய பிரச்சினைகளின்போது, மௌனித்துப் போவதாகவும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் நிலை உள்ளது.

இச்சந்திப்பில் மிகவும் விரிவாகப் பேசியுள்ள முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க, முஸ்லிம் அரசியல்வாதிகள் குறித்த இன்னும் பல விடயங்களையும் பகிர்ந்துகொண்டுள்ளார். மு.காவின் முன்னாள் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப், முஸ்லிம் சமூகம் குறித்த ஆழ்ந்த அக்கறையுடன் செயற்பட்டவர் என்று சந்திரிகா பண்டாரநாயக்க கூறியுள்ளார்.

முஸ்லிம்களான எம்.எச்.எம். அஷ்ரப், ஏ.எச்.எம். பௌசி போன்றோருக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டதால், அவர்கள் பெருமளவில் முஸ்லிம் சமூகத்துக்கு தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுத்து, சேவை புரிந்துள்ளதாகவும், முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா இச்சந்திப்பில் கூறியுள்ளார்.

மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரபுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில், இப்போதைய முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் எந்த இடத்தில் உள்ளனர் என்பதை முஸ்லிம் சமூகம் நன்கு அறிந்து வைத்துள்ளது. முஸ்லிம் சமூகம் தமது வாக்குகளால் தெரிவு செய்து பாராளுமன்றம் அனுப்பிய முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள், தம் விவகாரங்களில் முறையான நடவடிக்கைகளை எடுக்காதிருப்பது முஸ்லிம் சமூகத்தை பெரிதும் கவலைகொள்ளச் செய்துள்ளது.


எவ்வாறாயினும், நாம் மொத்தமாகவே முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களை குறை கூற இங்கு விழையவில்லை. ஏனெனில், அவ்வப்போது, முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள், சமூக சிந்தனையுடன் சில பணிகளை செய்வதை நாம் அறிந்து வைத்துள்ளோம்.

ஆனால், ஓட்டு மொத்தமாகப் பார்க்கையில், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் வினைத்திறன்மிக்க வகையில், முஸ்லிம் சமூக, அரசியல் விவகாரங்களிலும், தேசிய விவகாரங்களிலும் தலையிடுவதில்லை என்ற பெரும் கவலையை எல்லோரிடமும் உள்ளது.

இந்நிலையை இல்லாமலாக்குவதற்காக, வெவ்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களாக உள்ளபோதும், அனைத்து முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும், ஓரே அணியாக இணைந்து, முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் மன்றம் என்ற அமைப்பை உருவாக்க வேண்டும் என்று நாம் பலமுறை நமது ஆசிரியர் தலையங்கத்தில் வலியுறுத்தியிருந்தோம். இன்றும் அதே கருத்தை வலியுறுத்த விரும்புகின்றோம்.

# மு.கா. தலைமைத்துவம் மாற்றப்பட வேண்டுமா?

**பிறவ்ஸ் முஹம்மட்**



முஸ்லிம் அரசியலுக்கு முகவரி தேவை என்பதற்காக மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எனும் பேரியக்கத்தை 1981 இல் ஸ்தாபித்தார். அவரது மரணத்தின் பின்னர் தலைமைத்துவ போட்டி காரணமாக பலர் கட்சியிலிருந்து பிரிந்துசென்று வேறு பல கட்சிகளை ஆரம்பித்து அதற்கு தலைமை தாங்கிக்கொண்டிருக்கின்றனர். இவ்வாறான சூழ்நிலையில் மர்ஹூம் அஷ்ரப் விட்ட இடத்திலிருந்து தற்போதைய தலைவர் ரவூப் ஹக்கீம் அக்கட்சியை வழிநடாத்திக்கொண்டிருக்கிறார்.

முஸ்லிம் காங்கிரஸை மேலும் துண்டாடும் நோக்கிலான முயற்சிகளில் சிலர் திரைமறைவில் இருந்துகொண்டும் இன்னும் சிலர் நேரடியாகவும் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றனர். கட்சிக்குள் இருப்பவர்கள்தான் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகிறார்கள் என்பது வேதனையான தொரு விடயம். அதிலும் குறிப்பாக கட்சியின் தவிசாளராக இருந்து தற்போது இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ள பஷீர் சேகுதாவூத் கட்சியை தூய்மைப்படுத்தப்போகிறேன் என்று கூறிக்கொண்டு கட்சியை பிளவுபடுத்தும் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்.

பஷீர் தற்போது முன்வைத்துவரும் கோரிக்கைகளில் மிகவும் பிரதானமானது கட்சியின் தலைமைத்துவத்தை மாற்றவேண்டும் என்பதாகும். அஷ்ரபினால் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட வபா பாறுக், சேகு இஸ்ஸதீன் உள்ளிட்ட சிலர்தான் தலைமைத்துவ மாற்றம் குறித்து வெளியிலிருந்து பேசிவருகின்றனர். இந்நிலையில், தலைமைத்துவ மாற்றம் வேண்டுமென கட்சிக்குள் இருந்துகொண்டு குரலெழுப்பும் ஒருவரான பஷீர் சேகுதாவூதின் பின்னணி மற்றும் நிகழ்ச்சிநிரல் குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

**18ஆவது திருத்தம்**

ஜனநாயகத்தை கேள்விக்குட்படுத்துகின்ற 18ஆவது திருத்தத்துக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவளித்த தன்மூலம் பலரிடமிருந்து எதிர்மறை விமர்சனங்களை சம்பாதித்துக்கொண்டது. அதேவேளை, பணத்துக்காக ஆதரவு வழங்கியதாகவும் பொய்யான குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்பட்டன. ஆனால், முஸ்லிம் காங்கிரஸ் 18ஆவது திருத்தத்துக்கு ஆதரவளிப்பதற்கு முக்கிய காரணமாக இருந்தவர் பஷீர் சேகுதாவூத் என்பது பலருக்குத் தெரியாது.

மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக 18ஆவது திருத்தத்துக்கு முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவளிக்காவிட்டால் தான் கட்சியிலுள்ள சிலரை பிரித்தெடுத்துக்கொண்டு மஹிந்தவுக்கு ஆதரவு வழங்கப்போவதாக மிரட்டி, 18ஆவது திருத்தத்துக்கு ஆதரவளிக்க வைத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. 8 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்தநிலையில் அதில், 5 பேரை மஹிந்தவின் பக்கம் அழைத்துச் செல்லும் நோக்கிலேயே பஷீர் செயற்பட்டதாக சந்தேகிக்கப்படுகிறது.

இந்நிலையில் 5 பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சியை விட்டு செல்வதை தடுப்பதற்காக வேண்டா வெறுப்பாக 18ஆவது திருத்தத்துக்கு ஆதரவளிக்கும் நிலைப்பாட்டை ரவூப் ஹக்கீம் எடுத்திருந்தார். அதன்பின்னர் மறுநாள் சாய்ந்தமருதில் நடைபெற்ற நிகழ்வொன்றில், வேண்டுமென்றே குழியில் விழுந்துவிட்டதாக இதுகுறித்து ரவூப் ஹக்கீம் இதன் தாக்கம் குறித்து கருத்து தெரிவித்திருந்தார். அத்துடன் திருத்தத்துக்கு ஆதரவளித்தமைக்காக பல இடங்களில் வருத்தம் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

**கிழக்கு மாகாணசபைத் தேர்தல்**

2012ஆம் ஆண்டு நடைபெற்ற கிழக்கு மாகாணசபைத் தேர்தலின் போது மஹிந்தவின் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் இணைந்தே முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிட வேண்டும் என்பதில் பஷீர் சேகுதாவூத் பிடிவாதமாக இருந்திருக்கிறார். ஆனால், கட்சியின் தலைமைத்துவம் அவரது கூற்றை புறந்தள்ளிவிட்டு தனித்துப் போட்டியிட்டிருக்கிறது.

மு.கா. மஹிந்தவுடன் இணைந்து போட்டியிடாத காரணத்தினால், கட்சிக்கு எதிராக 17 பொதுக்கூட்டங்களை நடாத்தி அதில் கட்சியின் அம்பலங்களை வெளியிடப்போவதாக பஷீர் சேகுதாவூத் தெரிவித்திருந்தார். இதன் முதற்கட்டமாக ஏறாவூரில் பிரமாண்ட முறையில் ஏற்பாடு செய்திருந்த முதலாவது கூட்டமே பிசுபிசுத்துப்போனது. கட்சியைத் தோல்வியடையச் செய்யும் நோக்கிலான இந்தக் கூட்டம் வெற்றியளிக்காது என்பதைப் புரிந்துகொண்ட பஷீர், அந்த முயற்சியைக் கைவிட்டார்.

ஆனால், பல்வேறு சதி முயற்சிகளையும் தாண்டி ரவூப் ஹக்கீம் வகுத்த வியூகத்தின் பிரகாரம் முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிட்டு ஆட்சியைத் தீர்மானிக்கின்ற பேரம்பேசும் சக்தியாக வெற்றிபெற்றது. முஸ்லிம் முதலமைச்சர் ஒருவரைப் பெற வேண்டும் என்பதற்காக முஸ்லிம் காங்கிரஸ் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் இணைந்து ஆட்சியமைத்தது. அதன்பின்னர், அக்கட்சியைச் சேர்ந்த ஒருவரே தற்போது முதலமைச்சராகவும் இருக்கின்றார்.

**வட மாகாணசபைத் தேர்தல்**

இறுதியாக நடைபெற்ற வடமாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் இணைந்து முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிடவேண்டும் என பஷீர் சேகுதாவூத் கோரிக்கை விடுத்ததாக கட்சி மட்டத்தில் பேசப்படுகிறது. ஆனால், ரவூப் ஹக்கீம் அதற்கு இணக்கம் தெரிவிக்கவில்லையாம். இதனால், உயர்பீட உறுப்பினர்கள் உள்ளிட்ட கட்சி முக்கியஸ்தர்கள் சிலரை அழைத்துக்கொண்டு தனது வீட்டில் பஷில் ராஜபக்ஷவுடன் ஒப்பந்தம் செய்து, அவர்களை வேட்பாளர்களாக நிறுத்தியதாக கதைகள் அடிபடுகின்றன.

கட்சி தலைமைத்துவத்துக்கு எதிராக, கட்சி உறுப்பினர்களைக் கூறுபோட்டு பஷில் ராஜபக்ஷவிடம் ஒட்டுமொத்த வியாபாரம் செய்த இந்த செயற்பாடு, மஹிந்த ராஜபக்ஷ மீது அவர் வைத்துள்ள விசுவாசத்தை படம்போட்டுக் காட்டுவதாகவே இருப்பதாக அரசியல் விமர்சகர்கள் கருத்து தெரிவிக்கின்றனர். இவ்வாறான சதி முயற்சிகளையும் தாண்டி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வட மாகாணசபையில் தனித்துப் போட்டியிட்டு ஓர் ஆசனத்தைக் கைப்பற்றியது.

**ஜனாதிபதித் தேர்தல்**

2015ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் 18ஆவது திருத்தத்தின் பிரகாரம் மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் தேர்லில் களமிறங்கினார். அவருடைய ஆட்சிக்காலத்தில் தலைவிரித்தாடிய முஸ்லிம் விரோத நடவடிக்கைகளினால், 18ஆவது திருத்தத்துக்கு ஆதரவளித்தாலும் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிரான நிலைப்பாட்டையே ரவூப் ஹக்கீம் கொண்டிருந்தார். ஆளும்கட்சியில் இருந்தாலும் எதிர்க்கட்சியாகவே இருப்பதாக இதுகுறித்து பல இடங்களில் பேசியும் இருந்தார்.

இதனால், முஸ்லிம்களின் எதிர்காலத்தை கருத்திற்கொண்டு பொதுவேட்பாளராக நிறுத்தப்பட்ட மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவளிப்பதற்கே முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்திருந்தது. மக்களின் எதிர்பார்ப்பும் அதுவாகத்தான் இருந்தது. ஆனால், பஷீர் சேகுதாவூத் மட்டும் மஹிந்தவை விட்டு வருவதற்கு முட்டுக்கட்டையாக இருந்ததாக தெரிய வருகிறது. எனினும் மஹிந்தவுக்கு ஆதரவளிக்கும் நிலைப்பாட்டிலேயே அவர் தொடர்ந்தும் இருந்துவந்திருக்கிறார்.

மைத்திரியின் பக்கம் வரவேண்டும் அத்துடன் கட்சிக்குள் பிளவுகள் ஏற்படாதவாறும் இருக்கவேண்டும் என்ற இக்கட்டானதொரு சூழ்நிலைக்கு ரவூப் ஹக்கீம் தள்ளப்பட்டார். இதனால் பல இழுபறிகளுக்கு மத்தியில் முஸ்லிம் காங்கிரஸ் கடைசிநேரத்தில் வந்துசேர்கின்ற ஒரு நிலைமை ஏற்பட்டது. இதன்போது, மைத்திரியுடன் மு.கா. சேர்வதற்காக ரவூப் ஹக்கீம் வகுத்த வியூகம் சாணக்கியமானது.

மக்கள் நலன்கருதி கட்சி எடுத்த தீர்மானத்துக்காக பஷீர் சேகுதாவூத் கட்சியுடன் முரண்பட்ட நிலையில் இருப்பது ஊடகங்கள் வாயிலாக படம்போட்டுக் காட்டப்பட்டன. இதன்போது மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்து அவர் எழுதிய 'காதல் கடிதம்' ஊடகங்களில் பரபரப்பாக பேசப்பட்டன. இதன்போது மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவாக முஸ்லிம் காங்கிரஸ் நடத்திய எந்தவொரு தேர்தல் பிரசாரங்களில் பஷீர் சேகுதாவூத் கலந்துகொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. மஹிந்த ராஜபக்ஷ மீது வைத்திருந்த விசுவாசத்துக்காக வாக்களிப்பில்கூட கலந்துகொள்ளவில்லை என்றும் கிசுகிசுக்கப்பட்டது.

**பாராளுமன்ற தேர்தல்**

மைத்திரி ஆட்சிக்கு வந்தபின்னர் 2015ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் போட்டியிட்டதால், தனக்கான ஆசனத்தைப் பெறுவதற்காக முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப்போட்டியிட தீர்மானித்தது. இதன்போது, வேட்பாளராக தன்னை நிறுத்துமாறு பஷீர் சேகுதாவூத் கட்சியிடம் கோரிக்கை விடுத்துவந்திருக்கிறார். ஆனால், அவருக்கு குறிப்பிடத்தக்களவு வாக்குவங்கி இல்லாத காரணத்தினால் அலிசாஹிர் மௌலானாவை கட்சி களமிறக்கியது.

இந்நிலையில், பஷீர் சேகுதாவூத் கட்சியுடன் கோபித்துக்கொண்டிருந்தார். தேர்தல் பிரசார காலங்களில் முஸ்லிம் காங்கிரஸுக்கு எதிராகவே அவருடைய செயற்பாடுகள் அனைத்தும் காணப்பட்டன. தேர்தல் காலத்தில் புல்மோட்டையில் அமைச்சர் றிஷாத் பதியுதீனுடன் இரவு நேரத்தில் இரகசிய பேச்சுவார்த்தையிலும் ஈடுபட்டதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. மட்டக்களப்பு மாவட்டத்தில் கட்சி சார்பாக போட்டியிட்ட அலிசாஹிர் மௌலானை தோற்கடிப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் அவர் மேற்கொண்டது தெரியவந்தது. ஆனால், அவற்றையும் மீறி அலிசாஹிர் மௌலானா பாராளுமன்ற உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்டார்.

கடைசியாக தேசியப்பட்டியல் கேட்டுக்கொண்டு கட்சிக்கு பல்வேறு அழுத்தங்களை கொடுத்துக்கொண்டிருந்தார். 3 தடவைகள் முஸ்லிம் காங்கிரஸின் தேசியப்பட்டியலை அனுபவித்துக் கொண்டு கட்சிக்குள் முரண்பாட்டை தோற்றுவிக்கும் வகையிலும், பிளவை ஏற்படுத்தும் வகையிலும் அவரது செயற்பாடுகள் இருந்த காரணத்தினால் 4ஆவது தடவையாவும் தேசியப் பட்டியலை வழங்குவதற்கு கட்சி இணங்கவில்லை.

தனக்கு தேசியப்பட்டியல் கிடைக்காது என்பதை அறிந்துகொண்ட பின், பிரதிநிதித்துவ அரசியலில் ஒதுங்கியிருப்பதாக பஷீர் சேகுதாவூத் அறிக்கைவிட்டார். அதன்பின்னர் கட்சியின் செயலாளர் நாயகம் ஹஸன் அலியின் பதவி குறைக்கப்பட்டது குறித்து பேசிவந்தார். ஹஸன் அலிக்காக குரல்கொடுக்கும் தோரணையில், கட்சிக்கு எதிரான செயற்பாடுகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வந்தாக அறியமுடிகிறது. அத்துடன் தாருஸ்ஸலாம் குறித்த சர்ச்சைகளையும் பேசிவந்தார். ஹஸன் அலி தற்போது கட்சியுடன் இணைந்து செயற்படுகின்ற காரணத்தினால் புதியதொரு ஆயுதத்தை கையில் எடுத்திருக்கிறார். கட்சி முக்கியஸ்தர்களின் அந்தரங்க ஆதாரங்களை வெளியிடப்போவதாக சமூக ஊடகங்கள் வாயிலாக தற்போது மிரட்டல் விடுத்து வருகிறார். இவை எல்லாவற்றின் பின்னாலும் இருப்பது அப்பட்டமான சுயநலம் என்பது வெள்ளிடைமலை.

இவ்வாறு கட்சிக்குள் இருந்துகொண்டே, அதுவும் தவிசாளர் எனும் முக்கிய பதவியில் இருந்துகொண்டு கட்சியை காட்டிக்கொடுக்கும், கூறுபோடும் முயற்சியிலேயே பஷீர் சேகுதாவூத் ஈடுபட்டு வந்திருக்கிறார். மஹிந்த விசுவாசியான இவர், கட்சிக்குள் இருந்துகொண்டே இன்னுமொரு நிகழ்ச்சிநிரலின் பிரகாரம் இயங்கிவந்ததுதான் வரலாறு. இப்படியான ஒருவர்தான் தற்போது கட்சியின் தலைமைத்துவத்தை மாற்றவேண்டும் என்று கோரிக்கை விடுத்துவருகிறார்.

கட்சியின் நலனை கருத்திற்கொண்டு, பஷீருக்கு தலையாட்டாத தலைமையாக ரவூப் ஹக்கீம் இருந்துவருகிறார். இதன் ஒரு அங்கமாகத்தான் உயர்பீட உறுப்பினர்களின் ஏகோபித்த வேண்டுகோளுக்கிணங்க அவரை தவிசாளர் பதவியிலிருந்தும் இடைநிறுத்தம் செய்திருக்கிறார்.

இவ்வாறான சூழ்நிலையில், ரவூப் ஹக்கீம் தனது நிகழ்ச்சிநிரலின் கீழ் கட்சியை வழிநடாத்தமாட்டார் என்பதைப் புரிந்துகொண்டு, தனக்கு சாதகமான பிறிதொரு தலைமையை உருவாக்கவேண்டும் என்ற நோக்கிலேயே பஷீர் முன்வைத்துவரும் தலைமைத்துவ மாற்ற கோரிக்கை இருக்கலாம். மஹிந்தவுக்கு ஆதரவாக, சுயநலங்களுக்கு விலைபோகின்ற வகையில் கட்சியை வழிநடாத்தும் ஒருவரே கட்சித் தலைவராக இருக்க வேண்டும் என்பது பஷீரின் கனவாக இருக்கலாம்.

NAVAMANI DAILY
நவமணி

## வாசகர் உரிமை

நாம் வாசகர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பத்திரிகைத்துறையினருக்கான தொழில்சார் ஒழுக்கக்கோவையின்படி கருமமாற்றவும் தம்மை அர்பணித்துள்ளோம். அதனால் எமது பத்திரிகையில் பிரசுரமாகின்ற விடயங்கள் தொடர்பாக ஏதாவது மனக்குறைகள் அல்லது பிரச்சினைகள் இருப்பின் அதுபற்றி எம்மோடு தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். உங்கள் மனக்குறைகள் அல்லது அதிருப்திகள் குறித்து நாம் கவனம் செலுத்தி அவற்றை நிறைவு செய்ய முயற்சி செய்வோம்.

அதன்மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால்

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்யலாம்.

மேலதிக விபரங்களுக்கு

ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිසම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
இல : 96, கிருல வீதி, கொழும்பு – 05
தொலைபேசி : 011-5353635 பெக்ஸ் - 011-5335500
ஈமெயில் : pccsl@pccsl.lk
இணையத்தளம் : www.pccsl.lk

# முஸ்லிம்கள் ஸகாத்தை நிறைவேற்றுவது போன்று ஆசிரியர்களும் கல்வி புகட்டலை செய்ய வேண்டும்

## சீனன்கோட்டையில் கல்வி இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன்





(பேருவளை பி.எம். முக்தார்)

தான் உழைத்த பணத்தில் இரண்டரை வீதத்தை வறிய மக்களுக்கு வழங்க வேண்டுமென இஸ்லாம் விதித்துள்ள கடமையை முஸ்லிம்கள் சரியாகச் செய்வது போல் ஆசிரியர்கள் 2 சதவீதமளவில் கல்வி கற்பிக்காது முழுமையாக கற்பித்தலிலீடுபட வேண்டுமென கல்வி ராஜாங்க அமைச்சர் வி. இராதாகிருஷ்ணன் வேண்டுகோள் விடுத்தார்.

பேருவளை, சீனன்கோட்டை அல் ஹுமைஸரா தேசிய பாடசாலையில் நிர்மாணிக்கப்படவுள்ள மூன்று மாடிகளைக் கொண்ட புதிய கட்டட அடிக்கல் நடும் விழா செவ்வாயன்று அதிபர் எம்.ஆர்.எம். றிஸ்கி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது அமைச்சர் இவ்வாறு கூறினார்.

மேல் மாகாணசபை உறுப்பினரும் பேருவளை ஐ.தே.கட்சி அமைப்பாளருமான இப்திகார் ஜெமீலின் முயற்சியின் காரணமாக புதிய கட்டடம் அமைக்க கல்வி அமைச்சு இரண்டரை கோடி ரூபா நிதியை ஒதுக்கியுள்ளது. அமைச்சர் மேலும் உரையாற்றுகையில்,

அடுத்த வருடம் நூற்றாண்டு விழாவை விமர்சையாக கொண்டாடவுள்ள இப்பாடசாலையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக கல்வி அமைச்சு 700 இலட்சம் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளது. நான்கு வருடங்களில் அபிவிருத்திப் பணிகள் பூர்த்தி செய்யப்படும். நல்லாட்சி அரசின் பரிசாக இத்தொகை இப்பாடசாலைக்கு கிடைத்துள்ளது. அரசாங்கப் பாடசாலையான இப்பாடசாலைக்கு தேவையான கட்டிடங்களில் 90 சதவீதமான கட்டிடங்களை சீனன்கோட்டையில் உள்ள முஸ்லிம் தனவந்தர்கள் நிர்மாணித்துக் கொடுத்துள்ளனர்.

இது சமூகத்தின் கல்வி மீது பற்றையும் ஊரின் மீதுள்ள பற்றையும் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. நளீம் ஹாஜியார் போன்றவர்கள் கல்விக்காக அர்ப்பண சிந்தையுடன் தனது செல்வத்தை வாரி செலவிட்டுள்ளனர். சீனன்கோட்டை முஸ்லிம்களின் இப்பணி முழு நாட்டு மக்களுக்கும் ஒரு முன்மாதிரியானதாகும்.

மாகாணசபை உறுப்பினர் இப்திகார் ஜெமீல் இப்பாடசாலையின் முன்னேற்றத்தில் அக்கறையுடன் செயல்படுகிறார். 2018ஆம் ஆண்டில் நூற்றாண்டு விழாவை கொண்டாடவுள்ள இப்பாடசாலையில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய முடியுமான அத்தனையும் செய்து தருவேன்.

எமது அமைச்சு 4250 உடற்பயிற்சியாளர்களுக்கு புதிதாக நியமனம் வழங்கி அவர்களையும் கல்வியமைச்சில் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளது. 3000 தமிழ் மொழிப்பாடசாலைகளை அபிவிருத்தி செய்து குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் பணி என் மீது சுமத்தப்பட்டுள்ளது.

நாம் ஒவ்வொருவரும் பல மொழிப் புலமையுள்ளவர்களாக இருக்க வேண்டும். இந்நாட்டைப் பொறுத்தவரை மூன்று மொழிகளையும் கற்று அதில் தேர்ச்சியுள்ளவர்களாக விளங்க வேண்டும்.

தேசிய பாடசாலைகளில் கடமைபுரிய கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்காக புதிய ஆசிரியர்களை இணைத்துக் கொள்ள வர்த்தமானி மூலம் விண்ணப்பப்படிவம் கோரப்பட்டுள்ளது.

விஞ்ஞான தொழில்நுட்பகூடமொன்றை இப்பாடசாலைக்குப் பெற்றுக் கொடுக்கும் முயற்சியில் நாம் ஈடுபடுவோம்.



குண்டசாலை, திகன தம்பகஹ முல திகன கோனவல கார்டியன் அமைப்பு ஏற்பாடு செய்திருந்த சிரமதான பணியின் போது அங்கு சமூகமளித்திருந்த குண்டசாலை பிரதேச செயலக சமூகசேவை அலுவலர் சமூக அபிவிருத்தி தொடர்பாக விளக்கம் அளிப்பதையும் கார்டியன் அமைப்பினர்கள் பிரதேச மக்களையும் படத்தில் காணலாம்.

(மடவள பஸார் நிருபர்)

## உலகை அச்சுறுத்தும் ஐ.எஸ். தீவிரவாதிகள்; விழிப்புணர்வு சுவரொட்டிகளும் பிரசுரங்களும்




(ஏறாவூர் ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

உலகை அச்சுறுத்தும் ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் பற்றிய விழிப்புணர்வுப் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ராபிதது அஹ்லுஸ் ஸுன்னா என்ற அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான பரவலான சுவரொட்டிகள் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் உட்பட கிழக்கு மாகாணத்தின் பல முஸ்லிம் பிரதேசங்களில் ஒட்டப்பட்டுள்ளன.

அதேவேளை துண்டுப் பிரசுரங்களும் பரவலாக விநியோகிக்கப்பட்டுள்ளன. அதில்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, உலகை அச்சுறுத்தும் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளின் தோற்றமும் வளர்ச்சியும், இஸ்லாமும் தீவிரவாதமும், இஸ்லாத்தின் பார்வையில் ஐ.எஸ். ஐ.எஸ். தொடர்பாக சந்தேகங்களும் பதில்களும் போன்றவை பற்றிய விழிப்புணர்வை ராபித்து அஹ்லுஸ் ஸுன்னா என்ற தமது அமைப்பு வழங்கி வருவதாக அந்தப் பிரசுரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாலபே துப்பாக்கிசூட்டு சம்பவம் மூன்று பொலிஸ்குழுக்கள் விசாரணையில்

மாலபே சயிடம் நிறுவன பிரதம நிறைவேற்று அதிகாரி டொக்டர் சமீர சேனாரத்னவின் கார் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட சம்பவம் தொடர்பில், மூன்று குழுக்களை அனுப்பி விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக, பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதன்படி, முல்லேரியா பொலிஸார் மற்றும் மிரிஹான விஷேட குற்ற விசாரணைப் பிரிவினர் இணைந்து இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இதேவேளை, நேற்று பகல் அரச இரசாயன பகுப்பாய்வாளர் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு செல்லவுள்ளதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர். நேற்றுமுன்தினம் இரவு 08.30 அளவில், மாலபே சயிடம் நிறுவன பிரதம நிறைவேற்று அதிகாரி டொக்டர் சமீர சேனாரத்னவின் கார் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. முகத்தை முழுவதும் மறைத்தவாறு தலைக்கவசம் அணிந்து வந்த இருவரே இவ்வாறு துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதாக, சமீர குறிப்பிட்டுள்ளார்.

சயிடம் நிறுவனத்தின் முன் நடந்த இந்த சம்பவத்தில் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டவர்கள் யார் என்பது இதுவரை தெரியவரவில்லை. சந்தேகநபர்களைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### நீரில் மூழ்கி ஒருவர் பலி

(மொஹெறாமட் ஆஸிக்)

கண்டி தெல்தெனிய திகன பிரதேசத்தில் அமைந்துள்ள சுற்றுலா ஹோட்டல் ஒன்றின் நீச்சல் தடாகத்தில் நீந்திய ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் திகன பிரதேசத்தில் அமைந்துள்ள இவ் ஹோட்டலுக்கு சென்றுள்ள இருவர் நீச்சல் தடாகத்தில் நீந்திக்கொண்டிருந்தவேளை இருவரும் நீரில் மூழ்கியுள்ளனர். பின்னர் இருவரையும் திகன வைத்தியசாலையில் அனுமதித்த போதும் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றவர் கண்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## மாலபே தனியார் மருத்துவ கல்லூரியை மூடக்கோரி மட்டக்களப்பில் பேரணி




(ஏறாவூர் ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரியை மூடக்கோரியும் இலவச கல்வியை பாதுகாக்கக் கோரியும் கிழக்கு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 500 இற்கு மேற்பட்ட மாணவர்களினால் மட்டக்களப்பு நகரில் கடந்த செவ்வாய்க்கிழமை மாபெரும் கண்டனப் பேரணி இடம்பெற்றது. மட்டக்களப்பு அரசடியில் உள்ள கிழக்கு பல்கலைக்கழக சௌக்கிய பராமரிப்பு பீடத்தில் இருந்து ஆரம்பமாகிய இப்பேரணி மட்டக்களப்பு, கல்முனை பிரதான வீதியூடாக மட்டக்களப்பு நகரை ஊடறுத்து கோவிந்தன் வீதியூடாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையினை அடைந்து வாவிக்கரையூடாக மீண்டும் சௌக்கிய பராமரிப்பு பீடத்திற்கு வந்து சேர்ந்தது.

மட்டக்களப்பு காந்தி பூங்காவிலும் மட்டக்களப்பு பிரதான பஸ் நிலையத்திலும் தரித்து நின்ற மாணவர்கள் கண்டனக் கோஷங்களை எழுப்பியவாறு தமது எதிர்ப்பிற்கான விளக்கத்தையும் பரப்புரை செய்தனர்.

மாணவர்கள் தமது எதிர்ப்பினை காட்டும் வகையில் மாறுவேடம் பூண்டிருந்ததுடன் எதிர்ப்பு சுலோகங்கள் கொண்ட பதாகைகளையும் ஏந்தியிருந்தனர்.

## கதீப், முஅத்தின்மார்களுக்கு ஓய்வூதியத்திட்டம்

ஸ்ரீலங்கா கதிப் முஅத்தின் நலன்புரி அமைப்பு அதன் 20ஆண்டு நிறைவினை முன்னிட்டு பல விசேட செயற்திட்டங்களை அமுல் நடத்துவதற்கு தீர்மானித்துள்ளது.

இச்செயற்திட்டங்களை முன்னெடுப்பதற்கு ஐவர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாக அமைப்பின் செயலாளர் நாகூர் ரஹீம் தெரிவித்தார்.

கதீப், முஅத்தின்மார்கள் ஆயிரம் பேருக்கு தகாபுல் நிதி உதவித் திட்டத்தின் கீழ் உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கும் குறுகியகால ஓய்வூதிய திட்டத்தின் கீழ் இணைப்பதற்கும் அமைப்பு நடவடிக்கை எடுத்து வருவதாக அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கின்றது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது, கதீப், முஅத்தின்களின் நியமனத்தை புரிந்துணர்வு ஒப்பந்த அடிப்படையில் உறுதிசெய்து கொடுப்பதற்கும் கதீப், முஅத்தின்களின் குழந்தைகளின் கல்வி வசதிகளை செய்து கொடுப்பதற்குமான முக்கிய தேவைகளையும் நியாயமான சம்பளத்தை பெற்றுக் கொடுக்கவும் ஏற்பாடுகள் செய்துள்ளது. இந்த வசதிகளைப்பெற விரும்புவோர், பின்வரும் முகவரிக்கு மார்ச் மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புங்கள்.

செயலாளர், ஸ்ரீலங்கா கதீப், முஅத்தின் நலன்புரி அமைப்பு, இல-23 எல்பியன் வீதி, தெமட்டகொட, கொழும்பு - 09

### மர்ஹூம் நாகூர் நிகாஹ் சேவை

உண்மையான உறுதியான மஹர்அடிப்படையில் சிறந்த துணைகளைத் தேடித் தருவதற்கு எம்மை நாடவும். 30 வருட சேவையுடைய தர்ஹ் முகவர் M.A.S. Hameed (p.m), No. 460A, Mosque Lane, Kalmunaikkudy - 09. (077 3249459), N. Rahmathullah (R.I.)T.P: 0772810009. WhatsApp: 0779697790 Email - nrahmathullah786@yahoo.com

## நிகழ்வுகள்

### கலுகமுவ மஸ்ஜிதுல் ஹுதா பள்ளிவாசல் பரிசளிப்பு விழா

(உடுநுவர நிருபர்)

கெலிஓயா கலுகமுவ மஸ்ஜிதுல் ஹுதா ஜும்ஆ பள்ளிவாசல் மக்தப் பிரிவின் இரண்டாவது பரிசளிப்பு விழா 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு கலுகமுவ அஸ்-சாவியத்துல் பாஸியத்துஸ் சாதுலிய்யா வரவேற்பு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் கம்பளை கிளைத் தலைவரும் கம்பளை மிஸ்பாஹிய்யா அரபுக் கலாசாலையின் அதிபருமான மௌலவி ஹைதர் அலி பிரதம அதிதியாகவும் கலுகமுவ மத்திய கல்லூரி அதிபர் அப்துர் ரஸ்ஸாக் (நளீமி) சிறப்பு அதிதியாகவும் கலந்து கொள்ளவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### அக்குரணை சாஹிராவில் முப்பெரும் விழா

(ரிதீகம பாஹிர் பாரூக்)

அக்குரணை சாஹிராக் கல்லூரியின் முப்பெரும் விழா 11ஆம் திகதி காலை 10.00 மணிக்கு பாடசாலையில் இடம்பெறவுள்ளதாக அதிபர் ஏ. எஸ். எம். இர்ஷாட் தெரிவித்தார்.

இந்நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலை அபிவிருத்தி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்லவும் விசேட அதிதியாக முஸ்லிம் சமயம் கலசாரம் மற்றும் தபால் துறை அமைச்சர் எம். எச். ஏ. ஹலீம் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

மூன்று கோடி ரூபா செலவில் ஆசிரியர் விடுதி மற்றும் அதிபர் விடுதி நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டு விழாவும் தொழில் நுட்ப ஆய்வு கூடத் திறப்பு விழாவும் மற்றும் இல்ல விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசளிப்பு நிகழ்வும் இடபெறவுள்ளதாக அதிபர் இர்ஷாட் மேலும் தெரிவித்தார்.

### பாணகமுவ ஜும்ஆப் பள்ளிவாசலில் இஸ்லாமிய மார்க்க விளக்க மாநாடு

(குருநாகல் இக்பால் அலி)

பறகஹதெனிய ஜமாஅத் அன்சாரிஸ் சுன்னத்தில் முஹம்மதிய்யா மற்றும் பாணகமுவ ஜாமிஉத் தஹ்ஹீத் ஜும் ஆப் பள்ளிவாசலும் இணைந்து நடத்தும் இஸ்லாமிய மார்க்க விளக்க மாநாடு பாணகமுவ ஜாமிஉத் தஹ்ஹீத் ஜும் ஆப் பள்ளிவாசலில் 11-2-2017 அஸர் தொழுகை முதல் இரவு 9.00 மணி வரை அஷ்ஷெய்க் ஏ, ஆர். ரமழான் (ஸலபி) தலைமையில் இடம்பெறவுள்ளதாக ஜமாஅத் அன் சாரிஸ் சுன்னத்தில் முஹம்மதிய்யாவின் பொதுச் செயலாளர் ஏ. எல் கலிலுர்ரஹ்மான் தெரிவித்தார்.

### பெயர் மாற்றம்

சேகுவத்தவீதி, வெலிபிட்டிய, வெலிகம பிரதேசத்தைச் சேர்ந்த பெருமாள் காத்தமுத்து, வெங்கடாச்சலம் லதா, காத்தமுத்து சுரோஜனா சுதர்ஷினி, காத்தமுத்து சுபாஷினி ஆகிய நாங்கள் 2008.03.29 அன்று சுயவிருப்பத்தின் பேரின் குடும்ப சகிதம் இஸ்லாத்தை தழுவிக்கொண்டு எங்களது பெயர்களை முறையே அப்துல்லாஹ், பாத்திமா ஷப்னா, பாத்திமா றிப்கா, பாத்திமா றிஸானா என மாற்றிக்கொண்டுள்ளோம் என்பதை இலங்கை சனநாயக சோசலிஷ குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத் தருகிறோம்.

- அப்துல்லாஹ்

### பெயர் மாற்றம்

மட்டக்களப்பு ஏறாவூரைச் சேர்ந்த பஞ்சாட்சரம் சிந்துஜானி (தே.அ.அ.இல. 977250471 V ஆகிய நான் எனது சுயவிருப்பத்தின் பேரில் புனித இஸ்லாம் மதத்தைத் தழுவி எனது பெயரை பஞ்சாட்சரம் பாத்திமா சம்ஹா என மாற்றிக் கொண்டு இனிவரும் காலங்களில் சகல ஆவணங்களிலும் புதிய பெயரையே பயன்படுத்துவேன் என இத்தால் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

- பி. பாத்திமா சம்ஹா

### பெயர் மாற்றம்

கண்டி மாவட்டத்தில் இல. 12/38B இல்லவதுரை, கம்பளை எனும் முகவரியில் வசிக்கும் தீபிகா கல்யாணி தே.அ.அ.இல. 825261613 V ஆகிய நான் எனது சுயவிருப்பத்தின் பேரில் புனித இஸ்லாம் மதத்தைத் தழுவி எனது பெயரை 08.02.2017முதல் ஆயிஷா என மாற்றிக் கொண்டு இனிவரும் காலங்களில் சகல ஆவணங்களிலும் புதிய பெயரையே பயன்படுத்துவேன் என இத்தால் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

- ஆயிஷா

## நலம் வாழ

செ.தர்ஷிகா

# 2020இல் தொழுநோயை முற்றாக ஒழிப்போம்

✱ செ. தர்ஷிகா

மனிதருக்குப் பற்பல காரணங்களினாலே பல நோய்கள் உண்டாகின்றன. நோய்களைத் தீர்க்க சிகிச்சைகளும், மருந்துகளும் கண்டுபிடிக்கப்பட்டுக்கொண்டு தான் இன்னமும் உள்ளது. நோய் வந்தபிறகு மருந்து கொடுத்து நோயைத் தீர்ப்பதைவிட நோய் வராமலே தடுப்பது மிக நல்லது. பல உயிர்களை காவுகொண்ட தொழுநோய் இன்று இலங்கையில் சற்று அதிகமாக தொழு நோயாளிகள் இனம் காணப்பட்டு வருகின்றனர்.

2020 இல் இந்த தொழுநோயை இலங்கையிலிருந்து முற்று முழுதாக ஒழிக்க வேண்டிய கடமை இலங்கை மக்களுக்கும் அரசுக்கும் உள்ளது. தொழுநோய் பற்றிய அச்சம் மக்களிடையே அதிகளவில் காணப்படுகிறது. அதை ஒழித்து விழிப்புணர்வுடன் இருக்கவேண்டும். இலங்கையில் 1700களில் பல உயிர்களை காவுகொண்ட கொடிய நோயாக இருந்த இந்த தொழுநோய் 15 வருடங்களுக்கு முன்னர் தொழுநோயினை கொஞ்சம் கொஞ்சமாக இல்லாதொழித்து விட்டோம். தற்போது இந்நோய்த்தாக்கத்தால் இலங்கையில் நோயாளர்களின் எண்ணிக்கை கூடிக்குறையாமல் நேர்கோட்டில்தான் உள்ளது. எனவே இது குறித்து பொதுமக்கள் அவதானம் செலுத்த வேண்டும்.

### தொழுநோய் என்றால் என்ன?

தொழு நோய் ஒரு வகை கிருமியால் வருகிறது. காற்றின் மூலம் பரவுகிறது. முக்கியமாக தோலையும், நரம்புக்களையும் பாதிக்கிறது. மைக்கோபேக்டீரிம் என்ற கிருமி அல்லது தொழு நோய் கிருமி (இந்தகிருமியைக் கண்டு பிடித்தவர் (ஹேன்சன் என்ற விஞ்ஞனி). காற்றின் மூலம் பரவுகிறது. சிகிச்சை எடுக்காத நோயாளி தும்மும் போதும் இருமும் போதும் கோடிக்கணக்கான தொழுநோய் கிருமிகள் காற்றில் பரவுகின்றன.

### அறிகுறிகள் யாவை?

புருவ முடிகள் உதிர்ந்து போகுதல்,எண்ணெய் பூசியது போன்ற பளபளப்பான மினுமினுப்பான தோல் தோற்றம்,காதின் பின் பகுதி (மடல்) லேசாக தடித்து இருத்தல்,குதிக்காலில் பெரிய வெடிப்பு பின்பக்கமாக கணுக்காலை நோக்கி இருத்தல், பரவாத வகையின் அறிகுறிகள்: அரிப்பு இல்லாத சிவந்த அல்லது சற்று வெளிறிய உணர்ச்சி அற்ற தேமல்கள், கை, கால்களில் மதமதப்பு (உணர்ச்சி குறைந்து இருத்தல்).

தொழுநோய் ஏற்படும் வாய்ப்பு அதிகம் உள்ளவர்கள் தேமல் மேல் உள்ளவர்கள் ,நரம்புக்கள் பாதிக்கப்பட்டவர்கள், முகத்தில் தேமல் உள்ளவர்கள்,கர்ப்பிணிகள் ஆகியோரே.

### தொழுநோய் ஏற்படும் முன்பாக உடல் பாகங்களில் ஏற்படும் மாற்றங்கள்

கண் இமைகள் மூடுவதில் சிரமம்,செய்யும் வேலைகளில் விரல்களின் பலமிழந்த நிலை,காலில் செருப்பு பிடிப்பில்லாமல் தானாக கழன்று விடுதல் தோலில் காணப்படும் சீழே அதன் முதல் அறிகுறியாகும். ஆரம்ப நிலையிலேயே சிகிச்சை அளிக்காமல் விடின் தொழுநோயின் தீவிரம் அதிகரித்து தோல், நரம்பு, விரல்கள் மற்றும் கண்களுக்கு நிரந்தர பாதிப்பை ஏற்படுத்தும்.

இதன் பாதிப்பால் உடலுறுப்புகளுக்கு உணர்ச்சியின்மையும் விரல்கள் மற்றும் பாதங்களில் கலக்கூட்டுக்கள் இழப்பு ஏற்படுதலால் இவை விரல்கள் உதிர்ந்தது போலக்காட்சித் தரும். இவை முற்றும் நிலையில் உயிர் துறக்கும் நிலையை அடைவதும் உண்டு. இது பெரும்பாலும் நோயெதிர்ப்பாற்றல் குன்றியவரையே தாக்குகிறது.

### தொழுநோய் பற்றிய தவறான கருத்துக்கள்

தொழுநோய், மரபுவழி தோன்றும் நோய். தவறான நடத்தையினால் வருகிறது, அசுத்த இரத்தத்தினால் வருகிறது, தவறான உணவுப் பழக்கத்தினால் ஏற்படுகிறது,கடந்த கால பாவத்தினால் ஏற்படுகிறது என்பன இன்றும் சில மக்கள் மத்தியில் காணப்படும் தவறான கருத்துக்கள்.

மக்கள் இந்நோய் ஒரு குறிப்பிட்ட குடும்பத்தில் உள்ளவர்களுக்கு மட்டும் பரவுகிறது என்றும், தொழு நோய் கண்டவர்களை தொடுவதினால் பரவுகிறது என்றும் நினைக்கின்றனர். தொழுநோய் பெரும்பாலும் உருமாற்ற குறைபாடுகளுடன் தொடர்புடையது என்றும், உடலில் உருமாற்ற குறைபாடு ஏற்பட்டவுடன் தான், இந்நோயினைக் கண்டறிய முடியும் என்றும் நினைக்கின்றனர்.தொழுநோய் அதிகம் தொற்றக் கூடிய ஒன்று என்றும், தொற்றும் தன்மை உருமாற்றக் குறைபாட்டுடன் தொடர்புடையது என்றும் நினைக் கின்றனர். இது முற்றிலும் தவறான கருத்தாகும். தொழுநோயை குணப்படுத்த முடியாது என்று நினைத்து மூட நம்பி க்கையுடன் பலர் வாழ்ந்தும் வருகின்றனர். தொழுநோய் உள்ள குடும்பங்களில் உள்ள குழந்தைகளுக்கும் தொழுநோய் ஏற்படும் என்று நினைக்கின்றனர் இதில் எவ்வித உண்மைகளும் இல்லை.

### சிகிச்சை முறைகள்

முறையாக சிகிச்சை பெறுமிடத்து இந்நோயிலிருந்து முழுமையாக விடுபடமுடியும். சிகிச்சை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் உங்களிடமிருந்து இன்னுமொரு நபருக்கு இந்நோய் பரவாது. ஆனால் ஒருவர் இந்நோயிலிருந்து பூரணமாக குணமடைய வேண்டும். எனவே எவரும் இந்நோய் தொடர்பில் அநாவசிய பயம் கொள்ளத் தேவையில்லை.நாள்தோறும் கிரமமான மாத்திரைகளை உள்எடுத்தல். வேறு ஏதேனும் நோய்களுக்கு சிகிச்சை பெறவேண்டுமாக இருந்தால், தொழுநோய் தொடர்பில் சிகிச்சை பெற்றுவருவதை வைத்தியருக்கு தெரியப்படுத்தல் கட்டாயமாகும்.குறிப்பாக, ஒருவருக்கு வழங்கப்பட்ட மாத்திரையை குறித்த வைத்தியரினால் அதை நிறுத்துமாறு கூறும் வரையில் கிரமமாக எடுத்தல் வேண்டும். இந்நோயினால் பாதிக்கப்பட்ட ஒருவர் சிகிச்சை பெறும் பட்சத்தில் எதுவித பயமும் இன்றி குடும்ப உறுப்பினர்களோடு வழமையான வாழ்க்கையை வாழ முடியும்.ஒருவர் இதுதொடர்பிலான முழுமையான விளக்கங்களை அனைத்து அரச வைத்தியசாலைகளிலும் இருக்கின்ற சரும நோய் சிகிச்சை நிலையங்கள் மற்றும் தேசிய வைத்தியசாலையின் மத்திய தொழுநோய் சிகிச்சை நிலையத்திலும் பெற்றுகொள்ள முடியும்.



### தொழுநோய் பரவும் மாவட்டங்கள்

கொழும்பு, கம்பஹா மற்றும் காலி ஆகிய மாவட்டங்களிலும் கேகாலை, வனாத்தமுல்லை, கிரேன்பாஸ், மட்டக்குளிஆகிய பிரதேசங்களிலம் அதிகளவிலான 18 வயதிற்குட்பட்ட சிறுவர்கள் தொழுநோயால் பிடிக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. கடந்த வருடத்தில் மாத்திரம் 140 க்கும் மேற்பட்ட சிறுவர்கள் தொழுநோயால் பிடிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வருடம் இலங்கையில் 1853 தொழுநோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் 42 வீதமானவர்கள் மேல் மாகாணத்திலும் 15 வீதமானவர்கள் தென் மாகாணத்திலும் அடையாளம் காணப்பட்டதாக தேசிய தொழுநோய் ஒழிப்புப் பிரிவு குறிப்பிட்டது.

### விழிப்புணர்வு நடவடிக்கை

இலங்கையிலிருந்து 2020க்குள் முற்றாக தொழுநோயினை இல்லாது செய்தல் வேண்டும் 2020கடக்க இருப்பது இன்னும் மூன்று வருடங்கள் என்பதால் தொழுநோயாளர்களை தனிமைப்படுத்தி பயமுறுத்தி வீண் பயத்தை உண்டுபண்ணலை நிறுத்துவோம்.

மேலும் புதிதாக இந்த நோய்க்குள்ளாவோர் 18 வயதிற்குட்பட்டவராக இருப்பதால் பாடசாலை மாணவர்களையும் இது குறித்து விழிப்படையச் செய்ய வேண்டும் இவற்றுடன் ஆசிரியர்களுக்கான விழிப்புணர்வு பணியாக அனைத்து ஆசிரியர்களும் இப்பணியை மேற்கொள்ள வேண்டும். அரச வைத்தியசாலைகளில் தொழுநோய் பற்றி விபரங்களை தெரிந்து கொள்வதுடன் அதற்கான முன்னெச்சரிக்கை வேலைத் திட்டங்களில் கவனமெடுத்தல் வேண்டும்.

இதன் மூலம் தொழுநோயை இல்லாதொழித்து ஆரோக்கிய வாழ்க்கையை வாழ முடியும்.



## அறிவுலகம்



- வை.எம். ஆஷிக்

### கழுதைக்கு தெரியுமா கற்பூர வாசனை!

கழுதைக்கு தெரியுமா, கற்பூர வாசனை? நாம் தற்பொழுது இந்த பழமொழியின் உண்மை வடிவினை காண்போம். சங்க காலத்தில் நம் முன்னோர்கள் படுக்க பாய் மட்டுமே பயன்படுத்தினார்கள்.

அந்த பாய் புல்லைக் கொண்டு தயாரிக்கப்பட்டதாகும். அந்த புல் கற்பூர புல், கோரைப் புல் என இரு வகைப்படும். கோரைப் புல்லுக்கு கழு என்று வேறோர் பெயரும் உண்டு. கற்பூர புல் கொண்டு தயாரிக்கப்படும் பாயில் கற்பூர வாசனை வரும். கற்பூரப்பாயின் விலை அதிகம். பெரிய செல்வந்தர்கள் தான் அதனை பயன்படுத்துவார்கள்.

கோரை புல் கொண்டு தயாரிக்கப்படும் பாய் சாதாரணமாக இருக்கும். அதன் விலையும் குறைவு. பாமர மக்கள் பயன்பாட்டிற்கு உதவும். இதனை மனதில் வைத்து வந்த பழமொழிதான் கழுதைக்கு தெரியுமா கற்பூர வாசனை. கழு என்ற கோரை புல்லின் பெயருடன் தைக்க என்ற செயலும் இணைந்து ''கழுதைக்க, கழுதைக்க'' என்று சொல்லிச் சொல்லி அவ்வார்த்தை மருவி ''கழுதைக்கு'' என்று ஆகிவிட்டது.

அதன் உண்மையான அர்த்தம் கழு என்ற கோரை புல் கொண்டு செய்யப்படும் பாயில் எப்படி கற்பூர வாசனை வரும்? என்பது தான். அது தான் தற்போது மருவி கழுதைக்கு தெரியுமா கற்பூர வாசனை என்றாகிவிட்டது.



### பற்கள் தொடர்பான விழிப்புணர்வு

குழந்தைகளின் பற்களின் வரிசை மிக அழகானதாக இருக்கும். அதை சரியாக பராமரிக்காமல் விட்டுவிட்டால் சிறிய வயதிலேயே சொத்தைப் பற்கள் உண்டாகிவிடும். பற்கள் மிக வேகமாகவே வலுவிழந்துவிடும். கீழ்வரும் சில பராமரிப்புகளை மேற்கொண்டால் பற்களை பழுதடையாமல் ஆரோக்கியமாகப் பாதுகாக்க முடியும்.

குழந்தைகளின் பற்கள் பராமரிப்பில் பெற்றோர்கள் அக்கறை காட்ட வேண்டியது அவசியம். கைக்குழந்தையாக இருக்கும் போது, ஒவ்வொரு முறை பால் குடித்த பின்பும் அந்த பால் பற்களை மென்மையான துணி கொண்டு துடைத்துவிட வேண்டும்.

பால் பற்கள் முளைத்ததும் குழந்தைகளுக்கென விற்கும் மென்மையான பற்தூரிகை கொண்டு தினமும் காலை, இரவு என இரு வேளையிலும் பல் துலக்கி விடுங்கள். இரவு நேரங்களில் பல குழந்தைகளுக்கு பால் புட்டியை வாயில் வைத்தபடியே தூங்க வைத்துவிடுவார்கள். அதேபோல இரவு முழுக்க குழந்தைகளின் பற்களுக்குள் சொக்கலேட், இனிப்பு போன்றவை ஒட்டிக்கொண்டிருக்கும். இதனால் சிறுவயதினிலேயே குழற்தைகளுக்கு பற்கள் சொத்தை விழ வாய்ப்பு உண்டு. அதனால் சாப்பிட்டு முடித்தவுடன் வாய் கொப்பளித்தல், தண்ணீர் குடித்தல் ஆகியவற்றால் பற்களில் ஒட்டியிருக்கும் உணவுப்பொருளை எளிதில் சுத்தம் செய்துவிட முடியும்.



குழந்தைகளுக்கு 7 முதல் 12 வயதிற்குள் பால் பற்கள் விழுந்து நிரந்தர பற்கள் முளைத்திருக்க வேண்டும். அதில் பிரச்சினை இருந்தால் உடனடியாக மருத்துவரை அணுக வேண்டும்.

சிறு வயதினிலேயே அதிகமாக சொக்கலேட், பிஸ்கட் ஆகியவற்றை சாப்பிட்டால் பல் பிரச்சினைகள் வரும் என சில பெற்றோர்கள் கண்டிப்புடன் நடந்துகொள்வார்கள். ஆனால் அவ்வளவு கட்டுப்பாடாக இல்லாமல் அளவாக சாப்பிட வலியுறுத்தலாம். அதேசமயம் சாப்பிட்டு முடித்தவுடன் அவர்களாகவே மறக்காமல் வாய் கொப்பளித்துக் கொள்ள பழக்கப்படுத்த வேண்டும்.

இதுபோன்ற சின்ன சின்ன விஷயங்களை மனதில் கொண்டு, பற்களைப் பற்றிய விழிப்புணர்வை பிள்ளைகளுக்கு ஏற்படுத்துவது அவசியம்.

### பேஸ்புக்கின் புதிய வசதி

சமூகவலைதளங்களில் முன்னணி வகிக்கும் பேஸ்புக் தற்போது சூப்பரான அப்டேட்டை கொண்டுவந்துள்ளது.

டிஸ்கவர் பீபல் என்னும் புதிய விடயம் பேஸ்புக்கில் சேர்க்கப்பட்டுள்ளது. லிங்க்ட் இன் மற்றும் டின்டர் சமூகவலைதளங்களில் உள்ள விடயங்களே பேஸ்புக்கில் கலவையாக சேர்க்கப்பட்டுள்ளன.

இதன் மூலம் புதிய நட்புகள் கிடைக்கும். நாம் வசிக்கும் நகர மக்களின் பேஸ்புக் நட்புகளை கூட இதன் மூலம் பெற முடியும். நாம் இருக்கும் பேஸ்புக் பட்டியலில் யாரெல்லாம் இருக்கிறார்கள் என்பதை இதன் மூலம் பார்க்க முடியும்.

அடுத்தவர்களின் பேஸ்புக் கணக்கு மற்றும் நம் கணக்கில் ஒற்றுமையாக உள்ள நண்பர்கள் பட்டியல், இடங்கள், பக்கங்களை காண முடியும்.



டின்டரில் இருப்பதை போல புதிய நட்புடன் இணையும் வரை அவர்களின் கணக்கை பார்வையிடலாம். பின்னர் அவர்களை நட்புவட்டம் மற்றும் பின்தொடரல் மற்றும் தகவல்களை பரிமாறலாம். இந்த வசதி தற்போது ஐ.ஓ.எஸ் மற்றும் ஆண்ட்ராய்டு ஸ்மார்ட்போன்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. கணினியில் பேஸ்புக் உபயோகப்படுத்துபவர்களுக்கு இந்த வசதி இன்னும் வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### யுரேகா! யுரேகா! யுரேகா!

நாணயத்தை தண்ணீரில் போட்டால் மூழ்கிவிடுகிறது. ஆனால், ஒரு பிரமாண்டமான கப்பல் தண்ணீரில் மிதக்கிறதே. மீனவர்கள் பயன்படுத்தும் படகு, மரம் போன்ற மிதக்கும் பொருள்களால் செய்யப்பட்டாலும், மிகப் பெரிய கப்பல்கள் இரும்பு போன்ற உலோகத்தால் செய்யப்படுகின்றன. அப்படியானால் அந்தக் கப்பல்கள் மூழ்கிவிட வேண்டுமே, எப்படி மிதக்கின்றன?

1. கப்பல் தண்ணீரில் இருக்கும்போது, அதன் உடற்பகுதி ஓரளவு தண்ணீரில் அமிழ்ந்திருப்பதை பார்த்திருப்பீர்கள். அதாவது, கப்பலின் எடைக்குச் சமமான தண்ணீர் இடம்பெயரும். எனவே கப்பலின் குறிப்பிட்ட அளவு அடிப்பகுதி கடலில் அமிழ்ந்திருக்கும்.

2. 1000 டொன் எடையுள்ள கப்பலின் உடற்பகுதி, அதே அளவு எடையுள்ள தண்ணீரை இடம்பெயரச் செய்யும். இதை, ஒரு கப்பலின் வெளியேற்றும் திறன் என்று குறிப்பிடுவார்கள். தண்ணீரில் அமிழ்ந்துள்ள கப்பலின் ஒவ்வொரு பகுதியையும் தண்ணீர் அழுத்துகிறது. தண்ணீரில் இயற்கையாகவே உள்ள அழுத்தம் கப்பலின் உடற்பகுதி மீது செலுத்தப்படுகிறது. அதேநேரம் கப்பலின் எடையும் தண்ணீரை அழுத்துகிறது. இந்த இரண்டு அழுத்தங்களும் சமநிலையை ஏற்படுத்தும் வகையில் கப்பல்கள் வடிவமைக்கப்படுகின்றன.

3. செங்குத்தான நிலையில் உள்ள அழுத்தங்களின் சக்தியே, கப்பலின் எடையை சமநிலைக்குக் கொண்டு வருகிறது. அப்போது கப்பல் மிதக்கிறது. இது மிதத்தல் தொடர்பான ஆர்கிமிடீஸ் தத்துவம். ஒரு நாள் குளியல் தொட்டியில் தன் உடலை அமிழ்த்தியபோது, அதே அளவு தண்ணீர் வெளியேறியதை வைத்தே ஆர்கிமிடீஸ் இதைக் கண்டுபிடித்தார். அப்போது ஏற்பட்ட உற்சாகத்தில் 'யுரேகா, யுரேகா' (நான் கண்டுபிடித்துவிட்டேன்) என்று கத்திக் கொண்டே குளியலறையில் இருந்து வெளியே ஓடிவந்தார்.

4. மேலும், கப்பலின் உட்பகுதியில் குறிப்பிட்ட அளவு காற்று இருக்கிறது. காற்றுக்கு வடிவமில்லாததால், நாம் அதை கணக்கில் எடுக்கத் தவறுகிறோம். கப்பலில் உள்ள பொருட்களை வெறுமனே திரட்டி தண்ணீரில் போட்டால் அது மூழ்கிவிடும். அடர்த்தி குறைவாக இருக்கும் வகையில் கப்பல் வடிவமைக்கப்படுவதும் கப்பல் மிதப்பதற்கு முக்கிய காரணம். ஒவ்வொரு கப்பலிலும், படகிலும் அதற்கான கொள்ளளவு உண்டு. அதை மீறினால் அது மூழ்கிவிடும்.


5. இதற்கு எடுத்துக்காட்டு, 1914இல் உலகின் மிகப் பெரிய கப்பலாக இருந்த டைட்டானிக்.

டைட்டானிக் பனிப்பாறை மீது மோதிய போது, கப்பல் உடைந்து அதனுள் தண்ணீர் புகுந்துவிட்டது. அப்போது எடை தாங்காமல் அது மூழ்கிவிட்டது. ஒரு பேப்பரை தண்ணீரில் மிதக்கவிட்டு அதன் மீது குண்டூசியை வைத்தால், பேப்பர் முழுகினாலும் குண்டூசி மூழ்காது. ஆனால், நேரடியாக குண்டூசியை தண்ணீரில் போட்டால் அது மூழ்கிவிடும். குண்டூசியை தண்ணீரில் போடும்போது, அது கிடைமட்டமாக விழாது.

6. புவியீர்ப்பு சக்தியின் காரணமாக அதன் எடை கூடிய பகுதி கீழே வரும்படி விழுவதால் மூழ்கிவிடுகிறது. அதேநேரம், பேப்பர் மீது தண்ணீரில் கிடைமட்டமாக இருப்பதால் அழுத்தம் சமநிலை அடைந்து மிதக்கிறது. மனிதர்களான நாமும் இதே போல் மிதக்க முடியும். மெத்தையில் படுப்பது போல் காலை நேராக நீட்டி கிடைமட்டமாக தண்ணீரில் படுத்தால், நாம் மூழ்க மாட்டோம்.

7. இப்படிச் செய்யும்போது கப்பலில் செயல்படும் அதே அழுத்தம் நமது உடலிலும் செயல்பட்டு மிதப்போம். இப்படி மிதப்பதற்கு மற்றொரு முக்கிய காரணம், நமது நுரையீரலில் அடைக்கப்பட்டுள்ள காற்று. அது ஒரு பலூன் போலச் செயல்படுகிறது. கப்பலைப் போலவே காற்றில் அமிழ்ந்துள்ள பொருள்களுக்கும் ஆர்கிமிடீஸ் தத்துவம் பொருந்தும்.

8. தனது எடைக்குச் சமமான காற்றின் எடையைவிடக் குறைவான காற்றைக் கொண்டிருந்தால் மட்டுமே ஒரு பலூன் பறக்கிறது. அதே அளவு காற்றை அதுவும் கொண்டிருந்தால், இரண்டிலும் ஏற்படும் அழுத்தம் சமநிலையை ஏற்படுத்திவிடும். அப்பொழுது பலூன் பறக்காது.





தொடர் - 1

# நவீன துருக்கி

## மதச்சார்பின்மையிலிருந்து இஸ்லாமியவாதத்தை நோக்கி

அஷ்கர் தஸ்லீம்

### அறிமுக குறிப்பு

நவீன இஸ்லாமிய உலகில் மிகவும் வெற்றிகரமாக நடைபோடும் நாடாக துருக்கி அடையாளப்படுத்தப்படுகிறது. ஐரோப்பாவையும் ஆசியாவையும் இணைக்கும் வகையில் அமைந்திருக்கின்ற துருக்கி, ஐரோப்பிய நாடாகவே கருதப்படுகின்றது. ஒரு காலத்தில் ஐரோப்பாவின் நோயாளி என அழைக்கப்பட்ட துருக்கி, இன்று உலக வங்கிக்கான தனது அனைத்துக் கடன்களையும் செலுத்தி முடித்துள்ளது.

கிலாபத்தை சுமந்து இஸ்லாமிய உலகை வழிநடாத்தும் பணியை பல நூற்றாண்டுகளாக துருக்கி செய்து வந்தது. 1924 இல் முஸ்தபா கமால் என்பவரால் கிலாபத் முறைமை இல்லாதொழிக்கப்பட்டதன் பின்னர், மதச்சார்பற்ற நாடாகவே துருக்கி இருந்து வருகின்றது. இருப்பினும், 2002 இல் துருக்கியின் ஆட்சியைக் கைப்பற்றி இன்றுவரை வெற்றிகரமாக ஆட்சி நடாத்தி வரும் நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சி (AKP) மிதவாத இஸ்லாமியவாதக் கட்சியாகக் கருதப்படுகின்றது. இவர்கள் மிகக் குறுகிய காலத்தில் பொருளாதாரத்திலும் அரசியலிலும் ஏனைய துறைகளிலும் மிகச் சிறந்த நிலைக்கு துருக்கியை கொண்டு வந்துள்ளனர்.

மேற்கின் மதச்சார்பற்ற கருத்துக்களால் மூளைச் சலவை செய்யப்பட்டிருந்த முஸ்தபா கமால், இஸ்லாமிய கிலாபத் முறைமையை இல்லாதொழித்ததன் பின்னர், துருக்கியின் கலாசாரம் மேற்கத்தேய பாணி கொண்டதாக மாற்றப்பட்டது. பெண்கள் தலையை மறைப்பதும், அரபு மொழியின் அதான் சொல்வதும் தடை செய்யப்பட்டன. நாட்டின் சட்டங்கள் மாற்றப்பட்டன. இஸ்லாமிய சமூகம் என்பதற்கான எந்த அடையாளத்தையும் முஸ்தபா கமால் விட்டு வைக்கவில்லை. இவ்வாறான கடும் மதச்சார்பின்மைக்கு மத்தியிலும் துருக்கிய மக்களின் வாழ்க்கையிலும் உள்ளத்திலும் இஸ்லாம் ஆழமாக வாழ்ந்து வந்தது.

மாபெரும் அறிஞர் முஜத்தித் பதீஉஸ்ஸமான் ஸஈத் நூர்ஸி, துருக்கியர் மத்தியில் மிகுந்த செல்வாக்குச் செலுத்திய ஒரு அறிஞர் ஆவார். இவர், அதாதுர்க் கொண்டு வந்த மதச்சார்பின்மையின் கோட்பாடுகளை மிகத் தெளிவாக மறுத்தார். எனவே, இவர் நாடு கடத்தப்பட்டார். 1925 முதல் 1960 ல் தான் மரணிக்கும் வரையிலான 35 வருடங்களையும்; நாடு துறந்த நிலையிலேயே கழித்தார் அவர்.

இமாம் பதீஉஸ்ஸமான் ஸஈத் நூர்ஸியின் மாணவர்கள் துருக்கி முழுதும் பரவி இமாமவர்களின் சிந்தனைகளை மக்கள் மயப்படுத்தும் பணிகளில் ஈடுபட்டனர். பலர் அவர் எழுதிய ரிஸாலா ஏ நூர் எனும் அல்குர்ஆன் விரிவுரையை தமது கைகளாலேயே பிரதி பண்ணி மக்கள் மத்தியில் விநியோகித்து வந்தனர். இமாம் பதீஉஸ்ஸமான் ஸஈத் நூர்ஸி உதாரணங்கள் மூலம் மிகப் பெரும் உண்மைகளையும் கோட்பாடுகளையும் விளக்கும் அபார ஆற்றலைப் பெற்றிருந்தார். அவரது உரைகளையும் எழுத்துக்களும் துருக்கியர் மத்தியில் ஆழமாக செல்வாக்குச் செலுத்தின.

1950 இல் துருக்கியின் பிரதமராக அத்னான் மன்தரீஸ் தெரிவு செய்யப்பட்டார். அத்னான் மன்தரீஸ் இஸ்லாமியவாதியாக இருக்காத போதும் துருக்கிய நலனுக்காக அனைத்து சக்திகளோடும் உறவாட முடியும் என்று கருதுகின்ற ஒரு தேசியவாதியாக இருந்தார். இவர், இஸ்லாமியவாதிகளுடன் நெருக்கமாகச் செயற்பட்டார். இதனை அவதானித்து வந்த துருக்கியின் மதச்சார்பின்மையையும் அதாதுர்க்கிஸத்தையும் பாதுகாக்கும் இராணுவம் 1960 இல் இராணுவப் புரட்சி செய்து அத்னான் மன்தரீஸ், அவர் சார்ந்திருந்த ஜனநாயகக் கட்சியின் ஸ்தாபகர் ஜலால் பாயார் மற்றும் அவரது பல ஆதரவாளர்கள் என அனைவருக்கும் மரண தண்டணை விதித்தது. இது துருக்கியில் இஸ்லாமிய இயக்கத்திற்கு பெரும் அடியாக இருந்தது. இதே வருடம்தான் நாடு துறந்து அவ்ரிஃபா நகரில் வசித்து வந்த பதீஉஸ்ஸமான் நூர்ஸியும் மரணித்தார்.

துருக்கியின் இஸ்லாமிய அரசியல் தந்தையாகக் கருதப்படும் நஜ்முத்தீன் அர்பகான் 1972 இல் ஸலாமா கட்சியை ஸ்தாபித்தார். நீதியான ஆட்சிக்கு அழைப்பு விடுத்த அர்பகான் துருக்கியின் கடும்போக்கு மதச்சார்பின்மையின் ஆபத்துக்களை தெளிவுபடுத்தினார். அர்பகான் முதன் முதலாக ஸ்தாபித்த ஸலாமா கட்சி இஸ்லாமியவாதக் கட்சியாக அல்லாது தேசியவாத சீர்திருத்தக் கட்சியாகவே தென்பட்டது. ஏனெனில் இஸ்லாமியவாதக் கட்சியாகத் தென்பட்டிருப்பின் முளையிலேயே அது கிள்ளியெறியப்பட்டிருக்கும். ஆனாலும், 1980இல் ஸலாமா கட்சியை துருக்கிய மதச்சார்பற்ற அரசு தடை செய்தது. இந்தத் தடையால் சளைத்துப் போகாத அர்பகான் 1983 இல் ரஃபாஹ் கட்சியை ஸ்தாபித்தார். இக்கட்சியின் போக்குகள் மிகத் தெளிவாக இஸ்லாமியமாகவே இருந்தன.

1994 இல் நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பல நகரசபைகளில் இக்கட்சி வெற்றி பெற்றது. அத்தோடு இந்தக் கட்சியில் இளம் செயற்பாட்டாளராக இருந்த தற்போதைய பிரதமர் ரஜப் தையிப் அர்துகான் ஸ்தான்பூல் நகர மேயர் பதவியை வென்றார்.

1994 இல் பதவியேற்ற அர்துகான் நான்கு வருடங்களுக்குள் மாபெரும் மாற்றங்களை நிகழ்த்திக் காட்டினார். அடிக்கடி துண்டிக்கப்பட்டு வந்த மின்சார மற்றும் நீர் விநியோகம் சீர் செய்யப்பட்டது. அழுக்குகள் நிறைந்திருந்த நகரை பசுமையானதாக மாற்றினார் அவர். இந்த மாற்றங்களின் வெற்றிக்கான காரணத்தை அவரிடம் வினவிய போது, ''நீங்கள் அறிந்திராததொரு ஆயுதம் எம்மிடம் இருக்கின்றது. அதுதான் ஈமான். எம்மிடம் இஸ்லாமிய ஒழுக்கங்களும் இறைதூதரின் அழகிய முன்மாதிரியும் இருக்கின்றன.'' என்று குறிப்பிட்டார். இந்த உயர்ந்த ஆன்மீகமும் அவரது சாதனைகளும் துருக்கியில் அவருக்கு மிகுந்த மக்கள் செல்வாக்கைப் பெற்றுக் கொடுத்தன.

1995 இல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் ஆச்சரியத்துக்குரிய வகையில் ரஃபாஹ் கட்சி 550 ஆசனங்களில் 158 பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்று வெற்றி பெற்றது. எனவே, 1924 இல் உஸ்மானிய கிலாபத் வீழ்ந்ததன் பின் துருக்கியில் முதலாவது இஸ்லாமியவாத பிரதமராக 1996ல் அர்பகான் பதவியேற்றார்.

அர்பாகனின் திட்டம் தோற்றுப் போய்விடும் என்றும் அதன் மூலம் துருக்கியர் மத்தியில் எதிர்மறையானதொரு கருத்தை ஏற்படுத்தலாம் என்றும் இராணுவம் கருதியது. ஆனால், ஒரு வருடத்துக்குள் 38 பில்லியன் டொலராக இருந்த துருக்கியின் கடன் தொகையை 15 மில்லியனாக மாற்றினார் அர்பகான். குர்திஷ் பிரச்சினைக்கான தீர்வை நோக்கி நகரலானார். சர்வதேச ரீதியில் சிறந்த இராஜதந்திர உறவுகளை அமைத்தார். துருக்கியப் பொருளாதாரம் முன்னேறலானது. இந்த வெற்றியின் இரகசியம் இஸ்லாமாகவே இருந்தது.

அச்சமடைந்த துருக்கிய இராணுவம் அர்பகானின் அரசுக்கெதிரா புரட்சி செய்து ஆட்சியைக் கவிழ்த்து ரஃபாஹ் கட்சியையும் தடை செய்தது. அர்துகானும் இஸ்லாமியக் கவிதையொன்று வாசித்தார் என்ற குறச்சாட்டில் சிறையிபிடிக்கப்பட்டார். இச் சம்பவங்களால் அர்பகான் நம்பிக்கையிழந்து விடவில்லை. 2000 ஆம் ஆண்டில் ஃபழீலா என்ற கட்சியை ஆரம்பித்தார் அவர். ஐந்து வருட அரசியல் தடையில் இருந்தமையினால் இந்தக் கட்சி அர்பகானின் பெயரால் ஸ்தாபிக்கப்படாது அவரது ஆதரவாளரான கூதான் என்பவர் மூலம் ஸ்தாபிக்கப்பட்டது. இந்தக் கட்சியில் இப்போதைய ஜனாதிபதி அர்துகானும், முன்னாள் ஜனாதிபதி (அப்போது ஜனாதிபதியாக இருக்க வில்லை) அப்துல்லாஹ் குல்லும் இணைந்து செயற்பட்டனர்.

பின்னர், அரசியல் அணுகுமுறையிலும் வழிமுறையிலும் மாற்றங்கள் வர வேண்டும் என்று கருதிய அர்துகானும் அப்துல்லாஹ் குல்லும் அர்பகானின் கட்சியிலிருந்து வெளியேறினர். இவர்கள் இருவரும் இணைந்து ஏனைய பலரையும் இணைத்துக் கொண்டு நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சியை 2001 இல் ஸ்தாபித்தனர். பின்னர், 2002 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற இக்கட்சி இதுவரையும் தொடர்ந்து 3 பொதுத் தேர்தல்களிலும் வெற்றி பெற்று வெற்றிகரமாக ஆட்சி நடாத்தி வருகின்றது.

* * *

**இந்தப் பத்தியில் நாம் நவீன துருக்கியின் அரசியல் வரலாற்றை சுருக்கமாக நோக்கியுள்ளோம். இனிவரும் பத்திகளில் இவற்றை விளக்கமாகவும், அவற்றிலுள்ள அரசியல் நுணுக்கங்களையும், அவற்றிலிருந்து இலங்கைக்கு நாம் பெறக்கூடிய படிப்பினைகள் குறித்தும் நோக்கவுள்ளோம்.**

(திங்கள் தொடரும்)



**அரசியல் அனுகுமுறையிலும் வழிமுறையிலும் மாற்றங்கள் வர வேண்டும் என்று கருதிய அர்தூகானும் அப்துல்லாஹ் குல்லும் அர்பகானின் கட்சியிலிருந்து வெளியேறினர். இவர்கள் இருவரும் இணைந்து ஏனைய பலரையும் இணைத்துக் கொண்டு நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சியை 2001 இல் ஸ்தாபித்தனர். பின்னர், 2002 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற இக்கட்சி இதுவரையும் தொடர்ந்து 3 பொதுத் தேர்தல்களிலும் வெற்றி பெற்று வெற்றிகரமாக ஆட்சி நடாத்தி வருகின்றது.**

**1950 இல் துருக்கியின் பிரதமராக அத்னான் மன்தரீஸ் தெரிவு செய்யப்பட்டார். அத்னான் மன்தரீஸ் இஸ்லாமியவாதியாக இருக்காத போதும் துருக்கிய நலனுக்காக அனைத்து சக்திகளோடும் உறவாட முடியும் என்று கருதுகின்ற ஒரு தேசியவாதியாக இருந்தார். இவர், இஸ்லாமியவாதிகளுடன் நெருக்கமாகச் செயற்பட்டார்.**

# நான் புரிந்துகொண்ட முஸ்லிம்கள்

அ.மார்க்ஸ்

**தமிழ்நாட்டு மனித உரிமை செயற்பாட்டாளர் பேராசிரியர் அ.மார்க்ஸ் முஸ்லிம்கள் என்ற தனது நூலுக்கு எழுதியுள்ள முன்னுரை**

(நேற்றைய தொடர்ச்சி)

நமது எளிமைப்படுத்தப்பட்ட புரிந்துகொள்ளல் அல்லது புரிந்துகொள்ள இயலாமை குறித்த உணர்வு மீட்டப்படுகிறது.

அந்த வகையில் 'முஸ்லிம்கள்' எனும் இந்தத் தொகுப்பு எனக்கு மிகவும் பிடித்த ஒன்றாக அமைகிறது.

இந்த நூல் மூன்று பகுதிகளாக உள்ளது. 'முஸ்லிம்கள்' எனும் முதற் பகுதி இயக்கப் பணிகளினூடாக நான் சந்தித்த, என் தேடுதல்களினூடாகக் கண்டடைந்த சில முஸ்லிம்களைப் பற்றிச் சொல்கிறது. முஸ்லிம்களின் பண்புகளை மட்டுமல்ல அவர்களின் துயரங்களையும் ஆறுதல்களையும் கூட அக்கட்டுரைகள் பேசுகின்றன .

'முஸ்லிம் சமூகம்' எனும் இரண்டாம் பகுதி மேலப்பாளையம், நெல்பேட்டை முதலான மிகவும் அடித்தள முஸ்லிம்கள் வசிக்கும் சமூகங்கள் இன்றைய அரசியலில் சந்தேகத்திற்குரியவையாகக் கட்டமைக்கப்படும் அவலம் குறித்தும், அரசுத் துறைகளில் முஸ்லிம் பெண்களின் நிலை, இராணுவத்தில் முஸ்லிம்கள் ஒதுக்கப்படும் நிலை, சாதி மற்றும் தீண்டாமைக்கு இடம் கொடுக்க வாய்ப்பில்லாத முஸ்லிம் மதத்திற்குள்ளும் இந்தியச் சாதி முறை தன் விஷக் கொடுக்கை நீட்ட முயல்வது ஆகியன குறித்துப் பேசுகிறது. முஸ்லிம் சமூகத்திற்குள் போலீஸ் பக்ருதீன்கள் உருவாக்கப்படும் அரசியல் ஒரு மேலோட்டமான பார்வையில் எளிதில் புரிந்து கொள்ளக் கூடிய ஒன்றல்ல என்பதை நாம் விளங்கிக் கொள்வதற்கு இக்கட்டுரைகள் உதவும்.



'உரையாடும் முஸ்லிம்கள்' எனும் இந்நூலின் மூன்றாம் பகுதி முஸ்லிம்கள் என்றால் உலகம் முழுவதும் ஒரே மாதிரியாகச் சிந்திக்கிற, பேசுகிற, வெளிப்படுகிற ஒரு சமூகம் என்கிற பொதுப்புத்தி சார்ந்த ஒரு கருத்தில் உறைந்துள்ள பல பிரச்சினைகளைக் கட்டுடைக்கிறது. முஸ்லிம் மத அறிஞர்கள் நிறைந்த ஒரு அவையில் வாசிக்கப்பட்ட இக்கட்டுரை சற்று ஆழமானது. முஸ்லிம் சமூகத்திற்குள் எப்படி மிகவும் எதிர் எதிரான கருத்துக்களுக்கும் வாய்ப்புள்ளது என்பதை ஆதாரங்களுடன் விளக்கும் இக்கட்டுரை முக்கியமான ஒன்று. இக்கட்டுரையின் ஊடாக முன்வைக்கப்படும் தேவ்பந்த் மதரசா பற்றிக்செய்திகள் நாம் அறிந்துகொள்ள வேண்டிய ஒன்று.

இந்நூலின் இறுதிப் பகுதியாக அமைந்துள்ள 'கருத்துச் சுதந்திரமும் முஸ்லிம்களும்' எனும் பகுதியும் மிகவும் கவனமாக வாசிக்கப்பட வேண்டிய ஒன்று. டென்மார்க் இதழ் ஒன்று நபிகள் நாயகத்தை இழிவு செய்து வெளியிட்ட கார்டூன்கள், Innocense of Muslims மற்றும் 'விஸ்வரூபம்' முதலான திரைப்படங்கள் ஆகியவற்றுக்கு எதிராக இங்கு முகிழ்த்த எதிர்ப்புகளை இங்கே ''கருத்துச் சுதந்திரம்'' என்கிற பெயரால் சில மேற்தட்டு அறிவுஜீவிகள் எதிர்த்து அவதூறு செய்தபோது முஸ்லிம்களின் இந்த எதிர்வினைக்கான பின்புலங்களை ஆராய்ந்த மூன்று முக்கிய கட்டுரைகள் இப்பகுதியில் உள்ளன.

ஒரு சமூகத்தில் இத்தகைய கேலிகள் அனுமதிக்கப்படுவது என்பதே இத்தகைய கேலிகளுக்கு இடமில்லாத இன்னொரு சமூகத்தைக் குறித்து இத்தகைய கேலிகளைச் செய்வதற்கான நியாயமாகிவிடாது ''மற்றவர்களைக் காயப்படுத்துவதற்கான உரிமை'' ((right to offend others) என்பனபோன்ற கவர்ச்சிகரமான தத்துவங்களெல்லாம் ஒரு வலுவான பெரும்பான்மைச் சமூகம் ஏற்கனவே துன்புறுத்தப்பட்ட ஒரு எளிய சிறுபான்மைச் சமூகத்தை மேலும் காயப்படுத்துவதற்கான 'லைசன்ஸ்' ஆகிவிடாது கலைக்கு ஒரு கலாபூர்வமான மதிப்பு மட்டுமல்ல, பாரதூரமான விளைவுகளைச் சமூகத்தில் ஏற்படுத்தவல்ல ஒரு பிரச்சார மதிப்பும் அதற்கு உண்டு என்கிற கருத்துக்களை முன்வைத்துப் பேசும் இக்கட்டுரைகள், முஸ்லிம்கள் மீது இன்று தொடுக்கப்படும் இந்தத் தாக்குதல்கள் எல்லாம் எப்படி உலக முஸ்லிம்கள் மத்தியில் ஒரு நெருக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதையும் சமூக வலைப்பின்னல்கள் இதற்கு எப்படி உதவுகின்றன என்பதையும் சுட்டிக் காட்டுகின்றன.

முஸ்லிம் சமூகம் என்னிடம் காட்டும் அன்பிற்கு நான் என்றென்றும் நன்றி உடையவன்.

இந்த முன்னுரையை எழுதிக் கொண்டிருக்கும் நேரத்தில் துரைப்பாக்கத்தில் கண்ணாடிக் கடை வைத்திருக்கும் நண்பர் இஸ்மாயில் எனது 'பவர் கிளாசை' வீடு தேடிக் கொண்டு வந்து கொடுத்துச் செல்கிறார்.

அவரது கடைக்கு நான் வந்து 'பிரேமை'த் தேர்வு செய்து, பின்னொரு நாள் வந்து அதை வாங்கிச் செல்லும் சிரமத்தையும், நேரத்தையும் தவிர்க்கும் முகமாக அவர் அதை அன்போடு செய்கிறார். இப்படி நிறைய அன்பு வெளிப்பாடுகளை நான் முஸ்லிம் நண்பர்களிடம் கண்டு மனம் கசியும் தருணங்கள் நிறைய.

சவூதி அரசு அல்லது முஸ்லிம் நாடுகளில் நடைபெறும் மனித உரிமை மீறல்கள் முதலியன குறித்து நான் செய்யும் விமர்சனங்களின் மீது என்னிடம் கடுமை காட்டும் முஸ்லிம் நண்பர்களைக் கூட என்னால் புரிந்து கொள்ள இயல்கிறது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில்

# 759 தொல்பொருள் இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன

## கல்வி அமைச்சர்

(அ.அருண் பிரசாந்த்)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த 759 இடங்கள் இணங்காணப்பட்டுள்ளதாக தெரிவித்த கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம், திருகோணமலை மாவட்டத்தில் ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆய்வுகள் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதாகவும் மேலும் தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தொல்பொருளியல் பெறுமதிமிக்க இடங்கள் பல வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இணங்காணப்பட்டுள்ளன. வடக்கில் கிளிநொச்சி மாவட்டத்தில் 14 இடங்களும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 136 இடங்களும் யாழ்ப்பாணத்தில் 48 இடங்களும் வவுனியாவில் 50 இடங்களும் மன்னாரில் 60 இடங்களும் இணங்காணப்பட்டுள்ளன.

அதேபோன்று கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் 423 இடங்களும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 03 இடங்களும் திருகோணமலை மாவட்டத்தில் 25 இடங்களும் உள்ளடங்களாக மொத்தம் 759 இடங்கள் இணங்காணப்பட்டுள்ளன. அத்தோடு, புத்தளம் மாவட்டத்தில் 40 இடங்களும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

திருகோணமலை மாவட்டத்தில் மேலும் தொல்பொருள் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதுடன், மட்டக்களப்பு மாவட்டத்தில் மேலதிக ஆய்வுகள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளன. மேலும், குறித்த இடங்களில் தொல்பொருள் திணைக்களத்தினால் 23 இடங்கள் மாத்திரமே பாதுகாக்கப்படுகின்றன. எதிர்காலத்தில் ஏனைய இடங்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கு விசேட நிதி ஒதுக்கீடும் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது, 3 மில்லியன் ரூபா மாத்திரமே தொல்பொருள் வேலைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது என்றார்.

# கல்முனை ஸாஹிராவில் வரலாற்று சாதனை



(கோணாவத்தை எம்.எப்.றிபாஸ்)

2015 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் அம்பாறை மாவட்டத்தில் முதல் ஆறு இடங்களை கல்முனை ஸாஹிர தேசியக் கல்லூரி மாணவர்கள் பெற்று வர லாற்று சாதனை புரிந்துள்ளனர்.

இலங்கையில் க.பொ.த.உயர்தர வகுப்புக ளில் தற்போது கற்றுக் கொண்டிருக்கின்ற மாணவர்களுக்கு கல்வியமைச்சுடன் இணைந்து இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் வழங் கப்படுகின்ற மகாத்மா காந்தி புலமைப்பரி சிலுக்காக 2015 ஆம் ஆண்டில் நடைபெற்ற க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையில் மாணவர்கள் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் அடிப்படையில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் நாட்டின் சகல மாவட்டங்களில் இருந்தும் ஒரு மாவட்டத்திற்கு 6 மாணவர்கள் வீதம் 150 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இதனடிப்படையில் கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரி மாணவர்களான ஏ.எம்.எம்.ஆதில் (9 ஏ ) எம்.ஆர்.ஆசிக் ( 9 ஏ ) யு.எல். எம்.அப்ரித் ( 9 ஏ ) ஜே.எஸ்.ஏ.எம்.சி ஹாப் ( 8 ஏ 1 பீ ) ஏ.அஹமட் சிபி (9 ஏ ) ஐ.எம்.இல்ஸாம் அல் ஹக் ( 9 ஏ ) ஆகியோர் இப்புலமைப்பரிசில் பெறுவதற்காக அம்பாறை மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்திலிருந்து மகாத்மா காந்தி புலமைப்பரிசில் பெறுவதற்காக ஒரே பாடசாலையிலிருந்து 6 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டிருப்பது இதுவே வரலாற்றில் முதற்தடவையாகும் என கல்லூரி அதிபர் பீ.எம்.எம்.பதுறுதீன் தெரிவித்தார். அதிபர் உள்ளிட்ட பிரதி அதிபர்கள் உதவி அதிபர்கள் ஆசிரியர்கள் மாணவர்கள் பாடச ாலை அபிவிருத்தி சபை பழைய மாணவர் சங்கம் என்பன இம்மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பகுதித்தலைவராக இருந்த எம்.எச்.எம்.பாயிஸுக்கும் பாராட்டுக்களை தெரிவித்துள்ளனர்.

விடுதி வசதி கோரி

# கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் மீண்டும் ஆர்ப்பாட்டத்தில்



(ஏறாவூர் ஏ.எச்.எம். ஹுஸைன்)

கிழக்கு பல்கலைக்கழகத்தில் விடுதி வசதி பற்றாக்குறை மற்றும் வருடாந்த கல்வி நடவடிக்கையின் கால இழுத்தடிப்பு போன்றவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று (08) கிழக்கு பல்கலைக்கழக மாண வர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். மாணவர்களின் அரையாண்டு கல்வி நட வடிக்கை இதுவரை காலமும் 6 மாதங்களைக் கொண்டதாக கல்வி நடவடிக்கைக்குரிய கால அட்டவணை இடம்பெற்று வந்தது.

ஆனால் தற்போது அரையாண்டு கல்வி நடவடிக்கையை 7 மாதங்களாக கால எல்லையை அதிகரித்தமையினால் 12 மாதத்தில் பூர்த்தி செய்யவேண்டிய கல்வி நடவடிக்கை 14 மாத காலமாக நீடிக்கப்பட் டிருக்கின்றது. மாணவர்களாகிய எங்களால் இதனை ஏற்றுக் கொள்ள முடியாது.

கிழக்கு பல்கலைகழகத்தைப் பொறுத்த வரையில் பல்வேறுபட்ட இழுத்தடிப்புக்களால் மாணவர்களின் பட்டப்படிப்பை உரிய ஆண் டில் நிறைவு செய்ய முடியாது போகின்றமை பெரும் குறைபாடாக காணப்படுகின்றது. இவ்வாறான ஆண்டுக்குரிய கால எல்லையை 14 மாதமாக அதிகரித்தால் பட்டப்படிப்பை ஒரு மாணவன் நிறைவு செய்வதற்கு மேலும் பல வருடங்களுக்கு காத்திருக்க நேரிடும்.

அத்துடன் கடந்த வாரங்களுக்கு முன் விடுதி வசதி கோரி பல்கலைக்கழக மாணவர்கள் பல்கலைகழக நிர்வாக கட்டிடத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மாணவர்களுக்கு அளித்த வாக்குறுதி திருப்தி கரமாக அமையவில்லை, தற்போது பல்கலைக்கழக விடுதிகளில் ஒரு அறைக்குள் 9 பேருக்கு மேல் தங்கியிருக்கும் நிலமை உருவாகியுள்ளது போன்ற முக்கிய கோரிக்கையை முன் வைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பல்கலைக்கழக நிர்வாகம் மாணவர்களின் விடுதிப் பிரச்சினையை தீர்ப்பதாக தெரியவில்லை. மாணவர்களுக்குரிய விடுதி வசதியிருந்தும் பல்கலைக்கழக நிர்வாகம் தெரிந்தும் தெரியாதது போல மாணவர்களை பழிவாங்குகின்ற நடவடிக்கைகளில் தொடர்ந் தும் ஈடுபடுகின்றது.

# தாஜுடின் விவகாரம் குறித்து இந்திய ஊடகத்திற்கு நாமல் பதில்

ராஜபக்ஷ காலத்தில் சீனாவுடன் நிலவிய உறவு தொடர்பில் இந்தியா தவறான புரிந்துணர்வுடன் இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். மேலும் தற்போதைய அரசாங்கம் சீனாவுடன் கொண்டுள்ள உறவு குறித்து இந்தியா அமைதியாக இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தியாவின் தி ஹிந்து ஊடகத்திற்கு வழங்கிய செவ்வியின் போதே நாமல் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

தனது தந்தையின் ஆட்சிக் காலத்தில் இலங்கைக்கு சொந்தமான வளங்களை பிற நாடுகளுக்கு எதிராக பயன்படுத்த இடமளிக்கப்படக் கூடாது என்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருந்ததாகவும், குறிப்பிட்டுள்ள அவர், ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை நிர்மாணிக்க முதலில் இந்தியாவுக்கே வாய்ப்பளிக்கப்பட்டதாகவும், கூறியுள்ளார்.

எனினும், அதனை இந்தியா மறுத்த போது, சீனா இதற்காக முன்வந்ததாகவும் இதன்போது நாமல் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தனது தந்தையின் ஆட்சிக் காலத்தில் சீனாவுக்வோ, இந்தியாவுக்வோ அல்லது வேறு எந்த நாட்டுக்கு எதிராகவோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் நாமல் ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, றக்பி விளையாட்டு வீரர் வசிம் தாஜுடினின் வழக்கு தொடர்பில், குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அண்மையில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு பிரிவில் இருந்த இராணுவத்தின் இரண்டு உயர் அதிகாரிகளிடம் விசாரணை நடத்தியுள்ள விவகாரம் குறித்து இதன்போது அவரிடம் வினவப்பட்டது.

இதற்கு பதிலளித்துள்ள நாமல், முன்னதாக மேற்கொள்ளப்பட்ட மருத்துவ அறிக்கை குறித்த மரணம் ஒரு விபத்து என தெளிவாக கூறியுள்ளதாக குறிப்பிட்டார்.

எதுஎவ்வாறு இருப்பினும், 2015ம் ஆண்டு வசிம் தாஜுடின் கொலை செய்யப்பட்டதாகவும், அவரது உடலை மீள தோண்டி எடுத்து பரிசோதனை செய்ய வேண்டும் எனவும் குற்றப் புலனாய்வுப் பிரிவு நீதிமன்றத்தில் தெரிவித்தது. எனினும் இது அரசியல் நோக்கங்களுக்காக செய்யப்பட்டதாக, நாமல் மேலும் கூறியுள்ளார்.

அத்துடன் இந்த வழக்கில் நாமல் மற்றும் அவரது சகோதரர் யோசி த்தவுக்கும் தொடர்பிருப்பதாக எழுந்த குற்றச்சாட்டுக்களையும் நாமல் மறுத்துள்ளார்.



திண்மக் கழிவு முகாமைத்துவமும் இஸ்லாமும் என்ற தொனிப் பொருளில் வகுப்பறைக் கண்காட்சி ஒன்று நேற்று முன்தினம் கிண்ணியா முஸ்லிம் மகளிர் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. தரம் 12 கலைப் பிரிவு மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இக் கண்காட்சியை அதிபர் அமீன் வாரி வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார். (கியாஸ் ஷாபி)

# அரசாங்க ஊழியர்களுக்கான சம்பள முறையில் மாற்றம்

அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கும் முறையில் மாற்றம் மேற் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இந்த தீர்மானம் ஒரு போதும் அரச சேவையாளர்களுக்கு மகிழ்ச்சியான செய்தி அல்ல எனவும் உள்ளூர் மற்றும் அரசாங்க தொழிற்சங்க கூட்டமைப்பின் பிரதான செயலாளர் திலகரத்ன தெரிவித்துள்ளார்.

இது குறித்து கருத்து அவர் கருத்து தெரிவிக்கையில்,

மாதாந்த சம்பளத்தை இரண்டு பிரிவாக வழங்குவதற்கு அரசாங்கம் தயாராகி வருவதாக தகவல் கிடைத் துள்ளது. மாதாந்தம் 20ஆம் திகதி அல்லது 25 ஆம் திகதி சம்பளம் வழங்குவது சாதாரண முறையாகும்.

எனினும் இந்த முறையின் கீழ் ஆரம்ப சம்பளத்தை இந்த திகதியில் வழங்கிவிட்டு மாதத்தின் 5ஆம் அல் லது 10 திகதிகளில் கொடுப்பனவு களை வழங்குவதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# ஆசிரியர்கள் மனம் வைத்தால் மாத்திரமே மாணவர்களை முன்னேற்ற முடியும்

## கல்முனை வலயக் கல்வி பணிப்பாளர் அப்துல் ஜலீல்

(சாய்ந்தமருது யூ.கே.காலித்தீன்)

கல்முனை வலயத்திற்குட்பட்ட சாய்ந்தமருது கல்வி கோட்டம் எதிர் காலத்தில் சிறந்த பெறுபேறுகளை எடுக்க தற்பொழுது சாய்ந்தமருது ஜும்ஆ பள்ளிவாசல் தலைமையில் சிறந்த கல்வி யியலாளர்களைக் கொண்ட சபை ஒன்றினை நிறுவி சாய்ந்தமருது கல்வி மட்டத்தை உயர்த்துவதற்கு அரும் பாடுபட்டுக்கொண்டிருக்கின்றனர் என கல்முனை வலயக் கல்வி பணிப்பாளர் எம்.எஸ். அப்துல் ஜலீல் தெரிவித்தார்.

சாய்ந்தமருது கமு/றியாலுல் ஜன்னா வித்தியாலயத்தின் கேட்போர் கூடத்தினை திறந்துவைக்கும் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கலந்து கொண்ட போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த ஆண்டு கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தினால் றியாலுல் ஜன்னா வித்தியாலத்தின் கேட்போர் கூடத்தினை புனருத்தாபனம் செய்வதற்காக நிதி ஒதுக்கீடு செய்து அதனை திறந்து வைக்கும் வைபவம் பாடசாலையின் அதிபர் ஏ.எம். சம்சுதீன் தலைமையில் நடைபெற்றபொழுது உரையாற்றுகையிலேயே கல்விப் பணிப்பாளர் இதனைக் குறிப்பிட்டார்.

மேலும் அவர் கூறியதாவது, இக்கோட்டத்திற்கு வெளிவலயங்களிலிருந்து கற்பித்த ஐம்பதற்கும் மேற்பட்ட சிறந்த அதிபர் ஆசிரியர்களை சட்டதிட்டங்களுக்கு அப்பால் இப்பிரதேசத்தின் நன்மை கருதி இப்பிரதேசத்தில் கொண்டுவந்து பிரதேச த்தின் கல்வியை முன்னேற்றுவதற்காகவே நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

தற்பொழுது ஐந்தாம் இடத்திலுள்ள சாய்ந்தமருது கோட்டத்தினை முதலாம் இடத்திற்கு கொண்டுவர இப்பிரதேச ஆசிரியர்கள் முன்வந்து உழைக்க வேண்டும். நாம் தற்போது மேற் கொண்டுள்ள நடவடிக்கைகள் காரணமாக ஏனைய கோட்டங்கள் பின்தங்கி விடுமோ என்று அஞ்சி அவர்களும் தமது கோட்டத்தினது புள்ளிகளை தக்கவைப்பதற்காக அறும் பாடுபட்டு போட்டி போட்டு உழைத்துக்கொண்டிருக்கின்றனர். இந்நிலை நீடிக்குமே ஆனால் எமது கல்வி வலயம் அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தைப் பெறும் என்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை.

மாணவர்களை முன்னேற்றுவதாக இருந்தால் ஆசிரியர்கள் மனம்வைத்தால் மாத்திரமே மாணவர்களை முன்னேற்ற முடியும். இதற்காக பாடுபடுவதற்கு பாடசாலை அதிபர்கள், கோட்டக்கல்வி அதிகாரிகள், வலயக் கல்வி அலுவலக அதிகாரிகள் மற்றும் இப்பிரதேச மக்களும் மாணவர்களின் நன்மை கருதி எதை செய்வதற்கும் ஆயத்தமாகவுள்ளோம் என்றும் வலயக் கல்வி பணிப்பாளர் தெரிவித்தார்.

மேற்படி நிகழ்வின் போது சாய்ந்தமருது பிரதேசத்தின் கல்வி அபிவிருத்திக்காக பாடுபடுகின்ற வைத்திய கலாநிதி என். ஆரிப் அவர்களின் 'இன்று மாறும் நாளைசு எனும் கவிதை புத்தகத்தினை வெளியீட்டு அதன் மூலம் வரும் வருவாயினைக் கொண்டு இப்பாடசா லையில் இயங்கி வரும் விஷேட தேவையுடைய மாணவர்களின் நன்மை கருதி ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான ஒரு தொகுதி அலுவலக பொருட்களை அதிபரிடம் கையளித்தார்.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது கோட்ட கல்வியதிகாரி ஐ.எல்.ஏ.ரஹுமான், ஆரம்பகல்வி ஆசிரிய ஆலோசகர் எம். சஹரூன், கோட்டக்கல்வி அதிகாரிகள், பாடசாலை பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் மற்றும் பழைய மாணவ சங்க உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்ததோடு அதிதிகளுக்கு பாடசலை அதிபரினால் நினைவுச்சின்னமும் வழங்கிவைக்கப்பட்டது.

### இன்புளுவென்ஸா வைரஸ் காரணமாக பாடசாலை ஆரம்பப் பிரிவுக்கு விடுமுறை

(இக்பால் அலி)

கிரிஉல்ல கல்வி வலயத்தில் பன்னல தேசிய பாடசாலையில் ஆரம்பப் பிரிவில் 5 மாணவர்களுக்கு இன்புளுன்ஸா ஏ 1 வைரஸ் காய்ச்சல் ஏற்பட்டுள்ளதையடுத்து ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு 5ஆம் திகதி முதல் 9 திகதி வரை விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

எலபடகம சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் வைத்திய அதிகாரி சியாமா ஹேரத் கருத்துத் தெரிவிக்கையில் இந்த வைரஸ் காய்ச்சல் விரைவாக பரவக் கூடியவை. ஆனாலும் பெற்றோர்கள் பெரியளவில் பீதியடையத் தேவை இல்லை என்றும் தெரிவித்தார்.



கண்டி மத்திய மலைநாட்டு கலைக் கலாசார சங்க மண்டபத்தில் இடம் பெற்ற வெளிநாட்டில் தொழில் புரிவோரின் குடும்பங்களுக்கான புலமைப்பரிசில் வழங்கும் வைபவத்தில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் தலதா அத்துக் கோரளை மற்றும் மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்கா ஆகியோர் அதிதிகளாகக் கலந்துகொண்டு புலமைப்பரிசிலை வழங்குவதை படங்களில் காணலாம். (வத்துகாமம் நிருபர்)

# பெண்கள் சமூக மாற்றத்தின் பங்காளர்கள்

**லறீனா அப்துல் ஹக்**

எந்தச் சமூகம் பெண் மக்களை அடிமைப்படுத்தி வைத்திருக்கிறதோ அந்தச் சமூகம் ஒரு காலத்திலும் தலைநிமிர்ந்து நிற்க முடியாது முதலாவது முஸ்லிம் பெண் நாவலாசிரியை சித்தி ஜுனைதா பேகம். (காதலா கடமையா நாவல் - 1928) எந்த ஒரு சமூகத்தினதும் மேம்பட்ட நிலையை அளவிடும் அம்சங்களில், அச்சமூகத்தில் பெண்களின் நிலையும் ஒன்றாகும் என இஸ்லாமிய அறிஞர் ராஷித் அல்கன்னூஷி குறிப்பிடுவார். உண்மைதான். சமூகத்தின் அரைப் பங்கினரான பெண்களின் நிலை மேம்படாதவரை ஒரு சமூகம் முழுமையாக மேம்படும் என எதிர்பார்ப்பது வீண் கனவே!

இலங்கை, இந்திய நாட்டு முஸ்லிம் பெண்களின் நிலை முழுக்க அடக்குமுறைக்கு உட்பட்டதாக இருக்கின்றது என்ற காரசாரமான குற்றச்சாட்டுகள் ஆங்காங்கே அடிக்கடி எழுந்தாலும், அதன் உண்மைத்தன்மை குறித்து நடுநிலையோடு சிந்திக்க வேண்டியது நம் கடமை. அப்படி முற்றுமுழுதான அடிமைத்தனம் நிலவுகின்றது எனும் குற்றச்சாட்டை ஏற்க முடியாது.

மாறாக, எல்லாச் சமூகங்களிலும் இருப்பது போல் பிற்போக்கான சிந்தனைப் போக்குடைய ஒரு சாரார் முஸ்லிம் சமூகத்திலும் இருந்து வருகின்றனர். அவர்கள் பெண்கள் பற்றி மிகப் பிற்போக்கான மனநிலையைக் கொண்டுள்ளனர். அதனைச் செயற்படுத்த விழைகின்றனர் என்பதே உண்மை. அவர்களின் மடத்தனமான செயற்பாடுகள், கருத்துக்களை மட்டும் வைத்துக்கொண்டு இஸ்லாத்தையோ முழு முஸ்லிம் சமூகத்தையோ அளப்பது அறிவுடைமை அல்ல.

தமிழகத்திலே 1928 ஆம் ஆண்டு நாகூரைச் சேர்ந்த சித்தி ஜுனைதா பேகம் எனும் ஒரு முஸ்லிம் பெண் உ. வே. சாமிநாதையரின் மதிப்புரையோடு ஒரு நாவலை எழுதி வெளியிட்டார். அதுவே ஒரு முஸ்லிம் பெண்மணியால்



எழுதப்பட்ட முதலாவது தமிழ் நாவல் ஆகும். அக்காலத்தில் அது மிகப்பெரிய புரட்சிதான் என்பதில் ஐயமில்லை.

அவ்வாறே, இன்றும் இலங்கையில் பல முஸ்லிம் பெண்கள் பல்கலைக்கழகக் கல்வியைப் பெறுகிறார்கள், ஆசிரியராய், அதிபராய், வைத்தியராய், பொறியியலாளராய் எனப் பல்துறைகளிலும் பணியாற்றுகிறார்கள். பலர் இலக்கியப் படைப்புகளை நூலுருவில் கொண்டு வந்துள்ளார்கள்.

ஆக, இலங்கையைப் பொருத்தவரையில் முஸ்லிம் பெண்களுக்கான ''சமூக வெளி'' அறவே மூடுண்டதாக இல்லை என்பதே என்னுடைய அவதானம்.

அதேவேளை, பெண்ணடக்குமுறை அறவே இல்லாத, பெண்களுக்கு எதிரான அநீதிகள் நிகழாத சூழல் ஏற்பட்டுவிடவும் இல்லை என்பதே உண்மை. அதற்கு இன்னும் சில காலம் நாம் கடுமையாக உழைக்க வேண்டி இருக்கும்.

தவிர, இதில் ஆண்களை மட்டுமே முழுமொத்தமாகக் குற்றஞ்சாட்டவும் முடியாது. காரணம், பெண்கள் பற்றிய சமூக நிலைமாற்றத்தில் பெண்களின் தன்முனைப்பும், விரிந்தகன்ற சமூக நோக்கும், அறிவுத் தேட்டமும், கடும் உழைப்பும் தேவையாக உள்ளது. அவர்களின் அறிவுத் தேடுதல் இன்னுமின்னும் மேம்பட வேண்டிய தேவை உள்ளது.

மேலும், நமது பாடசாலைகளில் அதிகமானவர்கள் ஆசிரியைகளே! தமது நீண்ட காலக் கற்பித்தலின் ஊடாக இவர்களால் ஏன் தமது மாணவர்கள் மத்தியில் படிப்படியாக ஒரு சிந்தனை மாற்றத்தை உருவாக்க, பெண்கள் பற்றிய மனப்பதிவை மாற்ற முடியவில்லை? காரணம், முதலில் அவர்களுக்கே அது பற்றிய விழிப்புணர்வும் அக்கறையும் குறைவாக உள்ளது. பாடத்தை முடித்து நோட்ஸ் ஒஃப் லெஸனை எழுதி ஒப்பேற்றி விட்டதோடு கடமை முடிந்து விடுவதாகக் கருதும் ஆசிரியர்கள் இன்று அதிகம் உள்ளார்கள் என்பதே உண்மை.

எல்லா ஆசிரியர்களையும் நான் குற்றம் சொல்லவில்லை. ஆனால், பெரும்பாலானோர் அவ்வாறுதான் உள்ளனர். வேலைப்பளு இதற்கு முக்கியமான ஒரு காரணம் தான் என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டியவர்களாக உள்ளோம். பணியிடம், வீடு என இரண்டு இடங்களிலும் இப்பெண்கள் தமது உழைப்பைத் தொடர்ந்து செலுத்த வேண்டி இருப்பது அவர்களின் செயற்பாட்டுத் திறனையும் புதியன தேடல் தொடர்பான தன்முனைப்பினையும் மழுங்கடிப்பதில் பிரதான பங்காற்றுகின்றன எனலாம். கணவன் - மனைவியிடையே வேலைப் பகிர்வு தொடர்பில் பரஸ்பரப் புரிதலும் ஒத்துழைப்பும் இருக்குமெனில் இந்நிலைமையில் மாற்றம் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன.

ஆகவே, சாதகமான சமூக மாற்றம் ஒன்றைக் கட்டியெழுப்புவது தொடர்பில் குடும்ப அங்கத்தவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வியியலாளர்கள், சமூக ஆர்வலர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் என அனைத்துத் தரப்பினரும் தத்தமது பங்குப் பணியினைப் பொறுப்புணர்ந்து செய்யாத வரையில் மாற்றமும் முன்னேற்றமும் கைக்கெட்டாத் தொலைவிலேயே இருந்து கொண்டிருப்பதை யாராலும் தடுக்க முடியாது போகும்.

---

# இஸ்லாத்தில் சமூக நீதி

**கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி**

நீதி என்பதை இறை விசுவாசத்துடன் பின்னிப் பிணைந்துள்ள ஒன்றாகவும், ஒருவன் நீதியின் அடிப்படையில் செயல்படுவதை உண்மையான பக்தியின் வெளிப்பாடாகவும் இஸ்லாம் கருதுகின்றது

சமூக நீதி பற்றிய இஸ்லாத்தின் கருத்துக்கள் இறைவன், பிரபஞ்சம், மனித வாழ்வு பற்றிய அதன் கோட்பாட்டின் பின்னணியிலேயே அணுகி ஆராயப்படல் வேண்டும். ஏனெனில் இஸ்லாமிய போதனைகள், கருத்துக்கள், கோட்பாடுகள் அனைத்தினதும் அடிப்படையாக விளங்குவது, மேற்குறிப்பிட்ட விடயங்களைத் தழுவி நிற்கும் அதன் உலக நோக்காகும்.



இந்த உலக நோக்கின் அடிப்படையிலேயே இஸ்லாத்தின் சட்டங்கள், வணக்கங்கள், சமூக, அரசியல், பொருளாதாரக் கோட்பாடுகள், பண்பாடு, நாகரிகம் அனைத்தும் கட்டி எழுப்பப்பட்டுள்ளன.

ஒரு மதம் என்றவகையில் இஸ்லாம் இப்பிரபஞ்சத்தின் சிருஷ்டிகர்த்தாவாகிய இறைவனுக்கும் அவனது படைப்பினங்களுக்கும் இடையிலுள்ள தொடர்புகள் பற்றியும் மனிதனுக்கும், இப்பிரபஞ்சத்திற்கும் இடையில் உள்ள தொடர்புகள் பற்றியும் பேசுகின்றது.

இப்பிரபஞ்சத்தில் மனிதனின் நிலை, அவனது வாழ்வின் குறிக்கோள், அதனை அடைவதற்கான நெறிமுறைகள் பற்றி மிகத் தெளிவான ஒரு கருத்தை இஸ்லாம் கொண்டுள்ளது.

இக்கருத்து மனித வாழ்வின் அனைத்துத் துறைகளையும் பொதிந்துள்ளது. இந்த வகையிலேயே இஸ்லாம் தனிமனிதனுக்கும், சமூகத்திற்கும் இடையில் உள்ள தொடர்பு பற்றியும், பல்வேறு சமூகங்களுக் கிடையிலான தொடர்புகள் எவ்வாறு அமைதல் வேண்டும் என்பது பற்றியும், சமூகப் பண்பின் முக்கிய அங்கங்களான அரசியல், பொருளாதார நிறுவனங்கள் எவ்வகையில் அமைதல் வேண்டும் என்பது பற்றியும் மிகத்தெளிவாக விளக்கியுள்ளது.

இப்பிரபஞ்சத்தையும் அதில் உள்ள அனைத்தையும், சிருஷ்டித்த இறைவன், அவற்றை ஓர் ஒழுங்கான கட்டுக்கோப்பிலும், சீரமைப்பிலும் படைத்துள்ளான். இப்பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தும் பரஸ்பரம் இணைந்து, ஓர் ஒழுங்கிற்கும் கட்டுப்பாட்டிற்கும், வரையறைக்கும் உட்பட்டே இயங்குகின்றன.

அவனே யாவற்றையும் படைத்து, ஒவ்வொன்றிற்கும் ஓர் ஒழுங்கை வழங்கினான். (அல்குர்ஆன் 25:2)

நாம் ஒவ்வொரு பொருளையும் (குறிப்பான) அளவின் படியே சிருஷ்டித்திருக்கின்றோம் (அல்குர்ஆன் 55:49)

தன்னுடைய வரையறைக்குள் (தவறாமல்) செல்லும் சூரியனும் ஓர் அத்தாட்சியாகும். இது யாவையும் நன்கறிந்தவனும், மிகைத்தோனுமாகிய இறைவனால் விதிக்கப்பட்டதாகும். (உலர்ந்து வளைந்த) பழைய பேரீச்சங் கம்பைப் போல (பிறையாக) ஆகும் வரையில் சந்திரனுக்கும் நாம் பல மட்சங்களை ஏற்படுத்தியிருக்கின்றோம். சூரியன் சந்திரனை அணுகமுடியாது, இரவு பகலை முந்த முடியாது இவ்வாறே கிரகங்களும், நட்சத்திரங்களும், ஒவ்வொன்றும் தன்னுடைய வட்டவரையறைக்குள் நீந்திச் செல்கின்றது (அல்குர்ஆன் 36: 38, 40)

இறைவனால் படைக்கப்பட்ட ஒவ்வொரு படைப்பும் அதற்கென வரையறுக்கப்பட்ட பங்கையும் பணியையும் ஓர் ஒழுங்கு முறைக்கேற்ப நிறைவேற்றும் வகையில் சிருஷ்டிக்கப்பட்டிருப்பதால், இயற்கைச் சிருஷ்டியில் ஓர் ஒழுங்கும், கட்டுப்பாடும், சீரமைப்பும் காணப்படுகின்றது. இது போன்றே மனித சமூகத்தின் ஒவ்வொரு அங்கமும், பரஸ்பரம் ஒத்துழைத்து தொழிற்படும் போது அமைதியும், ஒழுங்கும் உருவாகி சமூக, பொருளாதார நீதி நிலைபெறுகின்றது என்பது இஸ்லாத்தின் கருத்தாகும்.

ஒரு கட்டத்தை அதில் உள்ள ஒவ்வொரு செங்கல்லும் பரஸ்பரம் ஒன்றுடன் மற்றொன்று இணைந்து உறுதியும், பலமும் அடையச் செய்வது போன்று சமூகத்தின் ஒவ்வொரு தனிமனிதனும், ஏனையவர்களுடன் இணைந்து, சமத்துவம், சகோதரத்துவம், சமூக உறுதிப்பாடு ஆகிய பெறுமானங்களின் அடிப்படையில், பரஸ்பர கடமைகள், உரிமைகளைப் பேணிப் பாதுகாத்து, சமூக, பொருளாதார நீதியின் செயல்பாட்டை உறுதி செய்யும் வகையில் இஸ்லாம் இவை தொடர்பான சட்டங்களையும், விதிகளையும் ஏற்படுத்தியுள்ளது.

அத்ல் எனக் குர்ஆன் குறிப்பிடும் நீதியானது முஸ்லிம் சமூகத்தின் அத்திவாரமாகும். நீதி வழங்குவதை இறைவனின் பண்புகளில் ஒன்றாக அது குறிப்பிடுகின்றது. எனவே, விசுவாசிகளை நீதி செலுத்தும்படியும், நீதியை நிலைநாட்டும் படியும் அது பணிக்கின்றது.

விசுவாசிகளே! நீங்கள் நீதி செலுத்தும்படியும், நன்மை செய்யும் படியும், உறவினர்களுக்கு உதவி செய்யும் படியும் நிச்சயமாக அல்லாஹ் உங்களை ஏவுகின்றான். மானக்கேடான காரியங்கள், அக்கிரமம், பாபம் ஆகியவைகளிலிருந்து உங்களைத் தடை செய்கின்றான். (அல்குர்ஆன் 16:90)

நீதி என்பது இறை விசுவாசத்துடன் பின்னிப் பிணைந்துள்ள ஒன்றாகவும்,ஒருவன் நீதியின் அடிப்படையில் செயல்படுவது உண்மையான பக்தியின் வெளிப்பாடாகும் என இஸ்லாம் கருதுகின்றது.

நற்செயல் என்பது உங்களது முகங்களைக் கிழக்கு நோக்கியோ, மேற்கு நோக்கியோ திருப்புவதல்ல. மாறாக அல்லாஹ்வையும், இறுதி நாளையும், வானவர்களையும், வேதங்களையும், நபிமார்களையும் ஒருவன் முழுமையாக நம்புவதும், தமக்கு விருப்பமான பொருளை உறவினர்களுக்கும், அநாதைகளுக்கும் வறியவர்களுக்கும், வழிப்போக்கர்களுக்கும், யாசிப்போருக்கும், அடிமைகளை மீட்பதற்கும் வழங்குவதும், தொழுகையை நிலைநாட்டி ஸகாத்தைக் கொடுத்து வருவதுமே நற்செயலாகும் (அல்குர்ஆன் 2:177)

இஸ்லாத்தில் இறை நம்பிக்கைக்கும், இறை பக்திக்கும். சமூக, பொருளாதார நீதிக்குமிடையிலான இறுக்கமான தொடர்பை குர்ஆனின் இத்திருவசனம் மிகத்தெளிவாக விளக்குகின்றது. சமூகத்தில் வசதியும், வாய்ப்பும், பலமும், சக்தியும் படைத்தோர், பலவீனர்கள், வசதியற்றோர், வறுமையில் வாடுவோர், வயோதிபர், அங்கவீனர் ஆகிய அனைவருக்கும் ஒரு குறிப்பிட்ட தரமான வாழ்விற்கு உறுதி செய்தல் கடமையாகும் என இஸ்லாம் கூறுகின்றது.

மனிதன் உழைத்துப் பொருளீட்டி வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும் என்ற கருத்தை இஸ்லாம் வலியுறுத்துகின்றது. இத்தகைய உழைப்பாளிகள், அவர்களது உழைப்பில் எத்தகைய தடையுமின்றி ஈடுபடக்கூடிய வாய்ப்பை இஸ்லாமிய ஆட்சி ஏற்படுத்தல் ஆட்சியின் பொறுப்பாகும். போதிய வசதியற்ற குடும்பங்களுக்கு அவர்களது அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வழிவகை செய்யப்படல் வேண்டும்.

ஒருவன் மரணித்து அவனது குடும்பத்தினரும் குழந்தைகளும் கதியற்ற நிலையில் விடப்பட்டால் அவர்களது விடயத்தை நான் பொறுப்பேற்பேன். நான் அவர்களது பாதுகாவலனாக இருப்பேன். என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். ஏழைகளின், வறியவர்களின் உரிமைகளை வழங்காதவனும், அவர்களைப் புறக்கணிப்பவனும், மார்க்கத்தை பொய்யாக்குபவன் எனக்குர்ஆன் குறிப்பிடுகின்றது.

நபியே! மறுமையின் தீர்ப்பை பொய்யாக்குபவனை நீர் பார்த்தீரா! அவன்தான் அநாதைகளை விரட்டுகின்றான். அவன் ஏழைகளுக்கு உணவளிக்காததுடன், ஆகாரமளிக்கும்படி பிறரைத் தூண்டுவதுமில்லை. (அல்குர்ஆன்)

வியாபாரத்தில் நேர்மையையும், உண்மையையும் கடைப்பிடிப்பதை வலியுறுத்தும் இஸ்லாம், அநியாயம், மோசடி, அளவை நிறுவைகளில் மோசடி செய்தல் மூலம் வஞ்சித்துப் பொருளீட்டுவதை வன்மையாகக் கண்டிக்கின்றது.

அளவைப் பூர்த்தி செய்து அளந்து, எடையைச் சரியாக நிறுங்கள். நீங்கள் கொடுக்க வேண்டிய மனிதர்களுடைய பொருள்களில் யாதொன்றையும் அவர்களுக்குக் குறைத்துவிடாதீர்கள். (அல்குர்ஆன் 7: 85)

அளவையையும், நிறையையும் நீதமாகவே பூர்தியாக்கி வையுங்கள். மனிதர்களுக்குக் கொடுக்க வேண்டிய அவர்களுடைய பொருள்களைக் குறைத்துவிடாதீர்கள். பூமியில் விஷமம் செய்து கொண்டு அலையாதீர்கள். (அல்குர்ஆன் 11: 84)

அளவில் மோசம் செய்பவர்களுக்கு கேடுதான். அவர்கள் மனிதர்களிடம் அளந்து வாங்கினால் நிறைய அளந்து கொள்கின்றனர். மற்றவர்களுக்கு அவர்கள் அளந்து கொடுத்தாலும் அல்லது மற்றவர்களுக்கு நிறுத்துக் கொடுத்தாலும் குறைத்து அவர்களை நஷ்டப்படுத்தி விடுகின்றனர். (அல்குர்ஆன் 83:1)

இனம், நிறம், வர்க்கம் ஆகியவற்றின் அடிப்படையில் எந்த ஒரு தனிமனிதனினும் உரிமைகள் மறுக்கப்படக் கூடாது என்ற கருத்தை இஸ்லாம் குறிப்பிடுவதோடு, அத்தகைய குறுகிய உணர்வுகளின் அடிப்படையில் செயல்படுவதை அது முற்றிலும் தடை செய்துள்ளது.

ஒரு தடவை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் தோழர்களுள் ஒருவரான அபூதர் அல் கிபாரி, கறுத்த நீக்ரோ அடிமையான பிலாலுடன் கோபமுற்று, அவரது நிறத்தைக் குறித்து இழிவுபடுத்தும் நோக்கில், யா! இப்னஸ் ஸவ்தா? கறுப்புநிற அடிமையின் புதல்வனே! என அழைத்தார். இதனைச் செவியுற்ற நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உம்மில் இன்னும் இஸ்லாத்துக்கு முந்தைய அறியாமைக் கால பண்புகள் காணப்படுகின்றனவே! எனக் கண்டித்தார்கள்.

இன்னொரு சந்தர்ப்பத்தில் மிக மதிப்பும் மரியாதையும் உள்ள அரபுக் குழுக்களில் ஒன்றான பனூ மக்ஸூம் குழுவைச் சார்ந்த ஒரு பெண்மணி ஒரு திருட்டுக் குற்றத்தைப் புரிந்தாள். அப்பெண் அக்குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்டால் தங்களது குழுவின் கண்ணியமும், மதிப்பும் மாசுபடுத்தப்படும் என்பதை உணர்ந்த அக்குழுவின் முக்கிய தலைவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அன்புக்கும், நம்பிக்கைக்கும் உரிய, அவர்களுக்கு மிக நெருங்கியவர்களில் ஒருவரான உஸாமா பின் ஸைதை அணுகி அப்பெண்ணுக்காக நபியவர்களிடம் பரிந்து பேசும்படி கேட்டனர்.

இதற்கு இணங்கி உஸாமா நபியவர்களிடம் அப்பெண்ணுக்காகப் பரிந்து பேசிய போது, கோபமுற்ற அவர்கள் இறைவன் விதித்துள்ள தண்டனையில் நீர் தலையிடுகின்றீரா? என உஸாமாவை நோக்கிக் கேட்டதோடு, தன்னைச் சூழ இருந்த முஸ்லிம்களை நோக்கி, உங்களுக்கு முந்தைய சமூகங்களின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணங்களில் ஒன்று எது என நீங்கள் அறிவீர்களா? அவர்களில் வசதியும் செல்வாக்கும் படைத்த குடும்பங்களைச் சார்ந்த ஒருவர் திருடினால் அவர் தண்டிக்கப்படாமல் விடப்பட்டார். ஆனால் வசதியற்ற ஏழைக்குடும்பத்தைச் சார்ந்த ஒருவர் திருடினால் அவர் தண்டிக்கப்பட்டார்.

நான் இறைவன் மீது ஆணையாகக் கூறுகின்றேன். முஹம்மதாகிய எனது புதல்வி பாதிமா திருடினாலும் அவரது கரத்தையும் நான் துண்டித்து தண்டனை வழங்குவேன். இஸ்லாமிய சமூக, பொருளாதார நீதி முஸ்லிம்களைப் பொறுத்த அளவில் மட்டுமன்றி, இஸ்லாமிய ஆட்சியில் வாழும் முஸ்லிம் அல்லாதவர்களின் அடிப்படை உரிமைகளையும் உறுதிப்படுத்தி அவர்களது மத, கலாசாரத் தனித்துவத்தைப் பாதுகாத்து வாழ வகை செய்கின்றது.

விசுவாசிகளே! நீதியை நிலைநாட்டுவதில் அல்லாஹ்வுக்காக நீங்கள் உறுதியான சாட்சியாக இருங்கள். மக்களில் ஒரு சாரார் மீது உங்களுக்குள்ள வெறுப்பும் பகையும் அவர்களுக்கு அக்கிரமம் செய்வதற்கு உங்களைத் தூண்டாதிருக்கவும் (எவ்வளவு குரோதமிருந்த போதிலும்) நீங்கள் நீதியே செலுத்துங்கள். அதுதான் பரிசுத்தத் தன்மைக்கு மிகவும் நெருங்கியது. (அல்குர்ஆன் 5:8)

இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வாழும், முஸ்லிம் அல்லாதார் அவர்களது மதக் கிரியைகளை நிறைவேற்றுவதிலும் திருமணம், விவாகரத்து, வாரிசுரிமை போன்ற விடயங்களில் அவர்களது சட்டம், வழக்காறு ஆகியவற்றின் அடிப்படையில் செயல்பட பூரண சுதந்திரம் பெற்றவர்களாவர். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மக்காவிலிருந்து மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்றதும் அவர்கள் உருவாக்கிய மதீனா சாசனத்தில், அங்கு வாழ்ந்த யூதர்களின் அடிப்படை உரிமைகள் உறுதிப்படுத்தப்பட்டன. அவர்களுக்குப் பூரண மத சுதந்திரம் வழங்கப்பட்டது.

இது போன்றே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நஜ்ரானின் கிறிஸ்தவர்களுடன் செய்துகொண்ட உடன்படிக்கை பின்வருமாறு அமைந்திருந்தது.

நஜ்ரானிலும், அதனைச் சூழவுள்ள பிரதேசங்களிலும் வாழும் கிறிஸ்தவர்களுக்கு இந்த உடன்படிக்கையின் மூலம், இஸ்லாத்தின் தூதரால் அவர்களது உயிர், மதம், உடமை ஆகியவற்றின் பாதுகாவல் வழங்கப்படுகின்றது.அவர்களது மத விவகாரங்களை நடைமுறைப்படுத்துவதில் எத்தகைய ஒரு தலையீடும் இருக்காது.

அவர்களது உரிமைகள், சலுகைகளில் எத்தகைய ஒரு மாற்றமும் செய்யப்படமாட்டாது. எந்த ஒரு மதகுருவும் அவரது அந்தஸ்த்திலிருந்தோ, பதவியிலிருந்தோ நீக்கப்படமாட்டார்.

எந்த ஒரு துறவியும் அவரது மடாலயத்திலிருந்து வெளியேற்றப்படமாட்டார்.

எந்த ஒரு சிலுவையும் உடைக்கப்படமாட்டாது. அவர்கள் எவருக்கும் அநியாயமோ அக்கிரமமோ விளைவிக்கக் கூடாது. அவர்களுக்கும் அக்கிரமம் விளைவிக்கப் படமாட்டாது.

அவர்களுக்கும் முஸ்லிம்களிடமிருந்து அறவிடப்படும் எந்த ஒரு வரியும் விதிக்கப்படமாட்டாது. இஸ்லாமிய இராணுவத்தில் சேர்ந்து பணிபுரியவும் அவர்கள் நிர்ப்பந்திக்கப்படமாட்டார்கள்.

இஸ்லாமிய ஆட்சியில் வாழ்ந்த முஸ்லிமல்லாதார் திம்மிகள் என அழைக்கப்பட்டனர். இஸ்லாத்தின் கலீபா உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் ஆட்சியில் ஒரு தடவை வயது முதிர்ந்து, பலவீனமுற்ற ஒரு யூதர் தள்ளாடிய நிலையில் செல்வதைக் கண்டார்கள். அந்த யூத முதியவரை நோக்கி கலீபா அவர்கள் உங்களை நாங்கள் நீதியான முறையில் நடத்தவில்லை போல் எனக்குத் தோன்றுகின்றது. உங்களது இளமைக் காலத்தை நன்கு பயன்படுத்திவிட்டு, முதியவராகிப் பலவீனமடைந்ததும் உங்களை நாங்கள் புறக்கணித்து விட்டோம் எனக் கூறி, அவரை அன்புடன் தங்களது இல்லத்திற்கு அழைத்துச் சென்று, உணவளித்து உபசரித்து, முஸ்லிம்களின் திறைசேரியிலிருந்து, அவரது மரணம் வரை ஓய்வூதியம் பெறவும் ஏற்பாடு செய்தார்கள்.

எவர் ஒரு திம்மிக்கு அநியாயமான முறையில் கொடுமை இழைக்கின்றாரோ, அவரைப் பற்றி இறைவனிடம் முறைப்பாட்டாளனாக மறுமையில் நான் இருப்பேன். எனக்கூறிய நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வார்த்தைகள் வெறுமனே சித்தாந்தமாக வன்றி, இஸ்லாமிய சமூகத்தில் நடைமுறையில் செயல்படுத்தப்பட்டதை மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சி விளக்குகின்றது.

மனித நேயம் சகோதரத்துவம், அன்பு, கருணை ஆகிய அடிப்படைப் பெறுமானங்கள் மனித விழுமியங்களின் அடிப்படையில் எழுப்பப்பட்டு ஓர் ஆத்மீகப் பிரமாணத்தை மனித முயற்சிகளுக்கும், மனித உறவுகளுக்கும் வழங்குகின்ற சிறப்பம்சத்தை இஸ்லாமிய சமூக நீதியில் நாம் அவதானிக்க முடிகின்றது. அமைதியும், நிம்மதியும், நிறைவும் கொண்ட ஒரு சமூக அமைப்பைக் கட்டியெழுப்புவதற்கு இஸ்லாமிய சமூக நீதிக் கோட்பாடு கணிசமான பங்களிப்பை ஆற்றமுடியும்.

## ஓ.பி.எஸ்ஸின் மௌன புரட்சிக்கு பின் அம்பலமான உண்மைகள்

# என்னை கட்டாயப்படுத்தியே இராஜினாமா செய்ய வைத்தனர்

“ பதவியில் அமர்த்திவிட்டு அவமானப்படுத்தினர்..; பதவி விலக கட்டாயப்படுத்தினர்..; மக்கள், தொண்டர்கள் விரும்பினால் இராஜினாமாவை திரும்பப் பெறுவேன்; ஆட்சிப் பொறுப்புக்கு நல்லவர் ஒருவர்தான் வரவேண்டும்; கட்சியை காப்பாற்ற தன்னந்தனியாக போராடுவேன் ”

''என்னை கட்டாயப்படுத்தியே இராஜினாமா செய்ய வைத்தனர்'' என்று தமிழக முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் கண்ணீர் மல்க தெரிவித்துள்ளார். மெரீனா கடற்கரையிலுள்ள மறைந்த தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா நினைவிடத்தில் செவ்வாய்க்கிழமை இரவு 40 நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தியபின் ஊடகவியலாளர்களை சந்தித்த ஓ.பன்னீர்செல்வம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் மறைந்த தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் மரணம் குறித்து விசாரணை மேற்கொள்ள உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தலைமையில் விசாரணை கமிஷன் அமைக்கப்படும் என்று தெவித்துள்ளதோடு அரசியலில் புதிய திருப்பமாக தம்மோடு இணைந்து பணியாற்ற ஜெயலலிதாவின் அண்ணன் மகள் ஜெ. தீபாவுக்கு நேற்றைய ஊடகவியலார் சந்திப்பின்போது அழைப்பு விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

''என்னை கட்டாயப்படுத்தியே இராஜினாமா செய்ய வைத்தனர். மக்கள் விரும்பினால் இராஜினாமாவை திரும்பப் பெறுவேன். கட்சிப் பொறுப்பிலிருந்து என்னை நீக்க யாருக்கும் உரிமையில்லை. அ.தி.மு.கவுக்கு சிறப்பான தலைமை தேவை. தற்போது கட்சியில் நடைபெறும் நிகழ்வுகளால், தொண்டர்கள் அதிருப்தி அடைந்திருக்கின்றனர். மக்களுக்காக தன்னந்தனியாக போராடத் தயாராக இருக்கிறேன்'' என்று அதிரடியாக அறிவித்துள்ளார்.

இதனையடுத்து கட்சியின் பொருளாளர் பதவியிலிருந்து ஓ.பி.எஸ். நீக்கப்படுவதாக அ.தி.மு.க. பொதுச் செயலாளர் சசிகலா அறிவித்தார்.

**பதவி நீக்க எவருக்கும் உரிமையில்லை**

இந்நிலையில், தனியார் தொலைக்காட்சிக்கு தொலைபேசி வாயிலாக பேட்டியளித்த ஓ.பன்னீர்செல்வம், கட்சியின் பொருளாளர் பதவியிலிருந்து என்னை நீக்க யாருக்கும் உரிமையில்லை. கட்சிக்கும், ஜெயலலிதாவுக்கும் விசுவாசியாக இருக்கிறேன். பின்னணியிலிருந்து என்னை யாரும் இயக்கவில்லை.

**சிரிப்பது தப்பா?**

சட்டப்பேரவையில் நான் எதிர்க்கட்சித் தலைவருடன் சிரித்துப் பேசியதாக குற்றஞ்சாட்டுகின்றனர். சிரிப்பது மனிதர்கள் இயல்பு. விலங்குகள் சிரிப்பதில்லை. தேக்கி வைத்திருந்த ஆதங்கத்தை வெளிப்படுத்தினேன்.

சாதாரண குடும்பத்தில் பிறந்த என்னைப் போன்றோரை உயரத்துக்கு வர வைத்திருக்கிறார் 'அம்மா'. அவரது ஆன்மா சாந்தியடைய வேண்டும் என நான் தினந்தோறும் வேண்டிக் கொண்டிருக்கிறேன். அவரது நினைவிடத்துக்கு பிரார்த்தனை செய்யவே சென்றேன். என் மன ஓட்டத்தில் ஜெயலலிதா மறைவு முதல் இன்றுவரை நடந்த நிகழ்வுகள் ஓடின. அப்போது அவற்றை வெளிப்படுத்த வேண்டும் என அம்மாவின் ஆன்மா உந்தியது.

அதனடிப்படையிலேயே அங்கு குழுமியிருந்த செய்தியாளர்களிடம் அம்மா மறைவு முதல் இன்றுவரை நடந்த சம்பவங்களைத் தெரிவிக்க வேண்டும் என்ற கட்டாய சூழலுக்கு ஆளாக்கப்பட்டேன். 100%இல் வெறும் 10% மட்டுமே நான் சொல்லியிருக்கிறேன். அதற்குக் காரணம் என் சுய கட்டுப்பாடு.

அடுத்தவர் மனதை புண்படுத்தக் கூடாது என்பதற்காகவே அமைதி காத்தேன். எனது பொறுமை முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவிடமிருந்து வந்தது. சட்டப்பேரவை உறுப்பினர்களால் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு முதல்வராகப் பதவியேற்றுக் கொண்டேன். ஆனால், முதல்வர் பதவியேற்றதிலிருந்தே பிரச்சினை தொடங்கிவிட்டது. ஆந்திர முதல்வரைச் சந்தித்து தண்ணீர் பெற்றது, ஜல்லிக்கட்டு பிரச்சினைக்கு தீர்வு எட்டப்பட்டது. இவையெல்லாம் அவர்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்தின.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மக்கள் மத்தியில் செல்வாக்கு பெற்றிருக்கிறார். அதற்குக் காரணம் அவரது மக்கள் நலப் பணிகள். அவர் சம்பாதித்துவைத்த அந்த நல்ல பெயருக்கு களங்கம் விளைவிக்கப்பட்டது எனக்கு கோபம் வந்தது.

என்னிடம் இறுக்கம் காட்டினார்கள். தனியார் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டபோது நான் பேச ஆரம்பித்தவுடன் சசிகலா எழுந்து சென்றார். இப்படியாக அவர் தொடர்ந்து என்னிடம் இறுக்கம் காட்டினார்.

இது குறித்து என்னிடம் பலரும் கேள்வி எழுப்பினார்கள். அவர்களிடம் எல்லாம், எனக்குத் தெரியவில்லை நான் எந்தத் தவறும் செய்யவில்லை என்றேன். இப்படித்தான் பல நிகழ்வுகள் புரியாத புதிராக இருந்தது. அந்த நேரத்தில்தான் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் என்னிடம் பேசினார். கழகப் பொதுச் செயலாளரே தமிழக முதலமைச்சராக வரவேண்டும் என்றார். என்னை ஏன் அவமானப்படுத்தினார்கள் எனத் தெரியவில்லை. நிலையற்ற தன்மையை அமைச்சர்களைக் கொண்டே உருவாக்குகிறார்களே என்ற வேதனை இருந்தது. என்னுடைய அதிருப்தியை யாரிடமும் தெரிவிக்காமலேயே எனது கடமையை செய்துவந்தேன்'' என்றார்.

**பேட்டி கொடுக்கச் சொன்னார்கள்**

அவர் மேலும் தெரிவிக்கையில்

''நான் பேட்டி கொடுக்க வேண்டும் என்றார்கள். என்ன பேட்டி என்று கேட்டபோது, சசிகலா முதலமைச்சராகிறார் என நீங்களே பேட்டி மூலம் தெரிவிக்க வேண்டும் என்றனர். அரசியல் சாசனப்படி முதல்வராகப் பதவியேற்றுள்ள நான் அவ்வாறாக ஒரு பேட்டியளித்தால் அது சட்டச் சிக்கலை ஏற்படுத்தும் என்றேன். அதற்குக் கண்டிப்பு தெரிவித்தார்கள். எனக்கு தாங்க முடியாத மன வேதனை இருந்தது. கட்சியின் தொண்டர்களின் மன வேதனையையும் என்னால் உணர முடிந்தது. கட்சிக்கு அவப்பெயர் வந்துவிட்டதை நான் உணர்ந்தேன். இவை மிகுந்த வேதனையைத் தந்தது. ஏற்கெனவே நான் வேண்டாம் என்று சொல்லியும் எனக்கு முதல்வர் பதவியைக் கொடுத்துவிட்டு எதற்காக என்னை அவமானப்படுத்துகிறார்கள் என்ற வேதனை ஏற்பட்டது'' எனத் தெரிவித்தார்.

**நான் மிகப்பெரிய விசுவாசி**

''எனது விசுவாசம் பற்றி கழகத்தின் தொண்டர்களுக்கு நன்றாகவே தெரியும். எனது அரசியல் வாழ்க்கையில் நான் படிப்படியாக பெற்ற பதவிகள் அனைத்துமே நான் கேட்காமலேயே கொடுக்கப்பட்டது. அதற்குக் காரணம் எனது விசுவாசமே. இதை நான் பெருமையாகச் சொல்லவில்லை. எனக்கு வழங்கப்பட்ட பதவிகள் அனைத்துமே ஜெயலலிதாவால் முழு மனதாக வழங்கப்பட்டன'' என்றார்.

**அப்போலோவில் ஜெயலலிதாவைப் பார்க்கவில்லை**

''அப்போலோ மருத்துவமனையில் ஜெயலலிதா சேர்க்கப்பட்டிருந்த 75 நாட்களில் நான் ஒருமுறைகூட அவரைப் பார்க்கவில்லை. அவரை பார்க்கமுடியாதது எனது துரதிர்ஷ்டம் எனக் கருதுகிறேன். முன்னாள் முதலமைச்சர் குறித்து பல்வேறு சந்தேகங்கள் எழுப்பப்பட்டுள்ள நிலையில் அது குறித்து விளக்கங்களை அளிக்க வேண்டிய கடமை இருக்கிறது'' என்றார்.

**ஏன் இந்த அவசரம்**

இவ்வளவு அவசரமாக முதலமைச்சராக வேண்டும் என்ற எண்ணம் எப்படி அவருக்கு வந்தது என்பது எனக்குப் புரியவில்லை. என் மீது சசிகலாவுக்கு என்ன ஈகோ என்பது எனக்குத் தெரியவில்லை. கட்சியின் அடிமட்ட தொண்டர்களின் மனநிலை சட்டப்பேரவை, நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரியும். அதனடிப்படையில்தான் ஏன் அவசரப்பட்டார் என்ற கேள்வி எனக்குள் எழுந்தது. காலங்கள் கனியும்போது பொதுச் செயலாளரை முதல்வராகியிருக்கலாம். நல்ல சூழல் உருவாகும்வரை காத்திருப்பதே ஆரோக்கியமான அரசியலுக்கு எடுத்துக்காட்டு. எந்தப் பதவிக்கும் யாரையாவது திணித்தால் எத்தகைய விபரீதம் உண்டாகும் என்பது நாமெல்லாம் அறிந்ததே. தெரிந்திருந்தும் ஏன் அவசரம் காட்டுகிறார்கள் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

சசிகலா அவசரம் காட்டுகிறார் என்று என்னிடம் சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் கூறியபோதெல்லாம் என்னிடம் கூறியதோடு நிறுத்திவிடுங்கள். வேறு எங்கும் சொல்லாதீர்கள் என்று அறிவுரை கூறினேன். ஆனால், இன்று எல்லாவற்றையும் வெளிப்படையாக பேச வேண்டிய கட்டாய நிலைக்கு நான் வந்துள்ளேன்'' எனக் தெரிவித்தார்.

**இராஜினாமா ஏன்?**


''கட்சிக் கட்டுப்பாட்டை மீறினார், துரோகம் செய்துவிட்டேன் என்று சொல்வார்கள் என்ற குற்றஞ்சாட்டுவார்கள் என்பதற்காகத்தான் கட்டாயப்படுத்தலுக்குட்பட்டு இராஜினாமா செய்தேன்'' எனக் தெரிவித்தார்.

**பா.ஜ.கவுக்கு ஆதரவாக செயல்படவில்லை**

''நான் பா.ஜ.கவுக்கு ஆதரவாக செயற்பட்டதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டு ஆதாரமற்றது. எப்போதாவது நான் பா.ஜ.கவுக்கு ஆதரவாக வாதாடியிருக்கிறேனா அல்லது கருத்து சொல்லியிருக்கிறேனா. தமிழகத்தில் ஜல்லிக்கட்டு போராட்டம் மிகப்பெரிய போராட்டமாக உருப்பெற்றது. அத்தகைய நிலையில், சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்ற சூழல் உருவானால் அ.தி.மு.கவுக்கு எவ்வளவு பெரிய அவப்பெயர் வரும். இது எனக்கு கவலை ஏற்படுத்தியது. அதனால் டில்லி சென்றேன். பிரதமரும் தமிழகத்தின் சூழலை அறிந்து உதவினார். இதுதான் நடந்தது. இதில் நான் பா.ஜ.கவுக்கு ஆதரவாக செயற்பட்டதாக குற்றம் கூறுவதில் என்ன நியாயம் இருக்கிறது'' என்று விளக்கினார்.

**யாருக்கும் உரிமை இல்லை:**

''கட்சி பொறுப்பிலிருந்து என்னை நீக்க யாருக்கும் உரிமையில்லை. இந்த பதவி 10 ஆண்டுகளுக்கு முன்னர் ஜெயலலிதா எனக்கு வழங்கியது'' என்று திட்டவட்டமாக தெரிவித்தார்.




## உலகச் செய்திகள்

# ஒபாமாவின் நடவடிக்கையே ஐ.எஸ். உருவாக காரணம்

### ஈரான் உயர் தலைவர் குற்றச்சாட்டு



அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஒபாமாவின் தவறான நடவடிக்கையே, ஐ.எஸ். உருவாக காரணம் என ஈரான் உயர் தலைவர் அயத்துல்லா அலி காமெனி குற்றம் சாட்டியுள்ளார்.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள டொனால்ட் டிரம்ப், அதிரடி நடவடிக்கையாக உள்நாட்டுப்போரில் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள சிரியாவிலிருந்து அகதிகள் அமெரிக்காவுக்கு வர காலவரையற்ற தடை விதித்தார்.

மேலும், ஈராக், சிரியா, ஈரான், லிபியா, சோமாலியா, சூடான், யெமன் ஆகிய 7 நாடுகளை சேர்ந்தவர்களுக்கு விசா வழங்குவதை 3 மாதங்களுக்கு நிறுத்தி வைத்து டிரம்ப் உத்தரவிட்டார். ஜனாதிபதி டிரம்ப்பின் இந்த உத்தரவுக்கு சர்வதேச நாடுகள் மத்தியில் கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

இந்நிலையில், அயத்துல்லா அலி காமெனி அந்நாட்டு இராணுவ தளபதிகளிடையே உரையாற்றுகையில்:-

''டிரம்புக்கு நாம் நன்றியுடையவர்களாக இருக்கவேண்டும். ஏனெனில், அமெரிக்காவின் உண்மையான முகத்தை டிரம்ப் காட்டிவிட்டார். அமெரிக்காவின் ஆளும் அமைப்பில் அரசியல், பொருளாதார, அறம், சமூக ஊழல் நிலவி வருகிறது என்று நாம் 30 ஆண்டுகளாக கூறிவந்தோம். இப்போது, நாம் கூறிவந்தது உண்மையே என்பதை டிரம்ப் நிரூபித்துள்ளார். அவர் தேர்தல் பிரசாரமும் சரி, வெற்றிக்குப் பின்னரான நடவடிக்கைகளிலும் சரி அவர் அமெரிக்காவின் உண்மையான முகத்தை காட்டி வருகிறார்.

அமெரிக்க விமான நிலையத்தில் 5 வயது ஈரான் சிறுவனின் கையில் விலங்கு மாட்டியதிலிருந்தே அமெரிக்க மனித உரிமைகளின் உண்மையான அர்த்தத்தை டிரம்ப் உலகத்திற்கு காட்டிவிட்டார்.

ஈரான் நெருப்புடன் விளையாடுவதாக டிரம்ப் கூறுகிறார் , மேலும் ஒபாமா அளித்த சலுகைகளுக்கு நாம் நன்றியுடன் இல்லை என்கிறார் ட்ரம்ப். ஆனால், உண்மையில் ஒபாமாதான் ஈரானை முடக்கும் பொருளாதார, இராணுவ தடைகளைப் பிறப்பித்தார், ஒபாமாவின் செயல்களால்தான் ஈராக் மற்றும் சிரியாவில் ஐ.எஸ். அமைப்பு உருவானது, ஐ.எஸ். உருவாக ஒபாமாவின் சில நடவடிக்கைகளே உதவியது'' என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஆப்கான் உச்ச நீதிமன்றில் தற்கொலை தாக்குதல்

### 20 பேர் பலி; 41 பேர் படுகாயம்; ஜனாதிபதி அஷ்ரப் கனி கண்டனம்




ஆப்கானிஸ்தான் உச்ச நீதிமன்றத்தில் நடந்த தற்கொலை தாக்குதலில் 20 பேர் உயிரிழந்துள்ளதுடன், 41 படுகாயமடைந்துள்ளனர். இதில் பலரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலிலுள்ள உச்ச நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் மாலை 5 மணியளவில் பணி முடிந்து ஊழியர்கள் வெளியேறிக் கொண்டிருந்தவேளை, நீதிமன்றத்திற்கு வெளியே வந்த தற்கொலை படை தீவிரவாதியொருவர் தனது உடலில் கட்டியிருந்த குண்டுகளை வெடிக்க செய்தான். இதனால் உச்ச நீதிமன்ற ஜன்னல்கள், கதவுகள், நொறுங்கின. ஆங்காங்கே கட்டடங்கள் சிதறின.

அதைத் தொடர்ந்து பதட்டமும், பரபரப்பும் ஏற்பட்டது. பொதுமக்களும், நீதிமன்ற ஊழியர்கள் ஓட்டம் பிடித்தனர். இத்தாக்குதலில் 20 பேர் அதே இடத்தில் உயிரிழந்துள்ளதுடன், 41 பேர் படுகாயமடைந்துள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் பத்திரிகை அச்சுக்கு செல்லும் வரை இத்தாக்குதலுக்கு எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. ஆனால் தலிபான்கள் தாக்குதல் நடத்தியிருக்கலாம் என கருதப்படுகிறது.

இக்கொடூர தாக்குதலுக்கு ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி அஷ்ரப் கனி கண்டனம் தெரிவித்துள்ளார். இது மனிதாபிமானத்துக்கு எதிரான செயல் என தெரிவித்துள்ளார்.

# பிலிப்பைன்ஸில் சீனாவின் புதிய தீவுகள்

தென்சீனக் கடலைப் போல பிலிப்பைன்ஸின் கடலை ஒட்டிய பகுதிகளில் செயற்கைத் தீவுகளை உருவாக்க சீனா திட்டமிட்டுள்ளது என, பிலிப்பைன்ஸ் குற்றம்சாட்டியுள்ளது.

தென்சீனக் கடலை நீண்ட நாட்களாக சொந்தம் கொண்டாடி வரும் சீனா, அந்தக் கடற்பரப்பில் செயற்கைத் தீவுகளை அமைத்து அங்கு இராணுவ ஒத்திகைகளை நடத்திவருகிறது. இதனால், சீனாவுக்கும், பிலிப்பைன்ஸ், மலேசியா, தாய்வான் மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளுக்கிடையே மோதல் முற்றிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், பிலிப்பைன்ஸ் கடற்பரப்பிலும் சீனா செயற்கைத் தீவுகளை உருவாக்க முயற்சித்து வருவதாக பிலிப்பைன்ஸின் பாதுகாப்பு செயலாளர் குற்றம் சாட்டியுள்ளார். இது குறித்து கருத்து தெரிவித்துள்ள அவர், ''பிலிப்பைன்ஸின் கடலை ஒட்டியுள்ள பகுதிகளில், சீனா திட்டமிட்டு செயற்கைத் தீவுகளை உருவாக்க திட்டமிட்டுள்ளது ஏற்றுக்கொள்ள முடியாதது.

ஏற்கெனவே தென் சீனக் கடல் பகுதியில், பல செயற்கைத் தீவுகளை சீனா உருவாக்கியதுடன் அங்கு இராணுவ ஒத்திகை நடத்தி வருகிறது. பிலிப்பைன்ஸின் கடலை ஒட்டிய பகுதிகளில் புதிய தீவுகளை உருவாக்கி தென்சீனக் கடலை சீனா தனது முழு கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள திட்டமிட்டுள்ளது. இதற்கு நாம் அனுமதித்தால் இது நமது நாட்டுக்கு மிகப் பெரிய பிரச்சினையாக மாறக் கூடும்'' என தெரிவித்துள்ளார்.

சீனாவின் இந்த செயலை சர்வதேச நாடுகள் மத்தியில் பிரச்சினையாக கொண்டு செல்ல முடிவெடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## வெலிகடை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

மேலும், குறித்த சம்பவத்தில் படுகொலை செய்யப்பட்ட 16 பேரினதும் குடும்பங்களுக்கு தலா 5 இலட்சம் ரூபாவும், காயமடைந்தவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாவும் இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அது குறிப்பிட்டது.

பாராளுமன்றம் நேற்று புதன்கிழமை பிற்பகல் 1 மணிக்கு சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் கூடியது. இதன்போது இடம்பெற்ற பிரதமரிடம் கேள்விகளைக் கேட்கும் நேரத்தின்போது, எதிர்க்கட்சிகளின் பிரதம கொரடாவும் ஜே.வி.பியின் தலைவருமான அநுரகுமார திஸாநாயக்க எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்படித் தகவலை வெளியிட்டார்.

அதாவது, 2012 ஆம் ஆண்டு இடம்பெற்ற வெலிக்கடை துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பில் ஆராய்வதற்காக 2015 ஜனவரியில் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை ஏன் இதுவரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை? என்று அநுர எம்.பி. பிரதமரிடம் கேள்வியொன்றை எழுப்பினார்.

இதற்கு பதில் அளித்த பிரதமர், வெலிக்கடை சம்பவம் தொடர்பில் ஆராய்வதற்காக 2015 ஜனவரி 15 ஆம் திகதியன்று முன்னாள் நீதியரசர் நம்புவசம் உள்ளிட்ட உறுப்பினர்கள் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டது. அது தனது அறிக்கையை 2015 ஜுன் 5 ஆம் திகதி அரசுக்கு வழங்கியது. இவ்வறிக்கையை நான் தற்போது சபையில் சமர்ப்பிக்கின்றேன். இக்குழு பரிந்துரை செய்துள்ள சிபாரிசுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு சிறைச்சாலைகள் அமைச்சருக்கு நாம் ஆலோசனைகளையும் வழங்கியுள்ளோம்.

அதற்கமைய, சம்பவத்தில் பலியான 16 பேரினதும் குடும்பத்துக்கு தலா 5இலட்சம் ரூபாவும், காயமடைந்தவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாவும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். அத்தோடு, அந்த அறிக்கைக்கு இணங்க இது திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட படுகொலையாகும் என்றார்.

அப்படியாயின், படுகொலை என நிரூபனமாகியுள்ள இந்த சம்பவத்தை செய்தது யார்? குற்றவாளிகளை கண்டறிந்து தண்டனை வழங்க ஏன் அரசு நடவடிக்கை எடுக்கவில்லை? என்று அநுரகுமார எம்.பி. மீண்டும் எழுப்பிய கேள்விக்கு பதில் அளித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இது தொடர்பில் பொலிஸின் அறிக்கையொன்றையும் நாம் கோரியுள்ளோம். அது கிடைத்தவுடன் அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

அத்தோடு, 2015 ஜுன் மாதம் சமர்ப்பிக்கப்பட்ட வெலிக்கடை தொடர்பிலான அறிக்கை ஒன்றரை வருடங்களாக ஏன் சபைக்கு சமர்ப்பிக்கவில்லை? நாங்கள் கேள்வி எழுப்பிய பின்னர் தான் இது வெளிப்படுத்தப்பட்டது. அதுவரை இந்த அறிக்கை மறைக்கப்பட்ட அறிக்கையாகவே இருந்தது என்று ஜே.வி.பி. தலைவர் இதன்போது சபையில் முன்வைத்த குற்றச்சாட்டையும் பிரதமர் நிராகரித்தார்.

## ஏறாவூர் இரட்டைக்கோலை : சாட்சியாளர் நீதிமன்றில் இரகசிய வாக்குமூலம்



மட்டக்களப்பு ஏறாவூரில் அண்மையில் இடம்பெற்ற இரட்டைக்கொலைச் சம்பவம் தொடர்பாக இரண்டாவது சாட்சியாளரிடம் நீதிமன்றில் இரகசிய வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.இதே வேளை ஏறாவூர் இரட்டைக்கொலைச் சந்தேகநபர்கள் ஆறுபேரின் விளக்கமறியல் எதிர்வரும் 22 ஆம் திகதிவரை மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பான விசாரணைகள் ஏறாவூர் சுற்றுலா நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.ஐ.எம்.றிஸ்வி முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

சந்தேகநபர்கள் ஆறுபேரும் ஏறாவூர் சுற்றுலா நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டதை அடுத்து இவர்களை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி எம்.ஐ.எம் றிஸ்வி உத்தரவிட்டுள்ளார். ஏறாவூர் முகாந்திரம் வீதி முதலாம் ஒழுங்கையிலுள்ள வீட்டில் படுத்துறங்கிய 56 வயதான என்எம்.சித்தி உஸைரா மற்றும் அவரது திருமணமான மகளான 32 வயதுடைய ஜெனீரா பாணு மாஹிர் ஆகியோர் அண்மையில் பொல்லால் அடித்து கொடூரமாகக்கொலை செய்யப்பட்டிருந்தனர்.

இச்சம்பவம் குறித்த சந்தேக நபர்கள் நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டவேளை வசம்பு என்றழைக்கப்படும் 28 வயதுடைய உசனார் முஹம்மது தில்ஷான் இரகசிய வாக்குமூலம் வழங்க அனுமதியளிக்குமாறு கேட்டுக்கொண்டதையடுத்து இவ்வழக்கு விசாரணை சில நிமிட நேரம் ஒத்தி வைக்கப்பட்டு பின்னர் தனியாக அழைக்கப்பட்டு வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டது.

கடந்த தவணையின்போதும் இவர் இரகசிய வாக்குமூலம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

24 வயதுடைய முஹம்மது பாஹிர், வசம்பு என்றழைக்கப்படும் 28 வயதுடைய உசனார் முஹம்மது தில்ஷான், 23 வயதுடைய கலீலுர் ரகுமான் முஹம்மது றாசிம், 23 வயதுடைய புஹாரி முஹம்மது அஸ்ஹர், 30 வயதுடைய இஸ்மாயில் சப்ரின் மற்றும் 50 வயதுடைய அபூபக்கர் முகம்மது பிலால் ஆகியோரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த வழக்கு விசாரணையினை தொடர்ந்து நீதிமன்ற வளாகத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## காணாமல் போனோர் அலுவலக சட்டத்தில் திருத்தம்

■ அ. அருண் பிரசாந்த்

காணாமற்போனோர் தொடர்பிலான காரியாலயத்தை அமைத்து, நிர்வகித்தல் மற்றும் பணிகளை நிறைவேற்றுதலுக்கான சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள அமைச்சரவையினால் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

காணாமற்போனோர் அல்லது காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பிலான விசாரணைகளை மேற்கொள்வதற்காக விசேட காரியாலயம் ஒன்றை அமைக்கும் சட்டத்துக்கு, 2016 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 23 ஆம் திகதி பாராளுமன்றில் அனுமதி வழங்கப்பட்டது.

அதற்கிணங்க, தமது பணிகளை நிறைவேற்றுவதற்காக ஒரு நபருடனோ அல்லது ஏதேனும் ஒரு அமைப்புடனோ ஒப்பந்தங்களை மேற்கொள்ள இந்த காரியாலயத்துக்கு அதிகாரம் உள்ளது என்று அச்சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ள 11 ஆவது பிரிவின் (அ) உறுப்புரையை அகற்றுவதற்கே தற்போது யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அந்த வகையில், அச்சட்டத்தினை திருத்தம் செய்வதற்கான சட்டவரைபொன்றை மேற்கொள்ள சட்டவரைஞர் திணைக்களத்துக்கு ஆலோசனை வழங்குவது குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கே அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## அரிசியின் விலை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பாவனையாளர் அதிகார சபை அறிவித்துள்ளது.

இந்த விலை நிர்ணயத்தின் படி நாட்டரிசியின் ஆகக் கூடிய சில்லறை விலை கிலோ ரூபா 72 ஆகவும், பச்சையரிசி கிலோ ரூபா 70 ஆகவும், சம்பா (பொன்னி மற்றும் கீரி தவிர்ந்தது) கிலோ ரூபா 80 ஆகவும் இருக்குமென பாவனையாளர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

நிர்ணயிக்கப்பட்ட அரிசி விலையிலும் பார்க்க அதிகரித்து விற்கும் வர்த்தகர்களுக்கு எதிராக பாவனையாளர் அதிகார சபை கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளுமென கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார். பாவனையாளர் அதிகார சபையின் உயர் அதிகாரிகாரிகளுடன் நடாத்திய கூட்டத்தின் பின்னர் அவர் இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

இந்த நிர்ணயிப்பு விலையை அனைத்து வர்த்தகர்களும் பின்பற்ற வேண்டும் எனவும் தெரிவித்த அமைச்சர் அரிசி இறக்குமதியாளர்கள், இறக்குமதி செய்யும் கொள்ளளவுகள் குறித்த தகவல்களை திரட்டும் வகையிலான நடவடிக்கைகளை சுங்கத்திணைக்களத்துடன் இணைந்து மேற்கொள்கின்றோம் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

## எல்லை நிர்ணயம்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தொடர்பாக உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் பைஸர் முஸ்தபா நேற்று தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரியவைச் சந்தித்துரையாடினார்.

நேற்று நண்பகல் இடம்பெற்ற இந்த கலந்துரையாடலில் உள்ளூராட்சிமன்ற எல்லைகள் தொடர்பாக உள்ள சில பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடப்பட்டதாக தேர்தல் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

அமைச்சருடன் அமைச்சின் செயலாளர் சமல் பத்மசிறியும் கலந்து கொண்டார்.

## அதிபர்களின்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இத்திட்டம் தொடர்பிலான பத்திரத்தை அமைச்சரவைக்கு கொண்டுவந்தார்.

மேற்படி இந்த யோசனைக்கு அமைச்சரவையில் தற்போது அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளமையால், வெகுவிரைவிலேயே அதிபர்களின் கொடுப்பனவில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்று அரசு தெரிவித்தது.

## 15 அரச...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

சமர்ப்பிக்கப்படும் 3 ஆவது அறிக்கையான இதில், கூட்டுறவு மொத்தவிற்பனைக் கூட்டுத்தபானம் (சதொச), வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம், அரசபொறியியல் கூட்டுத்தாபனம், தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, இலங்கை கிரிக்கெட் நிறுவனம், இலங்கை ரூபாவாஹினி கூட்டுத்தாபனம், தேசிய லொத்தர் சபை, இலங்கை மின்சாரசபைக்குரிய நிலைபெறு தகுசக்தி அதிகார சபையும், இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனம், இலங்கை ஆயுர்வேத மருந்துப்பொருள் கூட்டுத்தபானம், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழுள்ள 4 மகநெகும நிறுவனங்கள், துறைமுகங்கள் அதிகாரசபை, குருநாகல் பெருந்தோட்டக் கம்பனி, ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகிய 15 நிறுவனங்கள் தொடர்பான விசாரணை விபரங்களே உள்ளடக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான கோப் குழுவின் அறிக்கையை சபைக்கு சமர்ப்பித்து மேலும் உரையாற்றிய சுனில் ஹந்துநெத்தி எம்.பி,

இந்த 15 நிறுவனங்களினாலும் எமது நாட்டின் பொருளாதாரத்துக்கு மேற்பொள்ளப்பட்டுள்ள பங்களிப்பு மற்றும் ஏற்பாடுள்ள பாதிப்புகள் குறித்து நாம் தீவிரமாக ஆராய்ந்துள்ளோம்.

அந்தவகையில், கடந்த காலங்களில் நட்டம் என்பதைவிடவும் வீண் விரயமிக்க, பொருளாதாரத்துக் கேடான பல்வேறு திட்டங்கள் இந்த நிறுவனங்களின் ஊடக மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பது கண்டறியப்பட்டுள்ளது.

குறிப்பாக சூரியவெவ மைதானத்துக்கு தற்போது உரிமையாளர் ஒருவர் இல்லாத நிலைமையொன்றே இருக்கிறது. 5.3 பில்லியன் ரூபா துறைமுகங்கள் அதிகாரசபையினால் செலுத்தப்படுகிறதா அல்லது இலங்கை கிரிக்கெட் நிறுவனம் செலுத்துகிறதா என்ற பேச்சுக்களும் இருக்கின்றன. இதனால் மட்டும் 530 கோடி ரூபா நட்டம் இருக்கிறது.

மேலும், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் அந்த அதிகார சபைக்கு சம்பந்தமில்லாமல் மேற்கொள்ளப்பட்ட சில திட்டங்களினால் 57 ஆயிரம் மில்லியன் வரை பொருளாதாரத்துக்கு கேடான விடயங்கள் இடம்பெற்றுள்ளன.

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்திற்கு மில்லியன் கணக்கான டொலர்களும் யூரோக்களும் கிடைத்துள்ளன. எனினும், அந்த நிதிகள் பயன்படுத்தப்பட்டவிதம் தொடர்பில் நாம் ஆராய்ந்து பார்த்துள்ளோம்.

இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தபானம் 2918 மில்லியன் ரூபா அதே போல், ஹம்பாந்தோட்டை துறைமுகத்தின் நட்டம் 37 ஆயிரம் மில்லியன் ரூபா என்றும் இந்த அறிக்கையில் இருக்கிறது.

அந்தவகையில், இந்த அறிக்கையில் நாம் வெளிப்படுத்தியுள்ள 15 நிறுவனங்களிலும் சுமார் 11 ஆயிரம் கோடி ரூபா அளவிலான நட்டம் நாட்டுக்கு ஏற்பட்டுள்ளது என்று தெரியவந்துள்ளது.

நாம் இந்த அறிக்கைகளை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பது போன்றே இந்த அறிக்கைகள் தொடர்பான நடவடிக்கைகள் மற்றும் பின்னூட்டல் செயற்பாடுகளுக்கான பொறுப்புகள் என்பன சம்பந்தப்பட்ட விடயத்துக்கான அமைச்சர்களுக்கும் நிறுவனங்களுக்கும் இருக்கின்றன. எனவே, இந்த அறிக்கையை விவாதத்துக்கு உட்படுத்தி உரிய நடவடிக்கை எடுக்குமாறு சபாநாயகரிடம் கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

## சார்க்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்னாயக்கவினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கே இணங்கியே அரசு இத்தீர்மானத்தை எடுத்துள்ளது.

அதாவது, சட்டமும் ஒழுங்கும் குறித்த சார்க் செயலாளர்களின் 8 ஆவது கூட்டம் மற்றும் சார்க் குடியமர்வு அதிகாரிகளின் கூட்டத்தை இலங்கையில் நடத்துவதற்கும் அதற்கான தலைமைத்துவத்தை இலங்கைக்கு வழங்குவதற்குமான யோசனையே அமைச்சர் சாகலவினால் முன்வைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## அமைச்சரவையில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

நெடுஞ்சாலைகள் அமைச்சரும் சபை முதல்வருமன லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

அமைச்சரவையின் வாராந்த முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு, நேற்று முற்பகல் பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது.

இதன்போது, அமைச்சரவையில் வெகுவிரைவிலேயே சில மாற்றங்கள் இடம்பெறும் என்று அரசிலுள்ள சில முக்கியஸ்தர்களாலேயே கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன. அதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றனவா? என்று அமைச்சரிடம் வினவப்பட்டபோதே மேற்கண்ட பதிலை அவர் வழங்கினார்.

அதாவது, அமைச்சர்கள் எவ்விதமான கருத்துக்களையும் முன்வைக்கமுடியும். ஆனால், ஜனாதிபதியும் பிரதமரும் தான் அரசின் பிரதானிகளாக இருக்கின்றனர். இவர்கள் இருவரும் இதுவரை அமைச்சரவையில் மாற்றங்களை ஏற்படுத்துவது தொடர்பில் கதைத்துக் கொள்ளவே இல்லை. அப்படியான யோசனையிலும் அவர்கள் இல்லை என்று அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல பதிலளித்தார்.

## கட்சித் தலைவர்களது...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சு அதிகாரிகளுக்கு நேற்று பிரதமர் பணிப்புரை வழங்கியதாக தேசிய சகவாழ்வு மொழிகள் அமைச்சர் மனோகணேசன் தொரிவித்தார்.

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக ஆராய்வதற்கு பாராளுமன்றக் கூட்டத்தில் நேற்று பிரதமர் தலைமையில் கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதிலுள்ள சிக்கல்களை கட்சித் தலைவர்கள் எடுத்துக் கூறியுள்ளனர்.

புதிய தேர்தல் முறையின் கீழ் தேர்தலை நடத்துவதில் எழும் சிக்கல்கள் பற்றி சிறுபான்மைக்கட்சிகளும் மற்றும் சிறு கட்சிகளும் எடுத்து விளக்கினர்.

70 சதவீதம் தொகுதி 30 சதவீதம் விகிதாசாரம் என்ற அடிப்படையில் தேர்தல் நடத்தப்பட்டால் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களது எண்ணிக்கை 8000 க்கும் அதிகமாகும். இவ்வாறு எண்ணிக்கையை அதிகரித்தால். மக்கள் சபிப்பார்கள் என்று அமைச்சர் மனோகணேசன் எடுத்துக் கூறியுள்ளார். இதேநேரம் சிறுபான்மைக் கட்சிகள் 60சதவீதம் தொகுதி 40 சதவீதம் விகிதாசார முறை எனக் கோரிக்கை விடுத்துள்ளது. இக் கோரிக்கை அங்கீகரிக்கப்பட்டால் உள்ளூராட்சி முறை உறுப்பினர்களது எண்ணிக்கை பத்தாயிரமாக அதிகரிக்கும். இவ்வாறு அதிகரிப்பு இடம்பெற்றால் அதற்கான வசதிகளை வழங்குவது இலகுவானதல்ல எனக் கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டதாக அமைச்சர் மனோ சணேசன் மேலும் தெரிவித்தார்.

கொழும்பு மாநகர சபையில் இப்போது 53 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். புதிய திட்டம் அமுலாக்கப்பட்டால் அது நூற்றுக்கும் அதிகமாக இருக்கும். அதற்கான வசதிகள் கொழும்பு மாநகர சபையில் கூட இல்லை என்றும் அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

நேற்றைய கூட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திக் கட்சி சார்பில் அமைச்சர் நிமல் ஸ்ரீ பாலடி சில்வா, மக்கள் விடுதலை முன்னணி சார்பில் அனுரகுமார திசாநாயக்க, கூட்டு எதிர்க்கட்சி சார்பில் தினேஷ் குணவர்தன, தமிழர் கூட்டமைப்பு சார்பில் எம். சுமந்திரன், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் பிரதி அமைச்சர் அமீர்அலி மற்றும் மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர் பைஸர் முஸ்தபா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## இவ்வருட...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஊடகவியலாளர் மாநாடு இடம்பெற்றபோதே மேற்படித் தகவலை அரசு வெளியிட்டது.

அத்தோடு, சைட்டம் தொடர்பில் நீதிமன்றினால் விடுக்கப்பட்டத் தீர்ப்பினை மாற்றியமைக்க முடியாது என்றும் தேவையேற்படின் மேன்முறையீடு செய்ய முடியும் என்றும் அரசு தெரிவித்தது.

இச்சந்திப்பின் போது அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்த கருத்துக்கள் வருமாறு,

நாட்டிலுள்ள மாணவர்கள் அனைவருக்கும் உயர்க்கல்வியை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்தில்தான் தனியார் கல்லூரிகளை அமைக்க நாம் தீர்மானித்தோம். அதற்கிணங்கவே சைட்டம் கல்லூரியும் அமைக்கப்பட்டது.

சைட்டம் மருத்துவ கல்லரிக்கு அனுமதி வழங்குவதற்காக பல்கலைக்கழக பிடாதிபதிகள் 8 பேர் உள்ளிட்ட குழுவொன்று அமைக்கப்பட்டு ஆராய்ந்த பின்னரே அனுமதியும் வழங்கப்பட்டது.ஆனால், தற்போது இதற்கு எதிர்ப்பு வெளியிடுவது தான் ஏனென்றே தெரியவில்லை. எதிர்ப்பு வெளியிடுவோர்களில் சிலர் இன்றும் பல்கலைக்கழகங்களில் உள்ளனர். அவர்களில் சிலர் சைட்டத்தில் விரிவுரைகளையும் நடத்தியுள்ளனர்.

மருத்துவ சங்கத்தின் பதிவாளரான டெரன்ஸ் சில்வாவின் பிள்ளையும் சைட்டத்தில் தான் கல்வி கற்றார். 4 ஆவது ஆண்டு மாணவர்கள் தொடர்பில் வர்த்தமானி வெளியிட முடியாமல் போனபோது, அவர் எப்படியாவது வர்த்தமானியை வெளியிடுமாறும் எமக்கு கூறினார்.

அதை நாம் செய்யாமல் இருக்கவே, தனது பிள்ளையை மருத்துவ விடுமுறை எடுக்க வைத்து, அடுத்த வருடத்தில் பதிவு செய்ய சொல்லியுள்ளார். எனினும் விருந்துபசாரத்தின் போது அவரது பிள்ளை நன்றாக நடனமாடியதைப் பார்த்த ஏனைய மாணவர்கள், நாங்களும் மருத்துவ விடுமுறை எடுத்து அடுத்த வருடம் முதல் பதிவு செய்யட்டுமா? என்று நிர்வாகத்திடம் கேள்வியெழுப்பினர்.

அதனையடுத்து, மருத்துவ குழுவுக்கு முன்னால் ஆஜராகுமாறு டெரன்ஸ் சில்வாவின பிள்ளைக்கு அழைப்பு விடுக்கப்பட்து. அதற்கு அவர் தனது பிள்ளையை அனுப்பாத காரணத்தினால், அவரின் பிள்ளையின் பதிவும் இரத்தானது. இந்த ஒரு கோபத்தினால் தான் தற்போது சைட்டம் வேண்டாம் என்கிறார்கள்.

மேலும், சைட்டம் அமைக்க 600 மில்லியன் வங்கிக் கடன் எடுக்க மஹிந்த ராஜபக்ஷ உதவி செய்தார். வெளிவிவகார அமைச்சருடன் சென்று அடிக்கல்லும் நாட்டினார். இப்படியிருக்கும்போது தற்போது அவரின் மூளைக்கு ஏதோ ஆகிவிட்ட காரணத்தினாலேயே திடீரென சைட்டத்தை எதிர்க்கிறார் என்று தெரிவித்தார்.

அதேநேரம் இதில் கலந்து கொண்டிருந்த அமைச்சர் லக்ஷமன் கிரியெல்ல,

ஐக்கிய தேசியக் கட்சிக் காலத்திலேயே இலவசக் கல்வி ஆரம்பிக்கப்பட்டது. எனவே, கல்வி தொடர்பில் எமக்கு யாரும் கற்றுத் தரத் தேவையில்லை. சைட்டம் கல்லூரி தொடர்பில் நீதிமன்றம் அளித்த தீர்ப்பினை எம்மால் மாற்ற முடியாது. தேவையேற்படின் ஆந்த தீர்ப்பு தொடர்பில் மேன்முறையீடு செய்ய முடியும்.

அத்தோடு, இந்த வருடத்துக்குள் இரண்டு வைத்திய கல்லூரிகளை அமைக்கவும் நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். வடமேல் மற்றும் சப்பிரகமுவ மாகாணத்தில் தான் இந்த அரச மருத்துவக் கல்லூரிகள் அமைக்கப்படும் என்றார்.

## சைடமை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

முயற்சியில் ஈடுபட்டு வருவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் நவீன் டீ சொய்சா தெரிவித்தார்.

சைடம் தொடர்பாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் நவமணி வார இதழுக்கு நேர்காணலொன்றை வழங்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ காலத்தில் தனக்கு அச்சுறுத்தல் இருப்பதாக கூறி சைடம் குறித்து வாய் திறக்காத அமைச்சர் ராஜித, இந்த அரசாங்கத்தில் சகல அதிகாரங்களையும் தன்னகத்தே கொண்டும் சைடம் குறித்து மௌனம் சாதிப்பது நாட்டு மக்களுக்கு செய்யும் அநீதியாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாம் எவ்வித சுய இலாபத்தையும் எதிர்பார்த்து சைடமுக்கு எதிராக போராடவில்லை. நாட்டு மக்கள், நோயாளர்கள், சுகாதார, மருத்துவ துறையின் எதிர்காலம் குறித்து சிந்தித்தே இதற்கெதிராக போராடி வருகின்றோம். பல அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகள் நாம் சைடமை எதிர்ப்பதில் உள்ள நியாயங்களை கண்டு எமக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். சுகாதார அமைச்சர் ஸ்ரீ லங்கா மருத்துவ சபையின் அறிக்கையை நீதிமன்றத்தில் மற்றும் உயர் கல்வியமைச்சில் சமர்ப்பித்திருப்பின் சைடமுக்கு நீதிமன்ற அங்கீகாரம் கிடைத்திருக்காது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சுகாதார அமைச்சராக இருக்கும்போதும் சைடமுக்கு அங்கீகாரம் வழங்கவில்லை. நாட்டின் எதிர்காலம் குறித்து சிந்தித்து சைடம் தொடர்பான தீர்க்கமான முடிவெடுக்க ஜனாதிபதி சுகாதார அமைச்சருக்கு அறிவுறுத்த வேண்டும்.

# Sports
## விளையாட்டுச் செய்திகள்

## டி20 போட்டியில் 300 ஓட்டங்கள்



இந்தியாவின் முதற்தர கிரிக்கெட் போட்டிகளில் விளையாடிவரும் டெல்லி வீரரான மோஹித் ஆலாவத், இருபது-20 போட்டியொன்றில் தனியொருவராக 300 ஓட்டங்களை விளாசி சாதனை படைத்துள்ளார். டெல்லி, லலிதா பார்க்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்தப் போட்டியில், 21 வயதே நிரம்பிய மோஹித் 72 பந்துகளில் 300 ஓட்டங்களைப் பெற்றார். இதில் 14 நான்கு ஓட்டங்களும் 39 ஆறு ஓட்டங்களும் அடங்கும். இந்த அபார ஆட்டத்தால், டி20 போட்டியொன்றில் மூன்று சதங்களை விளாசிய முதல் வீரர் என்ற பெருமையையும் மோஹித் பெற்றுள்ளார். விக்கெட் காப்பாளரான மோஹித்தின் பங்களிப்புடன் அவரது அணி இரண்டு விக்கெட் இழப்புக்கு 416 ஓட்டங்களைக் குவித்தது. இந்தப் போட்டியில் எதிரணியினர் 200 ஓட்டங்களுக்கு சுருண்டனர்.

முதற்தரப் போட்டிகளைப் பொறுத்தவரையில், ஐபிஎல் போட்டியொன்றில் கிறிஸ் கெய்ல் விளாசிய 175 ஓட்டங்களே தனியொரு வீரரின் அதிகபட்ச ஓட்டங்களாகப் பதிவாகியுள்ளது. சர்வதேச கிரிக்கெட்டில் இங்கிலாந்துக்கு எதிரான டி20 போட்டியில் அவுஸ்திரேலிய வீரர் ஆரோன் பின்ஞ்ச் 63 பந்துகளில் 156 ஓட்டங்களை எடுத்ததே அதிகபட்ச ஓட்டமாகும். இதற்கு முன் இலங்கையைச் சேர்ந்த தனுக பதிரன இங்கிலாந்தின் லங்காஷைரில் நடைபெற்ற உள்ளூர் லீக் போட்டியில் 72 பந்தில் 277 ஓட்டங்களை குவித்ததே உலக சாதனையாக இருந்தது.

## தரங்கவின் அதிரடி வீண் போராடி தோற்றது இலங்கை

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணிக்கும் தென்னாபிரிக்க அணிக்கும் இடையில் கேப்டவுனில் நேற்றுமுன்தினம் (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற 4ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி 40 ஓட்டங்களால் போராடித் தோற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி, 50 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட் இழப்பிற்கு 367 ஓட்டங்களை பெற்றது. துடுப்பாட்டத்தில் தென்னாபிரிக்க அணி சார்பில் டு பிளிசிஸ் அதிகபட்சமாக 185 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்து அணிக்கு பலம் சேர்த்திருந்தார். பந்துவீச்சில் இலங்கை சார்பாக லஹிரு குமார மற்றும் சச்சித் பத்திர தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.



இதையடுத்து பதிலுக்கு 367 என்ற கடின இலக்கை விரட்டுவதற்கு ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக நிரோஷன் திக்வெல்ல மற்றும் உபுல் தரங்க களமிறங்கினர். இருவரும் ஆரம்பம் முதலே அதிரடி காட்ட, இலங்கை அணியின் ஓட்டம் மளமளவென உயர்ந்தது. இதனால் இலங்கை அணி 58 பந்தில் முதல் விக்கெட்டுக்கு 100 ஓட்டங்கள் எடுத்து விக்கெட் இழப்பின்றி அருமையாக விளையாடி வந்தது. எனினும், 139 ஓட்டங்கள் எடுத்த போது அரைச்சதம் கடந்த திக்வெல்ல 58 ஓட்டங்களில் துரதிஷ்டவசமாக ஆட்டமிழந்தார். அடுத்து வந்த மெண்டிஸ் தன் பங்கிற்கு 29, அறிமுக வீரர் சந்துன் வீரக்கொடி 58 ஓட்டங்களை எடுத்து வெளியேறினர். இதனால் இலங்கை அணி வெற்றி பெறுவதற்கு அருமையான வாய்ப்புகள் இருந்தன. இருப்பினும் அடுத்து வந்த வீரர்கள் சில்வா 5, குணரத்னே 38 ஓட்டங்கள் என வெளியேற இலங்கை அணி சற்றுத்தடுமாறியது. அடுத்து வந்த வீரர்கள் அனைவரும் ஒற்றை இலக்கங்களில் ஆட்டமிழக்க இதனால் இலங்கை அணி வெற்றி பெற வேண்டிய போட்டியில் பின்வரிசை வீரர்களின் மோசமான துடுப்பாட்டம் காரணமாக 48.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 327 ஓட்டங்கள் எடுத்து 40 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியைச் சந்தித்தது. இலங்கை அணி சார்பில் அதிகபட்சமாக அணியின் தலைவர் உபுல் தரங்க 119 ஓட்டங்களைக் குவித்து அசத்தினார். இது தரங்கவின் 14ஆவது ஒருநாள் சதமாகும். தென்னாபிரிக்க அணி சார்பாக சிறப்பாக பந்துவீசிய வெய்ன் பார்னெல் 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இதன் மூலம் 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரை தென்னாபிரிக்கா அணி 4-0 என்ற கணக்கில் வென்று அசத்தியுள்ளது. ஆட்ட நாயகனாக மைதானத்தில் வானவேடிக்கை நிகழ்த்திய டூபிலிசிசுக்கு வழங்கப்பட்டது. ஐந்தாவதும், இறுதியுமான போட்டி எதிர்வரும் 10ஆம் திகதி செஞ்சூரியனில் நடைபெறவுள்ளது.

### மகளிர் உலகக்கிண்ண தகுதிகாண் போட்டிகள்:
## பிரியதர்ஷனியின் அபார பந்துவீச்சு இலங்கை மகளிருக்கு வெற்றி



பீ.எப்.எம் நிஷாட்

கொழும்பில் நடைபெற்றுவரும் பத்து நாடுகளுக்கு இடையிலான மகளிர் உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகளின் 2ஆவதுநாளான நேற்றைய தினம் இலங்கை, இந்தியா, தென்னாபிரிக்கா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் தத்தமது போட்டிகளில் வெற்றி பெற்றன.

கொழும்பு என்.சி.சி மைதானத்தில் நடைபெற்ற குழு ஏ போட்டியில் அயர்லாந்து மகளிர் அணியை எதிர்த்தாடிய இலங்கை மகளிர் அணி 146 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்த இலங்கை மகளிர் அணி ப்ரஷாதனி வீரக்கொடி மற்றும் டிலானி மனோதராவின் அரைச் சதங்களின் உதவியுடன் 50 ஓவர்களில் 8 விக்கெட்களை மாத்திரம் இழந்து 239 ஓட்டங்களைக் குவித்தது.

பந்துவீச்சில் அயர்லாந்து மகளிர் அணி சார்பாக இசோபல் ஜொய்ஸ் 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு துடுப்பெத்தாடிய அயர்லாந்து மகளிர் அணி, இலங்கை அணியின் பந்துவீச்சுக்கு முகங்கொடுக்க முடியாமல் ஆரம்பம் முதலே தடுமாறியது. இதன்படி 50 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களை இழந்து 93 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது. பந்துவீச்சில் இலங்கை சார்பாக, உதேஷிகா ப்ரபோதினி 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இதேவேளை, பி பிரிவில் தென்னாபிரிக்க மற்றும் ஸ்கொட்லாந்து மகளிர் அணிகளுக்கிடையிலான போட்டி கொழும்பு எம்.சி.ஏ மைதானத்தில் நடைபெற்றது. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ஸ்கொட்லாந்து மகளிர் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. இதற்கமைய நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 142 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. பதிலுக்கு துடுபெடுத்தாடிய தென்னாபிரிக்க மகளிர் அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 143 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது. இதனிடையே, ஏ பிரிவின் இந்தியா மற்றும் தாய்லாந்து மகளிர் அணிகளுக்கிடையே கொழும்பு சி.சிமைதானத்தில் இடம்பெற்ற போட்டியில் இந்திய மகளிர் அணி 9 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற தாய்லாந்து மகளிர் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி, முதலில் துடுப்பாடிய தாய்லாந்து அணி, நிர்ணயிக்கப்பட்ட 29 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 55 ஓட்டங்களுக்கு சுருண்டது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இந்திய மகளிர் அணி 13 ஓவர்களில் ஒரு விக்கெட்டினை மாத்திரம் இழந்து 59 ஓட்டங்களைப் பெற்று போட்டித் தொடரில் 2ஆவது வெற்றியைப் பதிவு செய்தது.



கம்பளை சாஹிரா கல்லூரி பழைய மாணவர் கிரிக்கெட் அணியின் கண்காட்சி கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் பங்குபற்றிய வீரர்களையும் வெற்றி பெற்றவர்களுக்கு கிரிக்கெட் உபகரணங்கள் வழங்கப்படுவதையும் அருகில் கல்லூரியின் அபிவிருத்தி சங்க செயலாளர் எம்.என்.எம். ஆசிக் நிற்பதையும் இங்கு காணலாம்.
(படம் : கம்பளை நிருபர் எம்.எம்.எம். ரம்ஸீன் )

### ஆசிய சம்மேளனக் கிண்ண கால்பந்தாட்டம்:
## கலம்போ எவ்.சியை வீழ்த்தி மோஹன் பகான் வெற்றி



பீ.எப்.எம் நிஷாட்

ஆசிய சம்மேளனக் கிண்ண கழகங்களுக்கிடையிலான கால்பந்தாட்டத்தின் தகுதிகாண் போட்டியின் இரண்டாம் கட்டப் போட்டியிலும் இலங்கையின் கலம்போ எவ்.சி கழகம் 2க்கு 1 என்ற கோல்கள் அடிப்படையில் இந்தியாவின் பிரபல கால்பந்து கழகமான மோகன் பகான் கழகத்திடம் தோல்வியைத் தழுவியது.

கொழும்பில் நடைபெற்ற முதல் கட்ட போட்டியில் மோஹன் பகன் அணி 2-1 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றது. இந்நிலையில், கொல்கத்தா ரபீந்திர சரோபர் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இரண்டாம் கட்ட போட்டியிலும் பெற்ற வெற்றியின் மூலம் மோஹன் பகன் அணி 4-2 என்ற கோல்கள் கணக்கில் போட்டியை வென்றது.

போட்டியை வெல்வதற்கு 2 மேலதிக கோல்களுடன் இரண்டாம் கட்ட போட்டியை வெல்ல வேண்டும் என்ற நிலையில் விளையாடிய கலம்போ கழகம், முதல் 20 நிமிடங்கள் மோஹன் பகான் அணிக்கு அழுத்தம் கொடுத்து விளையாடியது. எனினும் மோஹன் பகன் அணி சிறப்பாக விளையாடி போட்டியை தன் பக்கம் ஈர்த்தது. இதன்படி, மோகன் பகன் அணி, 28ஆவது நிமிடத்தில் சோனி மூலமாக முதலாவது கோலை சோனி அடித்தார். இதன்காரணமாக முதல்பாதியில் மோகன் பகான் கழகம் 1க்கு 0 என முன்னிலை பெற்றது. இரண்டாவது பாதியிலும் மீண்டும் ஒரு முறை சோனி தனது சிறப்பான ஆட்டத்தின் மூலம் கோல் ஒன்றைப் பெற்றுக்கொண்டார். ஆனால் கலம்போ எவ்.சி அணியின் கோல் அடிக்கும் முயற்சிகள் தொடர்ந்து முறியடிக்கப்பட்டன. எனினும், போட்டி நிறைவடைய 2 நிமிடங்கள் எஞ்சி இருக்கும் நிலையில் மொமாஸ் யாப்போ பல வீரர்களை ஏமாற்றி, சிறப்பாக பந்தை கொண்டு சென்று ஷில்ட்டன் போலை தாண்டி கோலிற்குள் பந்தை உதைந்தார். இறுதியில் 2க்கு 1 என்ற கோல்கள் கணக்கில் மோகன் பகான் கழகம் வெற்றிபெற்றது.

## 2ஆவது பாக். சுப்பர் லீக் இன்று டுபாயில் ஆரம்பம்



பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நடத்துகின்ற 2ஆவது பாகிஸ்தான் சுப்பர் லீக் 20க்கு 20 போட்டிகள் இன்று முதல் எதிர்வரும் மார்ச் 7ஆம் திகதி வரை ஐக்கிய அரபு எமிரேட்சில் நடைபெறவுள்ளது. இதன்படி ஆரம்ப சுற்று போட்டிகலிருந்து அரையிறுதிப் போட்டிகள் அனைத்தும் டுபாய் மற்றும் சார்ஜாவில் நடைபெறவுள்ள அதேசமயம், இறுதிப் போட்டி மாத்திரம் பாகிஸ்தானின் கடாபி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறவுள்ளன. 2009ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட இலங்கை அணி மீது தீவிரவாத தாக்குதல் நடத்தப்பட்டது. இதனையடுத்து எந்தவொரு வெளிநாட்டு அணியும் பாகிஸ்தானில் பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக சுற்றுப் பயணம் மேற்கொள்ளவில்லை. இந்நிலையில், முதற்தடவையாக வெளிநாட்டு வீரர்கள் பங்குபற்றுகின்ற போட்டியொன்றை நடத்தவும், அதில் வெளிநாட்டு வீரர்களை பங்குபற்றச் செய்யவும் அந்நாட்டு கிரிக்கெட் சபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இன்றைய தினம் பிரமாண்டமான ஆரம்ப நிகழ்ச்சியுடன் ஆரம்பமாகவுள்ள 2ஆவது பாகிஸ்தான் சுப்பர் லீக் போட்டியில், நடப்புச் சம்பியனான இஸ்லாமாபாத் யுனைடட் அணியும், பெஷாவர் சல்மி அணியும் போட்டியிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இலங்கை அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் குமார் சங்கக்கார, இம்முறை பாகிஸ்தான் சுப்பர் லீக்கில் முதற்தடவையாக விளையாடவுள்ளதுடன், கராச்சி கிங்ஸ் அணியின் தலைவராகவும் செயற்படவுள்ளார். அத்துடன் கடந்த வருடத்தைப் போல இவ்வருடமும் 5 அணிகள் பங்குபற்றவுள்ளதுடன், இதில் குமார் சங்கக்கார, மிஸ்பா உல் ஹக், டெரன் சமி, பிரெண்டன் மெக்கலம் மற்றும் சர்பிராஸ் அஹமட் ஆகிய வீரர்கள் தலைவர்களாக செயற்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இலங்கை அணியின் முன்னாள் வீரர்களான மஹேல ஜயவர்தன கராச்சி கிங்ஸ் அணியிலும், திலகரத்ன டில்ஷான் பெஷாவர் சல்மி அணிக்காகவும் விளையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



அக்கரைப்பற்று சேர் றாசிக் பரீட் வித்தியாலயத்தின் இல்ல விளையாட்டுப் போட்டி அதிபர் எஸ்.எல்.ஏ.றஹீம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது அதிபர் உரையாற்றுவதனையும், முதலாம் இடம்பெற்ற றூபி இல்ல அணியினருக்கு பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட அக்கரைப்பற்று பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஏ.ஜி.பஸ்மில் நினைவுச் சின்னம் வழங்குவதனையும், இரண்டாம் இடம்பெற்ற டயமண்ட் இல்ல அணியினருக்கு விசேட அதிதியாகக் கலந்து கொண்ட அக்கரைப்பற்று கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.இக்பால் நினைவுச் சின்னம் வழங்குவதனையும், மாணவர்களின் விநோத உடை நிகழ்வினையும், போட்டி நிகழ்ச்சியினையும் படங்களில் காணலாம்.( எம்.எல் சரீப்தீன்)

## குல்தீப் உள்ளே: மிஸ்ரா வெளியே

வங்கதேசத்துக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியிலிருந்து, காயம் காரணமாக அமித் மிஸ்ரா விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளார்.

அவருக்குப் பதிலாக, இளம் வீரரான குல்தீப் யாதவுக்கு வாய்ப்பு அளிக்கப் பட்டுள்ளது. இது அவர் பங்கேற்கும் முதல் டெஸ்ட் போட்டியாகும்.

இங்கிலாந்துக்கு எதிரான டி20 கிரிக்கெட் தொடரின்போது அமித் மிஸ்ராவுக்கு காயம் ஏற்பட்டது. எனினும், வங்கதேசத்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியிலும் அவர் விளையாடுவதாக இருந்தது.

இந்நிலையில், அவர் தொடர்ந்து மருத்துவ சோதனைக்கு உள்படுத்தப்பட வேண்டியுள்ளதால், வங்கதேசத்துக்கு எதிரான போட்டியில் இருந்து விலக்கிக் கொள்ளப்பட்டார். இதையடுத்து, உள்நாட்டுப் போட்டிகளில் உத்தரப் பிரதேச அணிக்காக விளையாடி வரும் குல்தீப் யாதவுக்கு அந்த வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. துலிப் டிராபி, ரஞ்சி டிராபி போட்டிகளில் குல்தீப் யாதவ் சிறப்பாக செயற்பட்டதை அடுத்து, அவருக்கு இந்த வாய்ப்பு வழங்கப் பட்டுள்ளது. குல்தீப், மொத்தம் 22 போட்டிகளில் 81 விக்கெட்டுகளை சாய்த்துள்ளார்.



ஹந்தஸ்ஸ, அல்- மனார் தேசிய பாடசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டிகளின் இறுதி நிகழ்வுகள் கடந்த 5ஆம் திகதி கல்லூரி மைதானத்தில் அதிபர் எம்.ஜே.எம். ஹிஜாஸ் தலைமையில் நடைபெற்றது. இதில் அக்பர், இக்பால் மற்றும் ஜின்னா ஆகிய இல்லங்களுக்கிடையிலான இந்த போட்டிகளில் ஜின்னா இல்லம் முதலாம் இடத்தையும், இக்பால் இல்லம் இரண்டாம் இடத்தையும் பெற்றதுடன் அக்பர் இல்லம் மூன்றாம் இடத்தை பெற்றுக்கொண்டது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் விவகார அமைச்சர் எம்.எச்.ஏ. ஹலீம், கௌரவ அதிதிகளாக கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான லகீ ஜயவர்தன மற்றும் எம். வேலுகுமார், சிறப்பதிதிகளாக மத்திய மாகாண சபை உறுப்பினர்காளான எம்.டி.எம். முத்தலிப், ஹிதாயத் சத்தார், ஏ.எம்.ஏ. மானெல் பண்டார மற்றும் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர் எம். நயீமுல்லாஹ் ஆகியோர் கலந்துகொண்டனர். இதேவேளை, பெண் மாணவிகளுக்கான பிரத்தியேகமான போட்டிகள் முதல் தடவையாக கடந்த 04 ஆம் திகதி இடம்பெற்றதுடன், இம்முறை உதைபந்தாட்ட போட்டியும் முதன்முறையாக ஆண் மாணவர்களுக்கு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (நுஸ்கி முக்தார்)

Printed and Published by Freelanka Media Ltd. #156, Hospital Road, Kalubowila, Dehiwala. on 09TH FEBRUARY 2017